விலை ரூபா: 14.00 (கொழும்பு விலை ரூபா: 17.00) பக்கங்கள்:-(16+08) Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

திருமணப் பட்டுப்
புடைவைகளின் கைராசியான
ஸ்தாபனம்
ரவி அன் ராஜ்
சில்க்ஸ்

77, பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்
T.P:- 021-2469

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 06 திங்கட்கிழமை (22.07.2002) தொலைபேசி 3378 ஒலி 215

# ஜனாதிபதியின் கைப்பையினுள் பிரதமரைக் கொல்ல வெடி குண்டு!

## அமைச்சர் ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு
## ஜனாதிபதி கடும் சீற்றம்-பிரதமர் மறுப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் கைப்பையினுள் வெடிகுண்டு இருக்கின்றதென்று அதனைப் பயன்படுத்தி பிரதமரைக் படுகொலை செய்ய ஜனாதிபதி முனைந்திருக்கின்றார் என்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியிருப்பதனால் அவரை அமைச்சரவையில் வைத்திருக்க முடியாதென்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே ஜனாதிபதி வெடிகுண்டு வைத்திருந்ததாக அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறியிருக்கின்றார். இது ஒரு அபந்தமான குற்றச்சாட்டு என்றும் ஜனாதிபதி அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்திற்குப் பதில் அளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியின் கைப்பையினுள் வெடிகுண்டு இருப்பதாக அமைச்சர் ரவி கருணாநாயக்க கூறவில்லை என்று மறுத்துள்ளார்.

ஆனால் கைப்பையினுள் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த வீடியோ மற்றும் ஒலிப்பதிவுக் கருவிகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு செயற்படுவதாக அமைச்சர் கூறினார் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் இது தொடர்பாக வெளி

(08ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப்புலிகளுக்கு அமோக வரவேற்பு

(அனலைதீவு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் பிரமுகர்களிற்கு நேற்று அனலைதீவில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் தலைமையில் சென்ற போராளிகளை இறங்குதுறையில் திரண்டிருந்த மக்கள் உற்சாகமாக வரவேற்று அழைத்து சென்றனர். அனலைதீவு கிராம சேவையாளர் தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தீவக அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன் அரசியல் பிரமுகர் அருந்தவம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (இ)

வலம்புரி + சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 17.00

## யுத்தம் முடியாத வரை படையினரை கொழும்புக்கு அழைக்க முடியாது

# சமாதான முயற்சி வெற்றி அளித்தால்

# முப்படைகளும் முகாம் திரும்பிவிடும்

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருத்து

(நமது நிருபர்)

**அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் சமாதான முயற்சிகள் அரைவாசி வழிக்கு வந்ததும் முப்படைகளும் தத்தம் முகாம்களுக்குத் திரும்பி விடுவார்கள். அவர்கள் ஒருபோதும் இங்கு நிரந்தரமாக இருக்க மாட்டார்கள்.**

தற்போது நடைபெற்றுவரும் சமாதான நடைமுறைகள் தொடர்ந்தும் நீடித்து இருக்க இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் மதித்து நடக்க வேண்டும்.

அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியேற்றம் என்பது அரசு விடுதலைப்புலிகள் பொது மக்கள் ஆகிய மூன்று தரப்பினரிடம் தொடர்பட்ட விடயமாகும். இவ்வாறு

களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களைய மீளக் குடியமர்த்துவது தொடர்பாக நேற்று முன்தினமும் நடத்தப்பட்ட உயர்மட்டப் பாதுகாப்பு மாநாட்டை அடுத்து பாதுகாப்பு

## 3வது நாளாக உண்ணாவிரதம் இருக்கும்

# களுத்துறைக் கைதிகளின் நிலை கவலைக்கிடம்

(களுத்துறை)

களுத்துறை சிறைச்சாலையில் இருந்து தம்மை விடுவிக்க கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும சிறைக் கைதிகளின் நிலை மூன்றாவது நாளான நேற்று கவலைக்கிடமாக இருந்ததாக தெரிவிக்

களுத்துறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள இந்த சிறைக் கைதிகளின் வடுதலை தொடர்பாக தமிழர் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை எனவும் கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கனுத்துறை சிறைச்சாலையில் இருந்து தம்மை விடுவிக்க கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும சிறைக் கைதிகளின் நிலை மூன்றாவது நாளான நேற்று கவலைக்கிடமாக இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

களின் வடுதலை தொடர்பாக தமிழர் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்கள் எந்த விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை எனவும் கைதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம)

தற்போது நடைபெற்றுவரும் சமாதான நடைமுறைகள் தொடர்ந்தும் நீடித்து இருக்க இரு பகுதியினரும் ஒருவரை ஒருவர் மதித்து நடக்க வேண்டும்.

அதி உயர் ப்ாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியேற்றம் என்பது அரசு விடுதலைப்புலிகள் பொது மக்கள் ஆகிய மூன்று தரப்பினரிடம் தொடர்புபட்ட விடயமாகும். இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்துள் துள்ளார்.

வலிகாமம் வடக்கிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயம் தென்மராட்சியிலுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயம் ஆகியவற்றின் அவ் விடங்களில் இருந்து இடம் பெயர்ந்த மக்களைய மீளக் குடியமர்த்துவது தொடர்பாக நேற்று முன்தினமும் நடத்தப்பட்ட உயர்மட்டப் பாதுகாப்பு மாநாட்டை அடுத்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ கொழும்பு திரும்பமுன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார் இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

வலிவடக்கிலும் தென்மராட்சியி

(08ம் பக்கம் பார்க்க)

# வன்னி மாணவர்களுக்கு சமாதானக் குழு

# வழங்கிய உடுப்புக்கள் பழுதடைந்தவையாம்!

## காலிக்கு திருப்பியனுப்ப நடவடிக்கை

(வவுனியா)

காலியில் இருந்து வன்னி மற்றும் யாழ்ப்பாணம் வந்திருந்த சமாதான யாத்திரை குழுவினரால் வன்னிப் பாடசாலை மாணவர்களுக்கு உடுப்புக்கள் பாவித்து பழுதடைந்த நிலையில் காணப்பட்டமையால் அவற்றை திருப்பியனுப்புவதற்கு வடபகுதி கல்விச் சமூகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடபகுதியில் யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கிய உடுப்புப் பொதியில் இருந்த பெரும்பாலான உடுப்புக்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால் இது தொடர்பாக வடபகுதி கல்விச் சமூகம் கவலை கொண்டுள்ளது.

பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தினா தலைமையில் வந்த சமாதானக் குழுவினரே இந்த ஆடைகளை அன்பளிப்புச் செய்திருந்தனர். பழுதான இந்த உடுப்புப் பொதிகள் வடக்குக் கிழக்கு கல்வி அமைச்சின் ஊடாக அனுப்பிவைக்கப்படவுள்ளது.

(ம)

# வை. கோவை விடுவிக்கக்கோரி

# கூட்டமைப்பு நாளை உண்ணாவிரதம்

## வவுனியா நகரசபையில் நடைபெறும்

(வவுனியா)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகப் பொதுச்செயலாளர் வை: கோபாலசாமியை விடுவிக்கக்கோரி வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்பில் அங்கம் வகிக்கும் போக்குவரத்து ஒன்றியம் வர்த்தக சமூகம் கல்விச் சமூகம் ஆகியன ஒன்றிணைந்து தமிழக அரசிற்கு மகஜர் ஒன்றை இன்று அனுப்பிவைக்கவுள்ளன.

(08ம் பக்கம் பார்க்க)

கையில் இருக்கும் நகைகளுக்கு
கச்சிதமான
கைமாற்று
ஹற்றன் நஷனல்
அடகு வைக்கும் வசதி

ஒரு பவுனுக்கு
ரூ. 5500/- அடகுப்பணம்!
மாதாந்த வட்டி
1.83% மட்டுமே!



- அதி கூடிய அடகுப்பணம்
- மிகக் குறைந்த வட்டி
- விரைவான சேவை
- தவணை முறையில் மாதாந்தம் மீளச் செலுத்தும் வசதி
- அடகு நகைகளுக்கு இலவச காப்புறுதி
- கணனி மூலம் மதிப்பீடு செய்யப்படுவதால் தங்க நகைகளுக்குச் சேதம் ஏற்படாது
- உயர் பாதுகாப்பும் கொடுக்கல் வாங்கல்களில் பூரண இரகசியமும் பேணப்படும்

மேலதிக விபரங்களுக்கு ஹற்றன் நஷனல் வங்கி யாழ் கிளையுடன் தொடர்பு கொள்ளவும்

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

[C/4634]

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு 1இல் இருந்து மேற்படிப்பு வரை சிறந்த ஆசிரியர்கள். வகுப்பில்சிறுதொகை மாணவர்களுடன், ஆங்கிலத்தில் கூடிய கவனமும்,, அனுமதிக்கு தலைமை ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி 426 (302) காங்கேயன்துறை வீதி, யாழ்ப்பாணம். (5715)

### தவறிவிட்டது

மல்லாகத்தைச்சேர்ந்த நாகமுத்து செபரத்தினம் என்பவருடைய கே. அ. அ (இல. 531 962 901X) மல்லாகத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (5716)

# முஸ்லிம்களின் விடயத்தில் புலிகள் முரண்பட்ட கருத்துக்கள் தெரிவிப்பு

## அமைச்சர் ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கிழக்கு பிராந்திய பொறுப்பாளர்கள் முஸ்லிம்களின்விடயத்தில் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர் என முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை பெரிய பள்ளிவாசலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமையவுள்ள இடைக்கால நிர்வாகசபையின்போது தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் அதிகார பகிர்வு ஏற்படும்போது கிழக்கு பிரதேசமுஸ்லிம்களின் பலம் மேலோங்கி விடும் என்ற அச்சம் காரணமாகவே இவர்கள் இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கின்றனர் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கண்காணிப்புக் குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக்கும் இடையே மீண்டும் யுத்தம் நடைபெறாது பார்த்துக் கொள்கிறார்களே தவிர, முஸ்லிம் மக்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அநீதிகள் குறித்து கவனம் செலுத்தவில்லை.

அதேநேரம், சமாதான பேச்சுவார்த்தைகளின் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மூன்றாம் தரப்பாக செயற்படுவதை தடுக்கும் நோக்குடன் சிலதீயசக்திகள் கட்சியினைபலவீனப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன.

தற்போது நாட்டில் நிலவி வரும் சமாதான பேச்சுவார்த்தைகளை குழப்பிவிட்டு, அதன் முழுப் பழிகளையும் தமது கட்சி மீது சுமத்தும்பணிகளில் சிலர் எத்தனித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறாக இருந்தபோதிலும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினை எவராலும் பலவீனப்படுத்தி விட முடியாது என அமைச்சர் உறுதியளித்துள்ளார். (ஷ- 8)

## திருமுறை மன்றத்தின் சோடசோபசார பூசை

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப் பாராயணம் என்பன நாளை மறுதினம் புதன் கிழமை காலை 8.00 மணியவில் கைதடி உக்கனை ஸ்ரீ விநாயகர் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளன.

பன்னிரு திருமுறைகளுக்கான விசேட பூசையாக சோடசோபசார பூசை அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல் பன்னிரு திருமுறைப்பாராயணம் சிறப்புச் சொற்பொழிவு ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (உ-8)

# ஹெலிகொப்ரர் விபத்தில் 12 பேர் பலியாகினர்

ரஷ்யாவின் தெற்குப்பகுதியில் இடம்பெற்ற இராணுவக் ஹெலிகொப்ரர்விபத்தில் 8 ரஷ்ய ராணுவத்தினர் உட்பட12பேர் பலியாகியுள்ளனர்.

பறந்துகொண்டிருந்த ஹெலிகொப்ரர் திடீரென ராடர் திரையிலிருந்து மறைந்ததாக ரஷ்யஇராணுவம் அறிவித்துள்ளது.

மேற்படி விபத்துக்கான காரணம் தெரியவில்லையெனவும் செச்செஸியத்தீவிரவாதிகள் இச்சம்பவத்திற்கு காரணமாக இருக்கலாம் எனவும் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் கருத்துவெளியிட்டுள்ளனர். (க-91)

# வை.கோ. கைதைக் கண்டித்து அம்பாறையில் நேற்று கண்டனக் கூட்டம்

(அம்பாறை)

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி கைதுசெய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்று அம்பாறை மாவட்டத்தில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அம்பாறைமாவட்ட திரௌபதி அம்மன்ஆலயமுன்றலில் நேற்று மாலை3.00மணிக்கு இக்கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திகா வடுவெல மாவட்ட தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தினை கிராமிய அபிவிருத்தி சங்கங்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்தது.

தமிழர்விடுதலைக் கூட்டமைப்பினர் வை.கோபாலசாமி கைது செய்துள்ளமை குறித்து கண்டனபொதுக்கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் பேரணிகளையும் நடத்திவருவது குறிப்பிடத்தக்கது. (க-8)

## விபத்தில் குடும்பப் பெண் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

பொற்பதிவீதியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தின்போது கால்முறிந்தநிலையில் குடும்பப்பெண் ஒருவர் யாழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

உரும்பிராய் ஒஸ்காவீதியைசேர்ந்த திருமதி சிவகுமாரன் ஜெகதீஸ்வரி (வயது51) என்பவரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருபவராவார். (க-2)

# சத்யசாயி சேவா நிலைய 35 வது ஆண்டுவிழா

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா நிலையத்தில் நாளை குருபூர்ணிமா தினமும், ஊனமுற்றோர் தினமும், நிலையத்தின் 35 ஆம் ஆண்டு நிறைவுவிழாவும் கொண்டாடப்படவுள்ளது.

இவ் விழாவில்நிலையத்தின் 35 ஆம் ஆண்டு நிறைவு மலர் மற்றும் ஒரே கடவுள் ஆகிய இரு நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

நூல்களின் ஆய்வுரையை வட பிராந்திய சாயி நிறுவனங்களின் உப தலைவரான ஸ்ரீ எஸ். ஆர். சரவணபவன் நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் அரச சட்டத்தரணியான எஸ். கனகரத்தினம் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (உ-77)

## மலேரியாவுக்கு இருவர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுமாவட்டமருத்துவமனையில் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டிருந்தஇருவர் மரணமடைந்துள்ளனர்.

மலேரியா நுளம்புகளை அழிக்கும் மருந்துகள் இன்மையால் மலேரியா நோயின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகவும்புரிந்துணர்வுஒப்பந்தம்ஏற்பட்டபின்னரும்கூட வன்னிப் பகுதிக்குபோதியளவு மருந்துவகைகள் அனுப்பி வைக்கப்படவில்லை எனவும் சம்பந்தப்பட்டோர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது. (வ-க)

# அமெரிக்க விஜயத்தின் போது பிரதமர் ரணிலிற்கு அதிஉச்ச பாதுகாப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வாஷிங்டன் சர்வதேச விமானநிலையத்தை சென்றடைந்தபோது அதிஉச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. பத்திரிகையாளர் எவரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை என பிரதமருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நேற்றுமுன்தினம் 5 நாள் விஜயமொன்றை மேற்கொண்டு அமெரிக்கா சென்ற பிரதமர் நேற்று மாலை வாஷிங்டன் சர்வதேச விமானநிலையத்தைப்போய்ச் சேர்ந்தார்.

அதேநேரம் நாளை மறுதினம் புதன்கிழமை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் உடனான சந்திப்பின்போது அரசியல், பொருளாதார விடயங்கள் குறித்தும் விடுதலைப் புலிகளுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்,அதனோடுதொடர்பாக மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறைகள்தொடர்பாக கலந்துரையாடப்படும் என பிரதமருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க- 08)

# சமுர்த்தி திட்டத்தின் கீழ் 450 கோடி சேமிப்பு

(கொழும்பு)

வறுமை ஒழிப்பு மற்றும் சேமிப்புத் திட்டங்களைஉள்ளடக்கிய சமுர்த்தி திட்டத்தின் கீழ் சென்ற வருடம் 449 கோடியே 70 இலட்சம் ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 980 சமுர்த்திவங்கிகள இதுவரை திறக்கப்பட்டுள்ளதுடன் 17 இலட்சத்து 6 ஆயிரத்து 63 குடும்பங்கள் பங்குதாரர்களாக சேர்ந்துள்ளனர் இதில் 61 வீதமானோர் பெண்களாவர்.

இதுவரை இவ் வங்கி சபைகளினால் 555 கோடியே 20 இலட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த வருடம் மட்டும் 2ஆயிரத்து 764 மில்லியன் ரூபாகடனாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ்வடக்கு-கிழக்குமாகாணத்தில்79வங்கிகள் திறப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (க-03)

# களுத்துறை கைதிகள் நேற்றும் உண்ணாவிரதம்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும்தமிழ் அரசியற்கைதிகளின் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டம் நேற்றைய தினமும் இரண்டாவது முறையாகத்தொடர்ந்துநடைபெற்றது.

களுத்துறைச் சிறைச்சாலையில் கடந்தகாலங்களில்ஸ்ரீலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட 206 தமிழ் அரசியல் கைதிகள் எதுவிதவிசாரணைகளுமின்றித் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் கடந்த மூன்றுமாத காலத்திற்கு முன்னரும் இதுமாதிரியான உண்ணா விரதப்போராட்டம் இடம் பெற்றபோதுஅமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவும் நீதித்துறை முக்கிய அதிகாரிகளும்முடித்து வைத்துகுறுகிய காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தனர்.

ஆனால்இன்றுவரை புதிதாக பதவியேற்ற அரசாங்கம் எந்த வித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லையென உண்ணாவிரதிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் 29 பேர் மாத்திரமே உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தினர். ஆனால் நேற்று 59 பேர் போராட்டத்தில் குதித்தனர். இவர்களில் 16 பேர் சிறைச் சாலைக் கூரைகளின் மேல் ஏறியிருந்து போராட்டத்தை மேற்கொண்டனர்.

அரசு நம்பத் தகுந்த நடவடிக்கை எடுக்கும்வரைசாகும் வரையான தமதுஉண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என சிறைக் கைதிகள் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர். (க-19)

# சலனசித்திரம் விசேட கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

'சலனசித்திரம்' யாழ்ப்பாணம் திரைக்கலைச் சங்கத்தின் திரைப்படத் தயாரிப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை வடமராட்சி, யாழ்ப்பாணம், தென்மராட்சி ஆகிய மூன்று பிரதேசக் கிளைகளிலும் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிக் கிளையின் கூட்டம் முற்பகல் 10-00 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்திலும், யாழ்.பிரதேசக்கிளைக் கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு யா/புனித மரியாள் வித்தியாலயத்திலும், வடமராட்சிக் கிளையின் கூட்டம் பிற்பகல் 3.30 மணிக்கு வை. கோ. தெரு வதிரி கரவெட்டியிலுள்ள மாவட்ட தலைமைச் செயலகத்திலும் நடைபெறவுள்ளன. (ஷ)

# ஜெயலத் வீரக்கொடியை விசாரணைக் குழு இன்று ஆஜராகுமாறு பணிப்பு

(கொழும்பு)

முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ஜெயலத் வீரக்கொடி இலஞ்ச ஊழல் ஆணைக்குழு முன்னிலையில் இன்று ஆஜராகுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

விமானப்படைத் தளபதியாக பதவி வகித்த காலத்தின்போது சொந்தப் பாவனைக்காக அதிநவீன ஆடம்பர கார் ஒன்று பல லட்ச ரூபா செலவில் கொள்வனவு செய்தார் என இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சுங்கத் தீர்வை இல்லாமல் 30 இலட்சம் ரூபா பெறுமதியான வாகனத்தை கொள்வனவு செய்வதற்கு மாத்திரமே முப்படைத் தளபதிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டது.

ஆனால், வீரக்கொடி 70 இலட்சம் ரூபாவை தனது வாகனங்களுக்காக செலவு செய்துள்ளார் என இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இலஞ்ச ஊழல் ஆணைக் குழு முன் ஆஜராகவேண்டியிருந்தபோதிலும், சுகவீனம் காரணமாக தன்னால் சமுகமளிக்க முடியாது இருப்பதாக மருத்துவ அறிக்கையினை இவர் அனுப்பிவைத்துள்ளது தெரிந்ததே. (க-08

# வீட்டுப் பாவனை பொருட்கள் வழங்கல்

(கொடிகாமம்)

'யுனிசெவ்' நிறுவனம் தெனமராட்சி கிழக்கு மக்களுக்கு வீட்டுப் பாவனைப் பொருட்களை வழங்கியுள்ளது.

இப் பகுதியிலுள்ள ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 4 அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கே மேற்படி பொருட்கள சாவகச்சேரி பிரதேச சபையில் வைத்து வழங்கப்பட்டன.

பிளாஸ்ரிக் வாளி, மண்வெட்டி, சவர்க்காரம், சமையல் பாத்திரங்கள் ஆகிய பொருட்கள் 70 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ஷ-256)

### ஜேர்மனியில் புகலிடம் தேடிய

# ஈழத் தமிழர்கள் இரவோடிரவாக நாடு கடத்தப்படுகின்றனர்

## திரும்பிய இளைஞர் மனப்புழுக்கம்

(தென்மராட்சி)

இலங்கையில் தற்போது சமாதான சகவாழ்வு நிலவி வருவதாகத் தெரிவித்து ஜேர்மனியில் புகலிடம் தேடிச் சென்ற தமிழர்கள் திடீர் திடீரென முன் அறிவித்தல் ஏதுமின்றி நாடுகடத்தப்பட்டு வருகின்றனர்.

என அண்மையில் ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கு நாடு கடத்தப்பட்ட யாழ்ப்பாணத்து இளைஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் குறிப்பிடுகையில் ஜேர்மனிக்கு 1990க்குப் பின்னர் சென்றவர்கள் இன்னமும் நிரந்தர வதிவிட அனுமதி வழங்கப்படாத நிலையிலேயே இருந்து வருகின்றனர். இத்தகையவர்கள் அங்கு சுதந்திரமாகத் தொழில் செய்யக் கூடிய அனுமதியற்ற நிலையிலும் விசாரணைகள் இன்னமும் ஆரம்பிக்கப்படாத நிலையிலும் இருக்கின்றனர். அதே சமயம் நிரந்தர வசிப்பிட அனுமதியில்லாதவர்களை ஜேர்மனிய பொலிஸார் இரவோடிரவாக அவர்களது வீட்டுக் கதவுகளைத் தட்டி நித்திரையிலிருந்து எழுப்பி விமான நிலையம் கொண்டு சென்று கொழும்புக்கு அனுப்பிவிடுகின்றனர்.

இவ்வாறு ஜேர்மனியில் புகலிடம் தேடிச் சென்ற தமிழர்கள் தமது நாடு கடத்தலுக்கான காரணங்கள் கூட எதுவும் தெரிவிக்கப்படாத நிலையிலேயே அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க இவ்விதம் நாடு கடத்தப்படும் தமிழர்களின் எதிர்கால வாழ்க்கையென் மேலும் கேள்விக் குறியாகவே அமைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார். (ஷ-77)

## ஆபாசப் போஸ்டர்களை தடை செய்ய சட்டமூலம்

(கொழும்பு)

சினிமாப்படங்களின் ஆபாசப் போஸ்டர்கள் பொது இடங்களில் ஒட்டப்படுவது நாடு முழுவதும் தடை செய்யப்படுமெனவும் இதற்கான சட்டமூலம் விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் நீதி அமைச்சர் லொக்கு பண்டார தெரிவித்துள்ளார்.

சினிமாப்படங்களின் ஆபாசப் போஸ்டர்கள் ஒட்டப்படுவது பல சீரழிவு நடவடிக்கைகளுக்கு வழிவகுப்பதாக உள்ளது என்றும் இதனை சட்டமூலம் தடுக்க வேண்டுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## அநுரா - மகிந்த முரண்பாடு வலுவடைகிறது

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் பௌஸிக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நடவடிக்கை எடுத்தமை தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ஷவுக்கும், அநுராபண்டார நாயக்காவுக்குமிடையே கருத்து முரண்பாடுகள் வலுவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் அமைச்சர் பௌஸிமீது நடவடிக்கை எடுக்க முன் ஜனாதிபதி சந்திரிகா அநுரா பண்டார நாயக்காவின் ஆலோசனையையே பெற்றிருந்தார். இதனாலேயே பௌஸி நீதிமன்றம் செல்ல நேரிட்டது என்று மகிந்தராஜபக்ஷ அநுராமீது குற்றம்சாட்டியுள்ளார். (வ)

## இலஞ்சம் கொடுக்கமுற்பட்ட யாழ். வர்த்தகர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள பிரபல வர்த்தக நிறுவனம் ஒன்றின் உரிமையாளர், நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

கடையில் பொருட்களின் விலைப்பட்டியல் காட்சிக்கு வைக்கப்படாதது குறித்து பொலிஸார் விசாரித்தபோது கடை உரிமையாளர் பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்டார். இதனை அடுத்து பொலிஸார் அவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

எதிர்வரும் 24 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றநீதிவான் இ.த. விக்கினராஜா உத்தரவிட்டார். (த-6)

## முறிகண்டி ஆலயப் பகுதியில் மீன் விற்பனை

### பக்தர்கள் அதிருப்தி

(தென்மராட்சி)

முறிகண்டிப் பிள்ளையார் ஆலயப்பகுதியில் மீன் விற்கப்பட்டு வருவது குறித்து ஆலயத்தில் வழிபடுவோர் மத்தியில் பெரும்அதிருப்திதெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயப் பகுதி புனிதமானதாகக் கருதப்படுகின்றபோதிலும் அங்கு சைக்கிளில் மீன் விற்பனை செய்வோர் தம் மிஷ்டப் பிரகாரம் மீன் விற்பனையில் ஈடுபட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

### வை. கோ. கைது

## வெகுஜன அமைப்புகள் கண்டனத் தீர்மானம்

(மந்திகை)

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.பாடோசட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதைக் கண்டித்து வடமராட்சிவெகுஜனஅமைப்புக்களின் ஒன்றியம் மாதாந்தக்கூட்டத்தில் தீர்மானம் இயற்றியுள்ளது.

இது குறித்து ஒன்றியம் பத்திரிகைச் செய்திஒன்றினையும் விடுத்துள்ளது.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

நோர்வே அரசின் அனுசரணையுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், தமிழீழ தேசிய தலைவர் வே.பிரபாகரனும் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் தமிழ் மக்களுடைய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு கிடைக்கும் என்று நம்பிஇருக்கின்ற இந்த வேளையில் வை.கோவின் கைது மிகவும் கண்டனத்திற்குரியது.

ஈழ மக்களும், உலகத் தமிழினமும் தேசியத் தலைவராக ஏற்றுக்கொண்ட தலைவர் வே.பிரபாகரனின் சமாதான முயற்சியை முறியடிக்க வேண்டும் என்ற உள்நோக்குடன் வை.கோவின் கைது ஒரு அரசியல் பழிவாங்கல் என்றே கருதுகின்றோம்.

இலங்கை அரசே முன்வந்து புலிகளின் தடையை நீக்க இருக்கும் இவ்வேளையில் வை.கோவின் கைது ஈழத் தமிழ்மக்களுக்கு சொல்லொணாத துயர் விளைவிப்பதாகும்.

உலகத்தமிழர்எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சென்று ஈழத் தமிழர் படும் அவலங்களுக்காக குரல் கொடுத்த உத்தமர் வை.கோ என எமது ஒன்றியம்கருதுகின்றது.

எனவே இவ்விடயத்தில்இந்திய மத்திய அரசு உடன்தலையிட்டு அவரின் விடுதலைக்கு ஆவன செய்ய வேண்டுமென ஈழத் தமிழர் சார்பில் வடமராட்சி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது] என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-23)

# பொருட்கள் இறக்கும் இடத்தில் வாகனங்கள் தரிப்பது பெரும் சிரமம்

### யாழ் மாநகர முதல்வரிடம் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

லொறிகளில் இருந்து பொருட்கள் இறக்கும் இடத்தில் சைக்கிள், மற்றும் வாகனங்கள் தரித்து நிற்பதனால் பொருட்களை இறக்கி தம் வர்த்தக நிலையங்களுக்கு கொண்டு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக யாழ். வணிகர் கழகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்

யாழ். மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையனுடன் வணிகர் கழகத்தினர் அண்மையில் நடத்திய சந்திப்பின் போதே மேற் கண்டவிடயம் வலியுறுத்தப்பட்டது.

இதுவிடயம் தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது;

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலேயே மேற் கூறப்பட்ட இடர்பாடுகளை வர்த்தகர்கள் எதிர் கொள்ள நேரிடுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் யாழ். நவீன சந்தை கடைகளுக்கு 200% வாடகையை மாநகர சபை விதித்துள்ளது. இவ்வாடகையை குறைக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுவிடயம் குறித்து சாதகமான முறையில் நடவடிக்கை எடுப்பதாக மாநகர முதல்வர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-06)

### மணல் வெளி அரங்கு அறிமுக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதனின் 'மணல்வெளி அரங்கு' சிறுகதைத் தொகுதி அறிமுக அரங்கும் சு.உதயசீலனின் 'நாம்வாழ' நாடக அரங்கும் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் இ.பரா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூலுக்கான அறிமுகவுரையை க. வே. பாலகுமாரும், ஆய்வுரையை யோ.செ.யோகியும் நிகழ்த்தவுள்ளனர்.

பொன் தியாகம் ஈகச்சுடரை ஏற்றிவைக்க, வி. அருளாளன் வரவேற்புரையையும் க.சரவணபவான் தொடக்கவுரையையும் ஆற்றவுள்ளனர். (ஷ)

## தனியார் பஸ் உரிமையாளர் பயணக் கட்டணங்களை குறைக்க உடன்பாடு

(கொழும்பு)

பெற்றோலிய பொருட்களின் விலைக் குறைப்பு காரணமாக தனியார் பஸ் உரிமையாளர்கள், பயணக் கட்டணங்களை குறைப்பதற்கு உடன்பட்டுள்ளனர்.

அண்மையில் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணநாயக்கா தலைமையிலான குழுவொன்றுக்கும், தனியார் பஸ் உரிமையாளர் குழுவொன்றுக்கும் இடையில் நடத்தப்பட்ட பேச்சு வார்த்தைகளின் அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அரசாங்கம் பெற்றோல், டீசல் போன்ற பெற்றோலியப் பொருள்களின் விலைகளை குறைப்பு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## வேகமாகச் சென்ற லொறி மோதியதில் சிறுமி பலி

(கொழும்பு)

வீதியால் சென்று கொண்டிருந்த தாயையும் மகளையும் வேகமாகச் சென்ற லொறி மோதியதில் மகள் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதுடன் படுகாயமடைந்த தாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் கட்டுப் பெத்தை வத்துக்கரை சந்தியில் அண்மையில் இடம்பெற்றது.

மாதம்பை நோக்கிச் சென்ற லொறியே இவ்வாறு மோதியதாகவும் ஆத்திரமடைந்த மக்கள் லொறியின் சாரதியையும் கிளினரையும் தாக்கியதுடன் கால்களையும் முறித்துவிட்டதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### தாக்குதலில் ஈடுபட்ட

## நாலந்தா மாணவர்கள் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

பொறளையிலுள்ள டீ.எஸ். சேனநாயக்கவித்தியாலயத்தை சூழ்ந்து கொண்ட நாலந்தா கல்லூரி மாணவர்கள் 'சில்' அனுஷ்டித்துக்கொண்டிருந்த மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

டீ. எஸ். சேனநாயக்கா கல்லூரியினுள் அத்துமீறி பிரவேசித்து தாகுக்குதல்களில் ஈடுபட்ட 11 நாலந்தா கல்லூரி மாணவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.00 மணியளவில் சுமார் 200 மாணவர்கள் அங்கு கூடி தாக்குதலை நடத்தியதாகவும், சேனநாயக்கா கல்லூரி மாணவர்களும் திருப்பித்தாக்கவே நிலைமை மோசமடைந்ததாகவும் கறுவாக்காட்டு பொலிஸார் தெரிவித்தனர்;

பாடசாலை பஸ் ஒன்றினுள் மாணவர்கள் நிர்ப்பத்தமாக பணம் திரட்டியதால் எழுந்த சச்சரவே இதற்கு காரணம் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஷ)

### நியாப் திட்டத்தின் கீழ்

# 600 மில்லியன் ரூபா செலவில் வட-கிழக்கில் 10வேலைத்திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் நிதி உதவியுடன் நியாப் திட்டத்தின் கீழ் வடக்கு-கிழக்கில் 600மில்லியன் ரூபா செலவில் 10 வேலைத் திட்டங்கள் இவ்வாண்டு முன்னெடுக்கப்படவுள்ளன.

வீடமைப்பு, சிறுநீர்ப்பாசனம், குடிநீர்வசதி, கிராமிய வீதிகள் புனரமைப்பு, சமூக அபிவிருத்தி ஆகிய திட்டங்கள் இவற்றில் அடங்கும்.

3 கட்டங்களாக முன்னெடுக்கப்படும் இத் திட்டங்கள் முதல் கட்டமாக 48 கிராமங்களிலும், இரண்டாவது கட்டமாக 80 கிராமங்களிலும், மூன்றாவது கட்டமாக 125 கிராமங்களிலும் அமுல்படுத்தப்படவுள்ளன.

இதேவேளை, அடுத்தஆண்டிற்கான வேலைத் திட்டங்களின் முன் மொழிவுகள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ)

# செய்தித்துளிகள்

## நிர்வாகசபை தெரிவு

(மந்திகை)

இன்பருட்டி சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

தலைவராக ம. நந்தகுமார், செயலாளராக க. சூரியகுமாரன், பொருளாளராக இரா. வேலும் மயிலும் ஆகியோரும் மற்றும் ஆறு நிர்வாக சபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

(ஷ-23)

## கல்வி உபகரணங்கள் வழங்கல்

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக் குழுவினால் வடமராட்சி, தென்மராட்சி பிரதேசங்களில் நடத்தப்பட்டு வருகின்ற அறவழி முன்பள்ளிகளுக்கு கல்வி உபகரணங்களும் மழலைகளுக்கான விளையாட்டுஉபகரணங்களும் எதிர்வரும் 27 ஆம் திகதி வழங்கப்படவுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினால் அறவழிப் போராட்டக் குழுவுக்கு இப்பொருட்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (உ-77)

## கட்டாக்காலிகள் கட்டிவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரப் பகுதிக்குள் கட்டாக் காலிகளாகத் திரிந்த பொழுது பிடிக்கப்பட்ட ஆடு, மாடுகள் யாழ். மாநகரசபையில் சட்டிவைக்கப்பட்டுள்ளதாகவும்,

இரு வாரங்களில் உரியவர்கள் அவற்றைப் பொறுப்பேற்கத் தவறுமிடத்து, சட்ட விதிகளுக்கமைய அவை ஏலத்தில் விடப்படும் எனவும் முதல்வர் ஸெஸ் சந்தையன் அறிவித்துள்ளார். (உ-2)

## பத்திரிகை பயிற்சிநெறி முடிவுகள் விரைவில்

(யாழ்ப்பாணம்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவினால் நடத்தப்பட்ட பத்திரிகையாளர் பயிற்சி நெறியின் இறுதிப் பரீட்சை முடிவுகள் விரைவில் வெளியிடப்பட்டு சித்தியடைந்தவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இந் நிகழ்வோடு பயிற்சியாளர்களால் தயாரிக்கப்பட்ட கையெழுத்துச் சஞ்சிகைகளின் கண்காட்சியும் ஒன்றுகூடலும் இடம்பெற இருப்பதாக சங்கச் செயலாளர் இ. மயில்வாகனம் தெரிவித்தார்.

(ஷ)

## மது அருந்திய நால்வர் நீதிமன்றில்ஆஜர்

(மந்திகை)

சட்ட விரோதமாக விற்பனை செய்யப்பட்ட மதுவை அருந்திய நால்வரை பருத்தித்துறை நீதிமன்றம் இருவசரம் நன்நடத்தை பிணைமுறிவில்செல்ல அனுமதித்தது.

பருத்தித்துறை 2ஆம் குறுக்குத் தெருவில் உள்ள ஆட்களில்லாத வீடுகளில் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யும் மதுபானங்களைதேடிஅழிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசார் இவர்களை கைது செய்தனர்.

பின்னர் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். சட்ட விரோதமாக விற்பனை செய்யும் இடங்களில் மது அருந்தக் கூடாது என எச்சரிக்கை செய்தபின்னர் அவர்கள் நன்நடத்தை பிணைமுறிவில் விடுவிக்கப்பட்டனர்.

(உ-5,23)

## விபத்தில் சகோதரர்கள் காயம்

(மந்திகை)

வேகமாகச் சென்ற மோட்டார் சைக்கிளுடன் எதிரே வந்த ரக்வண்டி மோதிவிபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் காயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உடுப்பிட்டி நவிண்டில் பகுதியில் நடைபெற்ற இந்த விபத்தில் கம்பர் மலையை சேர்ந்த சகோதரர்களான தவராசா சுஜாதா(வயது 19) தவராசா ராஜன், வயது 26) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

(உ-23)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் கட்டுநாயக்கா தொழிநுட்பவள பயிற்சி நிறுவகத்தினால், எந்திரவியல் விஞ்ஞானத்திலான தேசிய டிப்ளோமா பாடநெறிகளுக்கான இடை வருகை விரிவுரையாளர்கள் மற்றும் போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை பணிப்பாளர் தொழில் நுட்பவலர் பயிற்சி நிறுவகம், கோயில் வீதி, கட்டுநாயக்க என்ற விலாசத்திற்கு ஆகஸ்ட் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னராக அனுப்பிவைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

## சத்துணவு தயாரிப்பு

(தென்மராட்சி)

பருத்தித்துறையிலுள்ள, வடமராட்சி உழைக்கும் மகளிர் நிறுவனம் ஊட்டச் சத்துக் குறைவானபிள்ளைகள், கர்ப்பிணித்தாய்மார் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு வேண்டியசத்துணவைத் தயாரித்து விற்பனை செய்யவென அரைக்கும் யந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்துள்ளது.

இந்தஇயந்திரம் மூலம் தயாரிக்கப்படும் சத்துணவை இன்னமும் சில வாரங்களில் பெற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-77)

## கணித விஞ்ஞான தினம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்தில் கணித, விஞ்ஞான தினம் இன்று காலை 9 30 மணிக்கு அதிபர் எஸ். சண்முககுமார் தலைமையில் நடைபெறவுள்ளது

நிகழ்வில் பிரதம விருந்தினராக கே. விவேகானந்தன் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் விஞ்ஞான கணித உபகரணப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கலும் இடம்பெறவுள்ளது. (உ)

## தாய்மார் அதிருப்தி

(கொடிகாமம்)

கொடிகாமம் தாய்சேய் சிகிச்சை நிலையத்தில் போதிய கவனிப்புகள் இல்லையென அங்கு செல்வோர் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

கர்ப்பிணித் தாய்மார்மற்றும் குழந்தைகள் உரியமுறையில் பரிசோதிக்கப்படுவதில்லை எனவும், வேண்டிய மருந்துகள் வழங்கப்படுவதில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(உ-256)

# காரைநகருக்கு குடிநீர் வழங்கும் பூர்வாங்க வேலைகள் ஆரம்பம்

## பொறியியலாளர் குழு பார்வையிட்டது

(காரைநகர்)

காரைநகரில் குழாய் மூலம் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன.

மேற்படி நடவடிக்கைக்காக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இந்து கலாசார அமைச்சின் ஆலோசகர் நா. நாராயணன் தலைமையில்தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் பொறியியல் உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று காரைநகர் வந்துள்ளது.

முதற்கட்டமாக காரைநகர் கிழக்கு கிளுவனைக் குள நீரினை நீர்ப் பம்பியைக் கொண்டு வெளியேற்றி நீரின் கொள்ளளவு நிலைமையினையும், நீர் மட்டம் குறையுமிடத்து அதன் உவர் நீர்த் தன்மையினையும் பரிசோதிக்கும் நடவடிக்கை காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிமிடத்திற்கு 450 மீற்றர் நீர் வரை வெளியேற்றக் கூடிய பம்பி மூலம் நீர் வெளியேற்றப்பட்ட போதும் 12 மணித்தியாலம் வரை நீரின் தன்மையும், நீர் மட்ட நிலைமையும்சாதகமாகவே அமைந்துள்ளதாகவும் இப் பரிசோதனை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுவருவதாகவும் பெரும்பாலும் நீர்ப்பாசன திட்டத்திற்கு இக்குளம் பொருத்தமாக அமையக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் ஆலோசகர் நாராயணன் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து காரைநகர் மேற்கு கிராவத்தை பகுதி நன்னீர் கிணறும், வடக்கு ஆலங்கன்றடி நன்னீர் கிணறும் பரிசோதிக்கப்பட்டு நீர் நிலையை அறியப்படவுள்ளது.

பின்னர் பெறப்பட்ட தரவுகளைக் கொண்டு அடுத்த மாதமளவில் நீர்வழங்கலுக்கான தொட்டிகள் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகும்.

இக் குழு தொடர்ந்து 5 நாட்கள் காரைநகரில் தங்கியிருந்து செயற்படவுள்ளது.

மேற்படி திட்டத்திற்கென நகர பொது வசதிகள் அமைச்சினால் பத்து மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளமையும், சென்ற மாதம் யாழ். வருகை தந்த நகரப் பொது வசதிகள் அமைச்சர் மொகமட் மக்றூப்கிளுவனையில் இத் திட்டத்திற்கென அடிக்கல்லை நாட்டியதும் குறிப்பிடத்தக்கது.

(உ-246)

# இராசி பலன்

22-7-2002

(ஆடி, 06 திங்கள்)

திரயோதசி பி.ப. 3.32 வரை

மூலம் மு.இ. 7.14 வரை

ராகுகாலம்-7.31-9.01

நல்லநேரம்-12.01-1.31

சித்தம்

**மேடம்**

தொழில்மந்தம், முயற்சி தாமதம், பிரயாணம், மனச் சஞ்சலம்

**இடபம்**

பிரயாணக்கஷ்டம், திருடர் பயம், காரியதாமதம், திடீர் நன்மை

**மிதுனம்**

களஸ்திர சுகம், கலந்துரையாடல், வாகனசுகம், காரிய அனுகூலம்

**கடகம்**

தேகஆரோக்கியம்,தொழில் விருத்தி, முயற்சிஜெயம், மன மகிழ்ச்சி

**சிங்கம்**

வியாபாரநன்மை, பிரயாணக்கஷ்டம், கௌரவக் குறைவு, குடும்பசுகம்

**கன்னி**

உடல்நலக்குறைவு, எதிர்பாராத நன்மை, மனச்சஞ்சலம், முயற்சிதாமதம்

**துலாம்**

சென்றஇடத்தில் செல்வாக்கு,குடும்பத்தில்மகிழ்ச்சி, தனவரவு, காரியஅனுகூலம்

**விருச்சிகம்**

இனசனத் தொடர்பு, தேவையற்ற வார்த்தை, பொருள்விரயம், நிலைமாற்றம்

**தனுசு**

பெரியோர்ஆதரவு, முயற்சி பலிதம், கல்விச்சிறப்பு, காரியம் கைகூடும்

**மகரம்**

உணர்ச்சிவசப்படுதல், வேலைக்கஷ்டம், உறவினர் சந்திப்பு, காரியஅலைச்சல்

**கும்பம்**

தனலாபம், சென்றஇடத்தில் செல்வாக்கு, காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி

**மீனம்**

அதிகபிரயாசை, பிறர் உதவி, தூரதேசச்செய்தி, முயற்சிபலிதம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# பிரதமர் ரணில், ஜனாதிபதி உறவு விரிசலடையும்ஆபத்து

### அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும்,ஜனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையில்தோன்றிய முறுகல் நிலை மேலும் விரிசலடையும் ஆபத்துஏற்பட்டுள்ளதாககொழும்புஅரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வர்த்தகமற்றும்நுகர்வோர் அமைச்சர்ரவிகருணநாயக்கா விவகாரம் தொடர்பாகவே இம் முறுகல் நிலை மேலும் விரிசலடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை கொலை செய்யும் நோக்கிலேயே ஜனாதிபதி குண்டுகள் பொருத்தப்பட்ட கைப்பையுடன் அமைச்சரவைக் கூட்டங்களுக்கு சமுகமளிப்பதாக ரவி கருணநாயக்கா தெரிவித்ததாக ஜனாதிபதி தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், அமைச்சர் ரவியை அமைச்சரவையிலிருந்து நீக்கவேண்டும் என ஜனாதிபதி தரப்பில் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதும் அவ் அறிவுத்தலிற்கு பிரதமர் எதுவித பதிலும்கூறாது அமெரிக்கா சென்றதும் ஏற்கனவே தெரிந்ததே. (க)

# கரம்பகம் பகுதி மக்கள் வீடுகளை பார்வையிட படையினரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கரம்பகம் பகுதி மக்கள்தமதுவீடுகளைச் சென்று பார்வையிட்டுத் திரும்புவதற்கு அனுமதி வழங்குமாறுபடைத் தரப்பினரிடம் தென்மராட்சி பொது அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

இவ் அனுமதி மறுக்கப்படும் பட்சத்தில் பத்து நாட்கள்அவகாசத்துடன் தென்மராட்சிப் பிரதேசத்தை ஸ்தம்பிதமடையச்செய்யும் நடவடிக்கைகளில் தாம் இறங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதாகவும் அவ்வமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. (ஷ)

# மந்திகை ஆஸ்பத்திரியில் தாதியர் பற்றாக்குறை

(தென்மராட்சி)

மந்திகை ஆதார வைத்தியசாலையில் தாதிகள் போதியளவு இல்லாமையினால் வைத்தியசாலைச் செயல்பாடுகள் திருப்திகரமாக இல்லாதிருப்பதாகநோயாளர்களால் தெரிவிக்கப்படுகிறது;

இவ் வைத்தியசாலைக்கு 93தாதியர்களுக்கு தேவை உள்ள போதிலும் தற்போது 33தாதியர் மட்டுமே சேவையில்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இங்கு வைத்திய சேவையை திருப்திகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு இன்னமும் 60 தாதிமார் தேவையெனத் தெரிய வந்துள்ளது.

(உ-77)

### சண்டிலிப்பாய் கிராமிய வைத்தியசாலையில்

# 1015 பேர் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்றனர்

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கிராமிய வைத்தியசாலைகளில் கடந்த மூன்று மாத காலப்பகுதியில் ஆயிரத்து 15 பேர் காய்ச்சலுக்கு சிகிச்சை பெற்றுள்ளதாக மேற்படி வைத்தியசாலை புள்ளி விபரங்களில்இருந்து தெரியவருகிறது.

இவர்களில் அனேகமானவர்கள் வெளிஇடங்களில் இருந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவில் தற்காலிகமாக வசிப்போர்என அறியப்பட்டுள்ளது.

ஏனையோர் ஆனைக்கோட்டை, கட்டுடை,சாவல்காடு பகுதியைச்சேர்ந்தவர்கள்.

இக்காலப்பகுதியில் ஒருவர் மலேரியாவினாலும் 87 பேர் வயிற்றோட்டத்தினாலும் பாதிக்கப்பட்ட நிலையில் இங்கு சிகிச்சை பெற்றுள்ளனர். (ஷ-252)

# இன்று ஒரு தகவல்

## நேர்காணல் எவ்வாறு?

எனக்குத் தெரிந்த ஒருவர். அவர் ஒரு பத்திரிகை நிருபர். அடிக்கடி பலரைச் சந்தித்துப் பத்திரிகைகளுக்காக பேட்டி எடுப்பார். இந்தப் பேட்டி என்பது தமிழில் நேர்காணல் என்பதாகும். இது ஒரு தனிக்கலை. கேள்வி கேட்கிற வேலைதானே, அது ஒரு பெரிய காரியமா? என்று நினைப்பது தவறு. ஒரு சர்வாதிகார நாட்டில் கேள்வி கேட்பது கஷ்டம்! ஜனநாயக நாட்டில் பதில் சொல்வது கஷ்டம் என்று சொல்வது வழக்கம். எந்தநாடாக இருந்தாலும்-ஒரு பத்திரிகைப் பேட்டிக்காகக் கேள்வி கேட்பதற்கு மிகுந்த சாமர்த்தியம் வேண்டும். ஒருபத்திகைக்காக ஒருவரைப் பேட்டிகாணப் போகும் போது என்னென்ன விஷயத்தை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும் என்பதைப் பற்றி ஒருபத்திரிகையில் சில குறிப்புகளைப் பார்த்தேன். அதைத்தான் இப்போது இங்கே சொல்லப் போகிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு பெரியவரைப் பேட்டிகாண்கிறீர்கள். உங்கள் பழைய அனுபவத்தைச் சொல்லுங்கள் என்று கேட்கிறீர்கள், 'நாற்பது வருடங்களுக்கு முன்னர் நான் கல்கத்தாவில் இருந்தபோது...' என்று அவர் ஆரம்பிக்கிறார். உடனே நீங்கள் குறுக்கே பாய்ந்து என்ன திகதி? என்ன கிழமை? என்ன நேரம்? என்று துளைத்தெடுத்துக் கொண்டிருக்கக் கூடாது. அவர் நல்ல மனோ நிலையில் சொல்லி முடிக்க விடுங்கள். கடைசியில் வேண்டுமென்றால் அவரிடமோ அல்லது மற்றவர்களிடமோ தேதியைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

ஒரு பெரிய பிரமுகரைப் பேட்டிகாணப்போகிறீர்கள். நீங்கள் போகும் சமயத்தில் அவர் தன்னுடைய பேரப்பிள்ளைகளுடன் கிட்டிப்புள்ளு விளையாடிக் கொண்டிருக்கிறார் இல்லையென்றால் இடுப்பில் ஒருதுண்டைக் கட்டிக்கொண்டு தோட்டத்துச் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டு இருக்கிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படுகிறதாகக் காட்டிக்கொள்ளாதீர்கள். இயல்பாக நடந்து கொள்ளுங்கள். ஒரு விஷயத்தை உங்களிடம் சொன்னபின்பு இதை உங்கள் பத்திரிகையில் போடவேண்டாம் என்று சொன்னால் அதைப்போடாதீர்கள்.

அவர் சொல்லுகிற விஷயம் அல்லது பதில் உங்களுக்குப் புரியவில்லையென்றால், அதை மறுபடியும் கேட்டு விளங்கிக் கொள்வதில் ஒன்றும் தவறில்லை. நீங்கள் அவரை நோக்கிக் கேட்டுக் கொண்டிருக்கிறபோது அதற்கு அவர் பதில் சொல்லாமல் உங்களைக் கேள்வி கேட்க ஆரம்பித்துவிடுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உடனே எச்சரிக்கையாகி விடவேண்டும். ஏனென்றால், அவர் உங்களைத் திசை திருப்பி எங்கேயாவது அழைத்துக்கொண்டு போய்விடுவார்.

ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் 'இதுதான் என்னுடைய கருத்து' என்றுஒருவர் சொல்கிறார். அதே பிரச்சினையைப் பற்றி, சிலர் இப்படிச் சொல்கிறார்களே! என்று சொல்லுங்கள். அவரைத் தூண்டிவிட்டதாயும் இருக்கும். அந்த விஷயத்தில் உங்களுக்கு எதுவும் பொறுப்பில்லை என்று காட்டின மாதிரியும் இருக்கும்.

உங்களுக்கு நன்றாகத் தெரிந்த ஒரு விஷயத்தையே ஒருவர் உங்களிடம் விளக்கிக் கொண்டிருக்கிறார். 'அதுதான் எனக்குத் தெரியுமே' என்பது போலப் பேசாதீர்கள். உங்களுக்கு எதுவுமே தெரியாது என்பது மாதிரி இருந்துகொண்டு கேள்வி கேளுங்கள். 'இந்த விஷயத்தை இன்னும் கொஞ்சம் விபரமாகச் சொல்ல முடியுமா?' என்று கேளுங்கள். அதனால் நீங்கள் ஒன்றும் குறைந்துபோய்விட மாட்டீர்கள். ஒரு பேட்டி எடுக்கும் போது அது தொடர்பான உங்கள் அனுபவத்தையும் இடையே சொல்வது நல்லதுதான். இருந்தாலும் கேள்வி கேட்கிற நீங்களே அதிகமாகப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.

கொஞ்சம் கடினமான கேள்வியாக இருந்தால் ஒரு தடவைக்கு இரண்டு தடவையாகக் கேட்கலாம். இரண்டாவது தடவை கேட்கிற போது அதே கேள்வியைக் கொஞ்சம் மாற்றி வேறு விதமாகக் கேட்கலாம். சிலர் பதில் சொல்கிறபோது சில தர்மசங்கடமான விஷயங்களைப் பற்றிப் பேச வேண்டியிருக்கும். அவரே தயங்கித் தயங்கி யோசனை பண்ணிப் பதில் சொல்லிக்கொண்டு இருப்பார். அந்தச் சமயத்தில் நீங்கள் குறுக்கே பேசாதீர்கள் அவர் சொல்லி முடிக்கிற வரையும் காத்துக் கொண்டிருங்கள். ஏனென்றால் அப்படியான சமயத்தில்சில சுவாரஸ்யமான விஷயங்கள் கிடைத்தாலும் கிடைக்கும், இவையெல்லாம் பேட்டிகாண்கிறவர்களுக்கு அனுபவசாலிகள் சொல்லியிருக்கிற யோசனைகள், இவை எல்லாவற்றையும் விடச் சொந்த அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளவேண்டியவை தான் அதிகம்.

ஒரு பெரிய மனிதரை ஒரு பத்திரிகை நிருபர் பேட்டி கண்டார். கடைசியில் பத்திரிகையில்போடும் போதுஅந்தப் பெரிய மனிதர் அவரின் வீட்டில் மனைவிக்கு துணிகள் துவைத்துக் கொடுக்கிறார் என்று போட்டுவிட்டார். உடனே அவர் அந்த நிருபரைக் கூப்பிட்டு கன்னாபின்னா என்று திட்டினார். ''ஏன்சார்! நான் உண்மையைத்தானே எழுதினேன் அதற்காக இப்படித் திட்டுகிறீர்களே என்றார் நிருபர். உண்மையை எழுதியதற்காக நான் உன்னைத் திட்டவில்லை. என்னுடையகுடும்ப இரகசியத்தை வெளியில் விட்டுவிட்டாயே! அதற்காகத் தான்திட்டுகிறேன்'' என்றார் அந்தப்பெரியமனிதர்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கொடிகாமம் பகுதியில் போக்குவரத்து நெரிசல்

(கொடிகாமம்)

யாழ்ப்பாணம்-கண்டி தரை வழிப்பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து கொடிகாமம் பகுதி சனசந்தடி மிக்க இடமாக மாறியுள்ளது.

இப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் மிகுந்திருப்பதைத் தொடர்ந்து மேலதிக போக்குவரத்துக் கண்காணிப்புப் பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை பெருமளவில் உணவுக் கடைகளும் இங்கு இயங்க ஆரம்பித்துள்ளன.

(உ-256)

படையினரின் பனைமரத் தறிப்பின் பின்விளைவு

# திக்கம் வடிசாலையில் பனஞ்சாராய உற்பத்தி வெகுவாக வீழ்ச்சி

(மந்திகை)

திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனம் சாராயத்தின் அளவு அடுத்த ஆண்டின் முற்பகுதியில் மிகவும் வீழ்ச்சியடையும் நிலை ஏற்பட்டுள்ளதாக வடிசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் கள்ளின் அளவு குறைந்துள்ளமை,

சட்ட விரோதமாக வீடுகளில் வைத்து கள் விற்பனை செய்கின்றமை,

படையினரால் பனைகள் தொடர்ந்தும் தறிக்கப்பட்டு வருகின்றமை,

பனம் வெல்லத்திற்கு தென் பகுதியில் கேள்வி அதிகரித்திருப்பதையடுத்து அவ் உற்பத்திக்காக அதிகளவு கள்ளினைப் பயன்படுத்துகின்றமை ஆகிய காரணங்களாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது.

மே மாதம் உற்பத்தி செய்யப்பட்ட கள்ளில், 63 இலட்சத்து 67 ஆயிரத்து 65 போத்தல்கள், பனஞ்சாராய உற்பத்திக்காக வழங்கப்பட்டுள்ளது.

ஆனால், யூன் மாதத்தில் 35 இலட்சத்து 58 ஆயிரத்து 55 போத்தல் கள் மாத்திரமே பனஞ்சாராய உற்பத்திக்காக வழங்கப்பட்டுள்ளது.

50 வீத வீழ்ச்சிப் போக்கை இது காட்டுவதாக வடிசாலை வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இந் நிலைமையால், தற்போது கையிருப்பில் இருந்த வடியின் அளவும் குறைவடைந்து வருவதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, திக்கம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் பனம் சாராயத்திற்கு யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி தென்னிலங்கையிலும் நல்ல வரவேற்பு இருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-23

## கூடைப் பந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகவிளையாட்டு அவை நடத்திவரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாளை பி.ப. 4.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக அணி எதிர் யுத்காமல் வி.க ஆகியன பல்கலைக்கழக மைதானத்தில் மோதவுள்ளன. (க-3)

## குருபூர்ணிமா விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஸ்ரீசுப்பிரமுனிய கோட்டத்தில் குரு பூர்ணிமா விழா நாளை பி ப 4 மணிக்கு நடைபெறவுள்ளது

இவ் விழாவில் திருவடி பூசை, திரு ஊஞ்சல், ஆன்மீகப் பெரியார்களின் ஆசியுரை என்பன இடம்பெறவுள்ளன. (ஷ)

## நாடகப் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் உள்ள திருமறைக் கலாமன்றங்களைச் சேர்ந்த கலைஞர்களுக்கான நாடகப் பட்டறை மருதானையில் உள்ள சி. எஸ். ஆர். மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது இப்பட்டறை இன்றும் தொடர்ந்து நடைபெறும்.

இதில் யாழ். திருமறைக் கலாமன்றத்தைச் சேர்ந்த கலைஞர்கள் உட்பட 25 பேர் கலந்து கொள்கின்றனர். (உ-6)

## சுற்றுலா குழுவினர் திரும்பினர்

(சுதுமலை)

தென்னிலங்கைக்கு சுற்றுலாப் பயணம் மேற் கொண்ட 14 பாடசாலைகளைச்சேர்ந்த 153 மாணவிகள் யாழ்ப்பாணம் வந்தடைந்தனர்.

தென் இலங்கையின் வரலாற்றுமுக்கியத்துவம்வாய்ந்த பல இடங்களை இக் குழுவினர் பார்வையிட்டனர்.

(க-252)

## கணனி கையளிப்பு

(காரைநகர்)

காரைநகர் ப.நோ.கூ.சங்க கணக்கு நிர்வாக நடைமுறைகளை இலகுவாக்கும் வகையில் அண்மையில் யாழ்ப்பாணம் வருகைதந்த கூட்டுறவுத் துறை அமைச்சர் எ. ஆர் எம். காதர் புதிய கணனி ஒன்றினை சங்கத்துக்கு வழங்கியுள்ளார்.

காரைநகர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க செயற்பாடுகள் வெகு விரைவில் கணனிமயப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

(உ-246)

## இளஞ்சைவ, சைவப் புலவர் தேர்வு முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் நடத்திய இளஞ் சைவப் புலவர் சைவப் புலவர் தேர்வில் சித்தியடைந்தோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

### இளஞ்சைவப் புலவர்

2 ஆம் பிரிவு

பா. பத்மநாதன், ஏழாலை பே. உஷாஜினி அல்வாய், ப.ரேவதி ஆனைக்கோட்டை, வை. துளசிமலர் சாவகச்சேரி.

3 ஆம் பிரிவு

வா.சாந்தினி, சுழிபுரம், சி. ஜெயரட்ணராஜா சுழிபுரம், தி. பேபிவதனா சுழிபுரம் ச. சங்கீதா நீர்வேலி, கு.பாமதி சுன்னாகம், த. சிவசக்தி கோப்பாய், தே. வனிதராணி நெடுந்தீவு.

### சைவப் புலவர்

2 ஆம் பிரிவு

ச. முகுந்தன் இணுவில், ம.சிவலிங்கம், கோண்டாவில் லி. ரமணன் நெடுந்தீவு, சி. சிவசுப்பிரமணியம் யாழ்ப்பாணம், கு. றஜீபன் சுன்னாகம்.

3 ஆம் பிரிவு

கி. சிவமணி யாழ்ப்பாணம் த. சுபாஜினி யாழ்ப்பாணம்.

(உ)

## மேல் மாகாணத்திலேயே அதிக விபத்துக்கள் புள்ளி விபரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேல் மாகாணத்திலேதான் அதிகளவுவீதி விபத்துக்கள் இடம்பெற்று வருவாத புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இவ் விபத்துக்களில் பெரும்பாலானவை தனியார் பஸ்கள் மூலமே ஏற்படுவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளையில் மேல் மாகாணத்தில் தனியார் சாரதிகளுக்கும், நடத்துநர்களுக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுவருகின்றன.

எனினும் விபத்துக்களில் பெரும்பாலானவை சாரதி, நடத்துநர்களின் தவறான செயற்பாடுகளினாலேயே இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கவனக் குறைவாக வாகனங்களை செலுத்தும் தனியார் வாகன சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரம் விரைவில் இரத்துச் செய்யப்படுமென மாகாண போக்குவரத்து அமைச்சர் வசந்த அழகியவர்ம அறிவித்துள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-19)

## சட்ட விரோதமாக மின்சாரம் பெறுவோர்க்கு எதிராக கடும் நடவடிக்கை

(மந்திகை)

மின் பாவனையாளர்கள் தமது வீட்டில் இருந்து அயல் வீட்டிற்கு மின் விநியோகிப்பது சட்டப்படி குற்றம் எனவும்,

இவ்வாறான செயல் கண்டு பிடிக்கப்படுமிடத்து அதற்காகப்பயன்படுத்தப்படும் உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படும் எனவும் பருத்தித்துறை மின்சாரசபை வட்டாரங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை, சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெறும் பலர் பற்றிய தகவல்கள் தமக்குக் கிடைத்திருப்பதாகவும் அவர்கள் விடயத்தில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸாருடன் இணைந்து தாம் தயாராகிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

## ஆசிரியர்கள் இல்லை வீணே இருந்து விட்டு வீடு திரும்பும் மாணவர்

(கொழும்பு)

ஆசிரியர்கள் எவருமில்லாது தமிழ் வித்தியாலயம் ஒன்று இயங்கிவருவது இரத்தினபுரி மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளது.

அலுப்பொல தமிழ் வித்தியாலயமே இவ்வாறு ஆசிரியர்களற்று இயங்கி வருகின்றது.

இப்பாடசாலைக்கு வரும் மாணவர்கள் மு.ப. 10-00 மணி வரை தினமும் வீணே இருந்து விட்டு வீடுகளுக்குச் சென்று விடுகின்றனர்.

இது குறித்து விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாக சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளர் பியதிஸ்ஸ ரணசிங்க தெரிவித்துள்ளார். (உ-3)

# சூடானில் போர் நிறுத்த அறிவிப்பு விரைவில் வெளியாகும்

## அரசும் விடுதலைப் படையும் இணக்கம்

(காடும்)

சூடானில் நடைபெற்று வரும் உள் நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் முயற்சிகளில் முன்னேற்றம் காணப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இன்னமும் மூன்று வாரங்களுக்குள் போர் நிறுத்த அறிவிப்பினை இரு தரப்பும் ஒருதலைப்பட்சமாக விடுப்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சூடான் அரசின் பிற் போக்கான நடவடிக்கைகளுக்கு எதிராக சூடான் விடுதலைப் படை என்ற முற்போக்கு இயக்கம் கடந்த 20 வருடங்களாக ஆயுதப் போராட்டம் நடாத்தி வருகிறது. இவ்வியக்கம் தெற்கு சூடானில் தளங்களை அமைத்து நிலை கொண்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்து சூடானியஅரசு தனது மதத் தீவிரத்தன்மை, ஆக்கிரமிப்புபோன்ற செயற்பாடுகளை நிறுத்துவதுஎனபேரராளிகளிடம்உறுதி அளித்ததைத் தொடர்ந்தே இருதரப்புகளுக்குமிடையில் இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளதாக சூடான் விடுதலைப்படை இயக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ஷ)

### ஆயுத விற்பனை விவகாரம்

## இந்திய,சீன கம்பனிகளுக்கு அமெரிக்க அரசு தடை

பேரழிவுகளை விளைவிக்கக்கூடிய இரசாயன ஆயுதங்களை ஈரானிற்கு விற்றதாகக் கூறி அமெரிக்க அரசு இந்திய சீனக்கம்பனிகளுக்கு தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மேற்படி இரசாயன உயிரியல் ஆயுதங்கள் மனிதகுலத்திற்கே நாசத்தை ஏற்படுத்தக்கூடியவைஎன்ற காரணத்திற்காகவே மேற்படி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக அமெரிக்கப் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது. (க-19)

## ஜம்முகாஷ்மீர் பேரணியில் பொலிஸார் தாக்குதல் ஐவர் காயம்; 12 பேர்கைது

(ஸ்ரீநகர்)

ஜம்முகாஷ்மீர் பகுதியில் இடம்பெற்ற அனைத்துக் கட்சிப் பேரணியை காஷ்மீர்ப் பொலிஸார் தடியடிப் பிரயோகம், கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதல்கள் மூலம் கலைத்தபோது பேரணியில் பங்குபற்றிய ஐவர் காயமடைந்துள்ளனர்.

மேற்படி பேரணியில்பிரிவினையை ஆதரிக்கும் பல அரசியல் பிரமுகர்கள் மற்றும் ஜம்முகாஷ்மீர்விடுதலை முன்னணித் தலைவர்கள் என் பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டகாரர்களில் முக்கியமான 12 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனார். (ஷ19)

## பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களைப் பெறலாம்

(மந்திகை)

முகமாலை சோதனைச் சாவடியில் வைத்து பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட தொலைவில் இருந்து இயங்க வைக்கும் சாதனங்கள்மூலம் (றிமோல்ற்) இயங்கும் பொருட்களை உரியவர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தடைசெய்யப்பட்ட பொருட்கள் என்ற பெயரில் முகமாலை சோதனைச்சாவடியில் வைத்துபொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்ட இவ்வாறன சில பொருட்கள் சாவகச்சேரி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டவர்களை சாவகச்சேரி நீதிமன்ற பதிவாளரிடம் உரிய ஆவணங்களை காண்பித்து கிழமை நாட்களில் பெற்றுக் கொள்ள முடியுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## முஷாரப்பின் கோரிக்கையை அமெரிக்கா முற்றாக நிராகரிப்பு

(வாஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் தீர்மானத்தின அடிப்படையில் ஜம்முகாஷ்மீரில் சுயநிர்ணய வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும் என்ற பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷராப்பின் கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளதாக அமெரிக்க வெளியுறவுத் துறைத்துணை அமைச்சர் கிருஷ்ண றொக்கா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் சர்வதேச உறவுகள் குறித்ததுணைக்குழுக்கூட்டத்திலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார்-

1972 ல் செய்து கொள்ளப்பட்ட சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே இப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும்.

ஜம்முகாஷ்மீரில்நடை பெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தல் மூலமாகவே இப்பிரச்சினைக்குத்தீர்வு ஏற்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

காஷ்மீரில் கருத்துக்கணிப்பு நடத்தப்படவேண்டும் என ஐ நா தீர்மானத்தை அமெரிக்கா முதலில் ஆதரித்தாலும்,இந்தப்பிரச்சினைக்கு இருதரப்பு பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வுகாணவேண்டும் என்று 1972 இல்இந்தியாவும் பாகிஸ்தானும் ஒப்புக் கொண்டதையடுத்து சிம்லா ஒப்பந்தத்தின் மூலமாகவே இதற்குத் தீர்வு காணவேண்டும் என்பதை அமெரிக்காவும் ஒப்புக்கொண்டது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ-8)

## அமெரிக்காவுக்கு எதிராக ஈரானில் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணி

(தெஹ்ரான்)

ஈரானில் அமெரிக்காவிற்கு எதிரான பெரும் ஆர்ப்பாட்ட பேரணி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றுள்ளது. இப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் அமெரிக்கா தமது உள்நாட்டு விடயங்களில்தலையிடுவதற்குஎதிரான கோஷங்களையும், பாதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

ஈரானின் பழைமைவாத அரசிற்கு எதிராக அண்மையில் அமெரிக்க அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தை ஈரானியப்பழமை வாதிகளே ஒழுங்குசெய்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்தன. (ஷ-19)

## மருந்து விற்பனைநிலையம் அரசினால் நிறுவப்படும்

### பாவனையாளர் நன்மை கருதி

(கொழும்பு)

லங்கா மெடிக்கல்ஸ் எனும் பெயரில் பாவனையாளரின் நன்மைகருதி மருந்துப் பொருள் விற்பனை நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப் படவுள்ளது.

அரசாங்கம் தரகர்களின் தலையீடுகளின்றி வெளிநாடுகளிலிருந்து நேரடியாக மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்துஇந்தநிலையத்தின் ஊடாக 40 வீத விலைக்குறைவுடன் மக்களுக்கு விநியோகிக்கும்என்றும்.

இத்திட்டத்தினால் மருந்துப் பொருட்களின் விலைகளில் பாரிய வீழ்ச்சி ஏற்படுவதுடன் கொள்ளை இலாபம் பெறும்வர்த்தகர்களின்செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்றும்அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ஷ)

### இஸ்ரேல் பிணக்கு சம்பந்தமாக

## அமெரிக்க, அரபு பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு வார்த்தை

(ஜெருசலேம்)

அரபு நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் மூவர் இஸ்ரேல் பிரச்சினை சம்பந்தமாக அமெரிக்கத் தரப்பினருடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இதில் ஜோடான் இளவரசர் மஷ்வன் முஷேர், எகிப்து நாட்டு அமைச்சர் அஹமட் வாஷீர், சவூதி அரேபிய பிரதிநிதி ஷெவர் பகீர் ஆகியோரும் அமெரிக்கத் தரப்பில் வெளியுறவுச் செயலர் கொலின் பவல்அமெரிக்கஅதிபர்ஜோர்ச் புஷ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மத்திய கிழக்குப் பிராந்தியத்திலே ஸ்ரேலுக்கும் பலஸ்தீனியத்திற்கும் இடையில் நீண்டகாலம் நடை பெற்று வரும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் அனைத்து முயற்சிகளுக்கும் தான் ஆதரவெனமும் பலஸ்தீனிபர்கள் தமது வன்முறையை நிறுத்தினால் போர் நிறுத்தம்சம்பந்தமாகஅமெரிக்கா இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுக்கும் எனவும் அமெரிக்கத் தரப்பு அறிவித்துள்ளது.

மத்திய கிழக்குப் பகுதியில் ஸ்ரேலிப ராணுவத்தின்மனித உரிமை மீறல்கள்உச்சக்கட்டத்தினைப் பெற்றிருக்கும் இவ்வேளை இந்தப் பேச்சுவார்த்தை தமக்கு ஆறுதலளிப்பதாக அரபுநாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (ஷ-19)

### அமெரிக்க பத்திரிகையாளர்

## கொலை ஆதாரங்கள் எதுவும் இல்லை

(இஸ்லாமாபாத்)

அமெரிக்கப் பத்திரிகையாளரும் இஸ்ரேலியப் பிரஜையுமான டானியல் பேர்ள் கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பிரிட்டிஸ் பிரஜையான அஹமட் ஓமர்சையிட் ஷேக்தன்மீதான தீர்ப்பை மேன்முறையீடு செய்துள்ளார்.

ஓமர்சையிட் ஷேக்கின் மேன்முறையீட்டைவிசாரித்த சட்டத் தரணிகள் இவர் அக்கொலையை மேற்கொண்டதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை எனவும் அரசே ஆதாரங்களை ஏற்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவருடன் இக்கொலைக்கு உடந்தையாக இருந்ததாக பஹாத நஸீம், ஷல்மான் ஷாகிப்,ஷேக் அடில் ஆகிய மூவருக்கும் 25 வருட ஆயுட் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ஷ)

## கேளிக்கை விடுதியில் தீ 26 பேர் உயிரிழப்பு

### பெருவில் சம்பவம்

(லிமா)

தென்அமெரிக்க பெரு நாட்டின் தலைநகரில் இரவு நேர கேளிக்கை விடுதியொன்று தீப்பிடித்துக் கொண்டதால் 26 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளதுடன் பலர் படுகாயமடைந்துள்ளனர்.

அவ்விடுதியில் விருந்தினரை மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் நடனமங்கை தீப்பந்து நடனம் ஒன்று ஆடியபோதே இத்தீ பரவிக்கொண்டது என பெரு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விடுதி தீப் பிடித்த சமயம் ஆயிரத்துக்கும் அதிகமான விருந்தினர்கள் அங்கு தங்கியிருந்ததாக தெரிவிக்கப்படுவதுடன்,காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருந்த சிங்கம் ஒன்றும் புலி யொன்றும் இத் தீவிபத்தில் உயிரிழந்துள்ளன.

விடுதியில் பரவிய தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப்படையினர் ஈடுபட்டிருந்த போது அது கைகூடாததையடுத்து விடுதி முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (க-8)

## விதிமுறை மீறுவதால் விபத்து அதிகரிப்பு

(கோப்பாய்)

கடந்த சில நாட்களாக யாழ். பருத்தித்துறை வீதியில் அதிகரித்து வரும் வாகன விபத்துக்களால், இவ்வீதியால் பயண செய்யும் பயணிகள் அச்சத்துடனேயே பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

கூடுதலான மினி பஸ்கள் வீதி ஒழுங்கு விதிகளை மீறிப் பயணிப்பதே பெரும்பாலான விபத்துகளுக்கு காரணமாக அமைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஷ-79)

### தமிழ்த்தேசிய இயக்கத்தலைவர்

## புதுக்கோட்டை பாவாணன் மீது 'போடோ'சட்டத்தின் கீழ் விசாரணை

(புதுடில்லி)

அண்மையில்தமிழகஅரசால் கைதுசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளரும் தமிழ்த் தேசிய இயக்கத்தின் தலைவருமான புதுக்கோட்டைப்பாவாணன் மீது'போடோ'பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

கவிஞர் பாரதிதாசன் விழாவில்,தற்போதுஆட்சியிலுள்ள அரசைக் கவிழ்க்கும் முகமாக உரையாற்றினார் என்ற குற்றத்திற்காகவே இவர் தமிழ் நாட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அதன் பின் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் பாவாணன் தனக்குப் பிணை வழங்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில் பாவாணன் மீது'போடோ'சட்டத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டிருப்பதால் அவருக்கு பிணை வழங்கப்படாதென்றும் வழக்கு சம்பந்தமான சலுகைகள் இறுக்கமடையும் என்றும் அரச சார்பு வழக்கறிஞர் தெரிவித்துள்ளார். (ஷ-19)

அடுக்கியகோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்

குறள்

# வலம்புரி

## ஆளுக்குப் பாதி பாதி

ஜனாதிபதி ஒரு கட்சி அரசாங்கம் இன்னோர் கட்சி என்றால் நிலைமை எப்படியிருக்கும் மாமி மருமகள் சண்டைபோல் அடிக்கடி பிரச்சினை இடம்பெறவே செய்யும். அதுவே இப்போது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தபோது ஜனாதிபதி ஊழலில் ஈடுபட்டார் என ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு குற்றஞ்சாட்டுகிறது. பதிலுக்கு ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசு கடந்த ஆறுமாதகால ஆட்சிக்குள் பலமில்லியன் ரூபாக்களை ஏப்பமிட்டுள்ளது என ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இப்படியே மாறிமாறி ஊழல் குற்றச்சாட்டுக்கள் நடைபெறப் போவது சாதாரண விடயமாக இருந்தாலும் குற்றச்சாட்டில் யார் வெல்லப்போகிறார்கள் என்பதைக் காலம் தான் தீர்மானிக்கப் போகிறது.

ஜனாதிபதி ஊழல் புரிந்தாரா? அல்லது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு ஊழல் புரிந்ததா என்பதை ஆராய்வதற்கு ஆணைக்குழுக்கள் அமைத்தால் அவ்வாணைக்குழுக்கள் மீதும் ஊழல்குற்றச்சாட்டுக்கள் நிச்சயம் சுமத்தப்படும். எதுவாயினும் பொது மக்களைப் பொறுத்தவரை ஊழல் புரிந்த இரண்டு ஆட்சியாளர்களுக்கு வாக்களித்தோம் என்ற மனக் குறை ஏற்படுவது திண்ணம்.

நாடு யுத்தத்தால் அழிந்து கொண்டிருக்கிறது. மக்கள் தமது சொந்த இடங்களில் இருக்க முடியாது அகதி முகாம்களில் அவலவாழ்க்கை நடத்துகின்றனர். விசாரணை - விடுதலை எதுவுமின்றி சிறைகளில் தமிழ்க் கைதிகள் உளம் உடைந்து போய் கண்ணீர் விடுகின்றனர். அதேபோல் காணாமல்போன படையினரின் பெற்றோர்கள் சதா அழுதவண்ணமுள்ளனர். இந்நிலையில் நானா நீயா என்ற பலப்பரீட்சை நாட்டின் ஆட்சிப் புலத்தில் நடைபெறுகிறது எனில் பொறுப்பில்லாத ஆட்சியாளர்கள் ஆட்சியில் அமர்ந்தால் அது பேய் வீடாக அமையும் என்பது நாம் செய்த பாவத்தின் வினையே.

# ஆரியமும், தமிழும் ஒன்றுக்கொன்று சரிநிகராய் விளங்கிடினும் என்றுமுள தென்தமிழுக்கீடாகுமா?

டாக்டர்
ரா. பி. சேதுப்பிள்ளை பீ, ஏ. பி. எல்.

மனோன்மணீயம் என்னும் நாடகநூல் இயற்றி அழியாப் புகழ்பெற்றவர் பேராசிரியர் சுந்தரனார். அந்நூலிலே தமிழ்த்தாய் வாழ்த்தாக அமைந்துள்ள பாடல் இப்பொழுது நாடெங்கும் முழங்குகின்றது. அருமையான மொழிநூற் கருத்தொன்றை அழகாக வெளியிடுவது அப்பாட்டு, இமயம்முதல் குமரிவரை பரவியுள்ள பாரத நாட்டில் பழங்காலம் முதல் இருவேறு குடும்பமொழிகள் வழங்கிவருகின்றன. ஒன்று ஆரியம் மற்றொன்று தமிழ். ஆரியமும் தமிழும் தொன்மை வாய்ந்த செம்மொழிகள், இவ்விரு மொழிகளும் இறைவன் அருளால் தோன்றின, இம்மை மறுமையென்றும் இருமையும் பயக்கும் அருள் நூல்களை உடையன. அதனால், 'இருமொழியும் நிகர் என்னும் இதற்கு ஐயமுளதோ என்று இருமொழிப் புலமையும்வாய்ந்த பெரியோர்கருதினர்.

தெய்வப்புலமைத் திருவள்ளுவனார் இயற்றிய திருக்குறளுக்குச் சிறப்புப்பாயிரம் அளித்த பெரும் புலவர்களுள் ஒருவராகிய வண்ணக்கன் சாத்தனார்,

'ஆரியமும் செந்தமிழும்
ஆராய்ந்து இதனின் இது
சீரியது என்றொன்றைச்
செப்பரிதால்-ஆரியம்
வேதமுடைத்து தமிழ்
திருவள்ளுவனார்
ஓதுகுறட்பா உடைத்து'

என்றுபாடினார்.

'ஆரியத்தையும் செந்தமிழையும் ஆராய்ந்து சீர்தூக்கி இதனினும் இது சிறந்தது' என ஒன்றை விதந்து கூறுதல் எவர்க்கும் எளிதன்று, எனினும், ஆரியமொழியில்வேதம் உள்ளது. தமிழ்மொழியில் திருக்குறள் உள்ளது என்று கூறுதல் சாலும், என்பது சாத்தனார்கருத்து.

சங்ககாலம் என்று சொல்லப்படுகின்ற பழங்காலத்திலும், சமயச்சான்றோர்கள் வாழ்ந்த தேவாரகாலத்திலும் ஆரியமும் தமிழும் ஒன்றுக்கொன்று சரிநிகர் சமானம் என்னும் கொள்கையே தமிழ் நாட்டில் பரவியிருந்தது இதனாலேயே ஈசனை. 'ஆரியன் கண்டாய், தமிழன்கண்டாய்' என்றுபாடினார்திருநாவுக்கரசர். ஆரியம் வடபுலத்தில் வழங்கியமொழியாதலால், வடமொழி என்று பெயர்பெற்றது-தமிழ் தென்புலத்தில் வழங்கிய மொழியாதலால், தென்மொழி என்று வழங்கப்பெற்றது.

வடமொழியாகிய ஆரியத்தினின்றும் பல மொழிகள் பிறந்தன. அவ்வாறே தென்மொழியாகிய தமிழினின்றும் பல மொழிகள் தோன்றின. எனவேதொன்மையிலும்செம்மையிலும் ஒன்றையொன்று ஒத்திருந்த இவ்விரு மொழிகளும், தாய்மை நலமும்பெற்று இந்நாட்டிலே திகழ்ந்தன. ஆயினும் தாய்மையில் ஒரு வேற்றுமை உண்டு, வடநாட்டில் பல மொழிகளை ஈன்ற தாய் இறந்துவிட்டாள். தென்னாட்டில் பல மொழிகளை ஈன்றதாய் இன்றும் இளமை குன்றாது இருக்கின்றாள். இச்சீர்மையை அறிந்து வாழ்த்துகின்றார் மனோன்மணியஆசிரியர்.

'பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள் முன்
இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும்
கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத்து உதித்தெழுந்தே
ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக்கு
அழிந்தொழிந்துசிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து
செயல் மறந்து வாழ்த்துதுமே'

என்ற அழகிய பாட்டில் தமிழின் தனிச் சிறப்பு நன்றாக உணர்த்தப்படுகின்றது. திராவிட நாட்டில் வழங்கிவரும் கன்னடம் முதலிய நான்கு மொழிகளும் தமிழ்த் தாயின் சேய்கள்,

என்று திட்டவட்டமாகக் கூறுகின்றார் சுந்தரனார். இக் கொள்கையை இன்று கன்னடரும், தெலுங்கரும், மலையாளத்தாரும், துளுவரும் ஏற்றுக்கொள்ளத் தயங்கினாலும், வருங்காலத்தில் திராவிட மொழிநூல் ஆராய்ச்சியின் பயனாக இவ்வுண்மை நன்கு நிலை பெறும் என்பதில் ஐயமில்லை. இந்நான்கு சிறந்த மக்களையும் ஈன்ற நற்தாய் முதுமையும், இறப்புமின்றி ஒரு தன்மையளாய் இலங்கும்தன்மையை எண்ணி இறைஞ்சுகின்றார் கவிஞர். இவ்வுலகிலுள்ள சராசரங்களையெல்லாம் ஈன்ற பரம் பொருளாகிய இறைவன் என்றும் ஒருபடியனாய் இருத்தல் போன்று, மூவாச்சாவா மொழியாகிய தமிழும் என்றுமுள தென் தமிழாய் வாழ்கின்றது என்று போற்றினார்.

இவ்வுலகில் எத்தனையோ செம்மொழிகள் பிறந்தன. செழித்து வளர்ந்தன, நாளடைவில் முதுமையுற்று நாட்டுவழக்கற்று, ஏட்டில் அடங்கிவிட்டன. ஐரோப்பிய நாட்டுச் செம்மொழிகளாகிய இலத்தீன், கிரீக்கு என்னும் இரு மொழிகளும் இன்றுஉலக வழக்கற்ற செம் மொழிகளேயாகும். பாரசீக நாட்டுப் பழைய மொழியும், சுமேரிய நாட்டுத்தொன் மொழியும் வழக்காறு அற்ற மொழிகளேயாகும். இத்தகைய செம்மொழி இனத்தைச்சேர்ந்தது ஆரியம் என்னும் வடமொழியும், தென்மொழியாகிய தமிழ் தொன்மை வாய்ந்த மொழியே ஆயினும், இன்றும் ஏட்டு வழக்கோடு நாட்டு வழக்கும் உடையதாய் விளங்குதல் ஒரு தனிச்சிறப்பேயாகும், முன்னைப் பழம் பொருட்கும்முன்னைப் பழம் பொருளாய், பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாய் வாழ்கின்றான் இறைவன் என்று பாடினார் மாணிக்க வாசகர். அவ் வண்ணமே பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் பசுந்தமிழை வியந்து போற்றினார் சுந்தரனார்.

'கொடு மலையாளக் குடியிருப்புடையேன், என்று தாம் வாழ்ந்த நாட்டின் தன்மையை கூறிய இப்பேராசிரியர், அந்நாடு தமிழ் மொழி ஆராய்ச்சிக்குப் பயன்படும் பான்மையையும் விளக்கிக் கூறியுள்ளார். இக்காலத்தில் தமிழில் வழங்கிவரும் பழஞ்சொற்கள் சிலவற்றின் வேரும்பொருளும் தெரிந்து கொள்வதற்குச் சில ஆண்டுகளேனும் தமிழாராய்ச்சியாளர்கள் மலையாள நாட்டில் குடியிருத்தல் வேண்டும் என்பது அவர் கொள்கை.

இதற்குச் சான்றாக எலும்பு என்றசொல்லை எடுத்துக் கொள்வோம். இச்சொல்தமிழ் நாடெங்கும் வழங்குகின்றது. ஆயினும், இச் சொல்லின் வேரும் பொருளும் விளக்கமாகத் தெரியவில்லை. மலையாள நாட்டில்'எல்' என்னுஞ்சொல் எலும்பைக் குறிக்கின்றது. 'எல்லு ஒடிச்சுவிடும்' என்பது மலையாளத்தில் ஒருவஞ்சின மொழி, திருக்குறளில் 'என்பு' என்றசொல் வழங்குதலைத் தமிழ் அறிஞர்கள்அறிவார்கள் 'நோல்' என்ற வேர்ச்சொல்லடியாக நோன்பு பிறந்தாற் போன்று 'எல்' என்றவேர்அடியாக 'என்பு' பிறந்ததென்று கருதுதல்தவறாகாது. இலக்கிய வழக்கில் 'என்பு' என்று எடுத்தாளப்பட்ட சொல்லே உலக வழக்கில் எலும்பு என்றாயிற்று, ஆயினும், இச்சொற்களின் வேர் இன்று தமிழ் நாட்டில் காணப்படுவதில்லை. மலையாளநாட்டில் காணப்படுகின்றது.

திராவிட மொழிகள் என்று கருதப்படுகின்ற ஐந்து சிறந்த மொழிகளையும் கற்றுணர்தல் ஒருவருக்கு இயலாதிருப்பினும், அவற்றுள் இருமொழிகளையேனும் அறிந்து கொள்ளுதல் தென்னாட்டில் வாழும் அறிஞர்க்கு இன்றியமையாததொன்றாகும். இன்று மலையாள நாட்டிலுள்ள சில ஊர்ப் பெயர்கள் பழந்தமிழ்ச் சொற்களாய்க் காணப்படுகின்றன. யான் ஒருகால் மலையாளநண்பரோடுதிருவனந்த புரத்திற்கு சென்று கொண்டிருந்தேன். இருப்புப் பாதையில் புனலூர் என்ற நிலையம் வந்தது. இரயில் வண்டித் தொடரை இழுத்துச் சென்ற இஞ்சின் சிறிது இளைப்பாறித் தண்ணீர் பருகத்தொடங்கிற்று. அது தண்ணீர் குடித்துக் கொண்டிருந்ததைக் கண்ட மலையாள நண்பர் நெடுந்தூரம் வந்த அலுப்பினால் வெறுப்பாகப் பேசி இரயிலைப் பழித்துக் கொண்டிருந்தார். அப்போது, இந்த ஊரைக் கண்டவுடன் இரயிலுக்கு தாகமெடுப்பது இயல்புதானே! என்று சொன்னேன் நான், 'அது எப்படி?' என்று கேட்டார் நண்பர். இது புனலூர் அல்லவா? புனல் என்பது தண்ணீர். தண்ணீருடைய ஊரைக் கண்டபோது இரயிலுக்கும் தாகம் எடுத்துவிட்டது என்று விளக்கம் கூறிய பொழுது மலையாள நண்பரின் மனத்திலெழுந்த மகிழ்ச்சிக்கு ஓர் அளவில்லை. 'புனல்' என்பது தமிழ்ச் சொல்லே. ஆயினும் இக்காலத்தில் அது நாட்டுவழக்கில் இல்லை. ஏட்டுவழக்கில் ஏராளமாக உண்டு, என்று மேலும் கூறி, அந்நண்பரின் இலக்கியப் பசியைச் சிறிது வளர்த்தேன்.

மலையாள நாட்டின் தலைநகரில் பேராசிரியராய் விளங்கிய சுந்தரனார் செவிகளில் எத்தனையோ பழந்தமிழ்ச் சொற்கள் விழுந்திருத்தல் வேண்டும். அச் சொற்களின் பிறப்பையும், சிறப்பையும் மலையாளத்தின் உதவி கொண்டு அவர் தெரிந்திருத்தல் வேண்டும். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம், என்னும் உயர்ந்த நோக்கத்துடன் தமிழ்மொழியோடு மலையாளத்தையும் கற்றால் நலமுண்டு என்று கூறிப் போந்தார் அவர். தமிழ்த்தாயின் கடைசி மகவாகத் தோன்றி மழலை மொழிகளால் மாதாவின் செவிகளை மகிழ்வித்த மலையாளக் குழந்தையைக் 'கவின் மலையாளம்' என்று சுந்தரனார் கூறுவது, அப்பெருமகனாரது மொழி உணர்ச்சிக்கு ஒரு சிறந்த சான்றாகும்.

## தினசரி தியானம்

## பிரம்மாஸ்திரம்

தொண்டர்காள் தூசிசெல்லீர்
பக்தர்கள் சூழப்போகீர்
ஒண்திறல் யோகிகளே
பேரணி உந்தீர்கள்
திண்திறல் சித்தர்களே
கடைக்கூழை சென்மின்கள
அண்டர் நாடு ஆள்வோம்நாம்
அல்லற்படை வாராமே.

மாணிக்கவாசகர்

பெரிய பொருளே, உன் துணையிருந்தால் எனக்குத் தடையேது? உன் துணை இல்லா விட்டால் மற்றதுணைகள் என் செய்யும்?

நேர்மைக்குப் பிரம்மாஸ்திரம் என்றுபெயர். நேர்மையான மனிதன் எதையும் மறைத்து வைப்பதில்லை. தன் செயலை மற்றவர்கள் பார்க்கக்கூடாது. என்று அவன் கருதுவதில்லை. பிறர்க்குத் தீங்கு செய்யாமையால் அவன் அஞ்சுவதில்லை. அவனுடைய நடையுடை பாவனைநேர்மையானவை. அவன் யாரையும் ஏமாற்றுவதில்லையாகையால் யாரும் அவனை ஏமாற்ற முடியாது.

- ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்

## நீர் விநியோகம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால், குடிநீர் பற்றாக் குறையாக உள்ள கிராமங்களுக்கு குடிநீர் விநியோகிக் கப்பட்டு வருகின்றது.

(உ-75)

# கொழும்பு விலையில் பெற்றோல் யாழ்ப்பாணத்திலும் விற்கப்படும்?

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டுக்கு பெற்றோல் ஏ.9 கண்டி விதியூடாக எடுத்துவரப் பட்டதை அடுத்து இலங்கைப் பெற் றோலிய கூட்டுத்தாபன உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது.

யாழ்ப்பாணம் வந்துள்ள இந்த உயர்மட்டக் குழுவினர் காங்கேசன் துறையில் உள்ள இலங்கைப் பெற் றோலியக் கூட்டுத்தாபன எரிபொ ருள் களஞ்சியத்தை பார்வையிட் டுள்ளனர்.

தரைவழியூடாக எடுத்துவரப்படும் பெற்றோலை காங்கேசன்துறையில் களஞ்சியப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்ததுடன் அங்கு அமைக் கப்பட்டுள்ள பெற்றோல் தாங்கிக ளையும் பார்வையிட்டுள்ளனர்.

தரைவழிப்பாதையூடாக எடுத்து வரும் பெற்றோலை கொழும்பு விலைக்கு விற்பது தொடர்பாக இவ் வாரம் முற்பகுதியில் முடிவு செய்ய விருப்பதாகவும் யாழ் வந்த பெற்றோ லிய கூட்டுத்தாபன உயர்மட்டக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

தரைவழிப்பாதை ஊடாக இரு தடவைகள் சுமார் ஒரு லட்சத்து 32 ஆயிரம் லீற்றர் பெற்றோல் யாழ்ப்பாணம் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# இ.போ.ச உயர்மட்ட குழு இன்று யாழ் வருகிறது

(கொழும்பு)

இலங்கை போக்குவரத்துச் சபை யின் பொது முகாமையாளர் எம்.ரட் ணசிறி தலைமையிலான உயர்மட்ட குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

குடாநாட்டில் தற்போது காணப் படும் போக்குவரத்துப் பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ளும் பொருட்டு யாழ்ப்பாணம் வரும் இக் குழுவினர், கோண்டாவில், பருத்தித்துறை, காரைநகர் பஸ் டிப்போக்களுக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆரா யவுள்ளனர்.

அதேவேளை குடாநாட்டில் சேவை யில் ஈடுபடும் பஸ்களின் எண்ணிக் கையை அதிகரிப்பதற்கும் சாரதி, நடத்துநர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கும் விரைவில் நடவடிக் கைகள் எடுக்கப்படவுள்ளதாக வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் எம். மணிவா சகம் தெரிவித்துள்ளார். (க-8)

### ஜனாதிபதியின்...

யிட்ட அறிக்கையில் ஜனாதிபதியின் கைப்பையினுள் வெடிகுண்டு இருந் ததென ரவி கருணாநாயக்க கூறிய தாக ஜனாதிபதியால் கூறப்பட்டது பொய்யானது. அது மட்டுமன்றி அது பொய் என்பது ஜனாதிபதி அறியாததுமல்ல எனக் குறிப்பிட் டுள்ளார். அமைச்சர் அவ்வாறு கூற வில்லை என்பதற்கு அன்றைய கூட் டத்தில் பங்குபற்றிய அமைச்சர்கள் அனைவரும் சான்றுகளாக உள்ள னர். வியாழக்கிழமை காலை பிரத மருடன் பேச்சுக்கள் நடத்தியபோது 48 மணித்தியாலங்கள் சென்றபின் னரே இவ் விவகாரம் பற்றியும் அமைச்சரவையில் இருக்க கருணா நாயக்க அருகதை அற்றவரென வும் ஜனாதிபதி பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

எனவே வெடிகுண்டு பற்றிய கதை பின்னர் தோன்றிய யோச னையே ஆகும். அமைச்சருக்கு எதிராக எடுப்பதாக உத்தேசித்தி ருக்கும் ஏதேனும் ஒரு நடவடிக் கைக்கு ஆதாரமாக இருப்பதற்காக மேற்படி சம்பவம்அமைந்துள்ளது என்று அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (இ)

### வை. கோவை...

தமிழக அரசிற்கு அனுப்பிவைக் கப்படவுள்ள இந்த மகஜர் வவுனியா அரச அதிபர் மூலமாக இந்தியத் தூதுவராலயத்திற்கு அனுப்பிவைக் கப்படும்.

இதேவேளை வை.கோபாலசாமி யின் கைதை கண்டித்தும் விடுதலை செய்யக் கோரியும், களுத்துறை கைதி களை விடுவிக்கக் கோரியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளனர். (வ)

### சமாதான...

லும் அதி உயர் பாதுகாப்பு வலயம் என்று கருதப்படும் இடங்களில் மீள் குடியேற்றம் என்பது உடனடியாக நடைபெறக் கூடியதொரு காரியமல்ல இந்த மீள் குடியேற்றம் பாதுகாப்பு தரப்பினருடன் தொடர்புடையது அல்ல.

இதில் அரசு, புலிகள், பொதுமக கள் ஆகிய முத்தரப்பினரும் தொடரபு பட்டுள்ளனர். அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் புதைக்கப்பட்டுள்ள கண்ணி, மிதிவெடிகள் மற்றும் அதி யுயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியில் புலிகளால் புதைக்கப் பட்டுள்ள கண்ணி வெடிகள் யாவும் அகற்றப்படவேண்டும். அத்துடன் காணி உரிமையாளர்கள் காணிகளை அடையாளம் காணவேண்டும். இவற்றைவிட மக்கள் தாம்குடியேற விருக்கும் பிரதேசங்களில் பாட சாலை, வைத்தியசாலை வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத் துள்ளார்கள். இவைகள் யாவும் இப்போது அவ்விடங்களில் இல்லை. இந்த வசதிகள் எல்லாம் குடியே றும் மக்களுக்கு செய்துகொ டுக்கப்படவேண்டும்.

யாழ் குடாநாட்டில் 51 பாடசாலை களில் இராணுவம் முகாமிட்டிருந்தது. தற்போது 47 பாடசாலைகளில் இருந்து இராணுவம் வெளியேறி விட்டது. மீதியாக உள்ள பாடசாலை களில் தங்கியுள்ள இராணுவமும் ஆகஸ்ட் 2ம் திகதிக்கு முன்னதாக வெளியேறிவிடும்.

பாடசாலைகளில் இருந்து வெளி யேறியுள்ள இராணுவம் வேறு இடங் களில் தங்கியுள்ளனர். அதனை எவரும் தவறாக விளங்கிக் கொள் ளக்கூடாது. யுத்தத்திற்கு தீர்வு எட்டப்படாத வரை இராணுவத்தை கொழும்புக்கு கொண்டுசெல்லமுடி யாது. அதேவேளை அவர்கள் ஒரு மர நிழலில் தங்கியிருக்கலாம் என்று எவரும் எதிர்பார்க்கவும் முடியாது.

யாழ் குடாநாட்டில் பனைவளம் ஆனது பொருளாதார வளர்ச்சியுடன தொடர்புடையதாகும். இத்தகைய பனை வளத்தை நம்பி ஆயிரக்க ணக்கான குடும்பங்கள் வாழ்ந்து வருவதை அறிவோம். இந் நிலையில் ஒரு பனை மரத்தைக் கூட தறிப்பதை நிறுத்துமாறு இராணுவத்திற்கு உத் தரவிட்டுள்ளேன்.

நாட்டில் உண்மையான சமாதா னத்தை ஏற்படுத்துவது என்பது ஓரிரு இரவுகளில் நடைபெறக்கூடிய விடய மல்ல சமாதானப் பணி மிகவும் கஸ்டமான பணியாகும். இரு பகுதி யினரும் நம்பிக்கையுடன் செயற்பட்டு தவறுகள் ஏற்படுமிடத்து அவற்றை தவிர தது நாம் ஒருவரை ஒருவர் புரிந்து மதித்து நடக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வேண்டுகோள விடுத்தார். (வ)

## சுயாதீன ஆணைக்குழுவின் விசாரணை நேற்று கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவக அரசியல் துறைப் பொறுப்பா ளர் செம்மணன் மற்றும் உறுப்பினர் தயாளன் ஆகியோர் தாக்கப்பட்டமை தொடர்பாக விசாரணை நடத்திவரும் சுயாதீன ஆணைக்குழுவின் விசா ரணை நேற்றுக் காலை கொழும்பில பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது.

இளைப்பாறிய விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் ஹரி குண திலக தலைமையில் ஆரம்பமான விசாரணையின்போது நேற்று எவ ரும் சாட்சியமளிக்க முன்வர வில்லை. விசாரணைகள் இன்றும் தொடரும் என அறிவிக்கப்பட்டுள் ளது. (வ)

## முல்லைத்தீவில் இருந்து சிகிச்சைக்காக அனுமதிக்கபட்ட தாய் மரணம்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் இருந்து மேல திக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த தாய்யொருவர் நேற்று உயிரிழந்தார்.

முல்லைத்தீவு 5ம் வட்டாரம் ஆனந்தபுரத்தைச் சேர்நத ஜோசப் நிக்கிலஸ் யூலியற் நிர்மலா(வயது 37) என்பவரே உயி ரிழந்தவராவர். இவரது சடலம் யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

குழந்தை பிரசவித்த பிரஸ்தாப தாய் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு 10 நிமிடங் களில் உயிரிழநததாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித் துள்ளன. (த)

## அம்பன் மருத்துவமனையை இயக்க படையினர் அனுமதி

(திருநெல்வேலி)

வடமராட்சி அம்பன் வைத்திய சாலையை மீள இயக்குவதற்கு படைத தரப்பினர் அனுமதி அளித்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவிடம் விடுத்த வேண்டு கோளுக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (த-43)

# சாவகச்சேரியில் நேற்று உயர்மட்ட மாநாடு

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் மீளக் குடியமர்வது தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

தென்மராட்சி பிரேதேச செயலா ளர் செ.சிறிநிவாசன் தலைமையில் நடைபெற்ற இம் மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ, அமைச்சர் தி.மகேஸ்வரன் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்கள் என். ரவிராஜ், என்.கே.சிவாஜிலிங்கம், பொன்னம் பலம் கஜேந்திரகுமார் ஆகியோரும் படைத்தரப்பில் இராணுவத்தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, யாழ் மாவடடத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் யாழ் மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் ஆகியோரும் தென்மராட்சி மக்கள் நலச்சேவை கள் சங்கத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, வணிகமன்ற செயலாளர டாக்டர் எஸ். அருளானநதம், அதிபர் வி.கைலைநாதன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (வ-77)

## கறுப்பு யூலை மட்டக்களப்பில் நாளை முதல் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

1983ம் ஆண்டு இடம்பெற்ற யூலைக் கலவரத்தை நினைவுகூரும் முகமாக நாளை 23ம்திகதி முதல் 27ம் திகதி வரை மட்டக்களப்பில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட வுள்ளன.

19983ம் ஆண்டு யூலை மாதம் 23ம் திகதி தமிழ் மக்கள் மீது கட் டவிழ்த்துவிடப்பட்ட அராஜக நடவ டிக்கைகளினால் ஓடிய இரத்த ஆற்றை நினைவு கூர்ந்து இந்தக் கறுப்பு யூலை தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது (ம)

## கிறிஸ்தவ பாட ஆசிரியர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட பாடசாலைகளில் 4,5,10,11, ஆகிய தரங்களுக்கு றோமன கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவ பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக் கான முழுநாள் கருத்தரங்கு ஒன்று இன்று காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை யாழ். மத்திய கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர் களை இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-06)


## BIT கல்வியாண்டு 2002/2003
## விரிவுரைகள் ஆரம்பம

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமானி (BIT) தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு, மேற்படி கற்கை நெறிக்கான விரிவுரைகள் சம்பந்தமாகவும், பல்கலைக்கழக பதிவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று 28/07/2002 ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு IIS, தலைமை அலுவலக பிரதான மண்டபத்தில் இடம்பெற இருப்பதால் யாழ் மாவட்டத்தில் இருந்து தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"BIT பட்டப்படிப்பிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே ஒரு நிறுவனம்"

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.



இடம்பெற இருப்பதால் யாழ் மாவட்டத்தில் இருநது தெரிவுப் பரீட்சையில்
சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"BIT பட்டப்படிப்பிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே ஒரு நிறுவனம்"

இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்.




டிக்கைகளினால் ஒழிய இறந்த ஆத்மா நினைவு கூர்ந்து இந்தக் கறுப்பு யூலை தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது (ம)

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர களை இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த-06)

எங்கும் விறுவிறுப்புடன் விற்பனையாகிறது

வலம்புரியின்

வாரமலர்

சங்கு நாதம்

அரசியல் – அறிவியல் – ஆன்மீகம் அடங்கிய அறிவிப்புப் பொக்கிஷம் ஒவ்வொரு திங்கட்கிழமைகளிலும் நீங்கள் தவறாது வாசிக்க வேண்டியது.

தினசரிச் செய்தியைத் தாங்கி வரும் வலம்புரியுடன் வாரமலர் சங்குநாதமும் சேர்ந்தே கிடைக்கின்றது.

விலை ரூபா 14 மட்டுமே

தலைநகர் கொழும்பிலும் வவுனியாவிலும் சங்குநாதம் பரபரப்புடன் விற்பனையாகிறது.

விலை 17 ரூபா மட்டுமே

## வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியில்

# படையினர் வெளியேறிய வீடுகளில் குடியிருக்க அனுமதி மறுப்பு

(திருநெல்வேலி)

வல்வெட்டித்துறை வேம்படிக்கும் ஆதி கோவிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் 20ற்கும் மேற்பட்ட வீடுகளில் முகாமிட்டிருந்த இராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறியதை அடுத்து தமது வீடுகளில் குடியமரச் சென்ற வீட்டு உரிமையாளர்களுக்கு அனுமதி வழங்க படையினர் மறுத்துள்ளனர்.

தமது வீடுகளில் மீளக் குடியிருக்கும் முயற்சியில் ஈடுபட்ட வீட்டு உரிமையாளர்களை படையினர் தடுத்ததுடன் மீளவும் முகாமமைக்கும் நோக்குடன் முட்கம்பிகளையும் கம்பிக்கட்டைகளையும் அப்பகுதிக்கு கொண்டு சென்றனர்.

இதனால் பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையில் நேற்று கடுமையான வாக்குவாதம் இடம்பெற்றது. (த-43)

5ம் தர மாணவர்களே!

வலம்புரி தரும் புலமைப் பரீட்சை மாதிரி வினாத்தாளில் எதிர்வரும் புதன்கிழமை உங்கள் பரீட்சைக்கு உதவும்

கட்டுரைகள்

வெளிவருகின்றன.
தவற விடாதீர்கள்.

## மாடிப்படியில்

# தடக்கி விழுந்து காயம்

(யாழ்ப்பாணம்)

மேல் மாடியிலிருந்து இறங்கி வரும் போது கால் தடம்புரண்டு விழுந்ததினால் காயமடைந்த நிலையில் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனைக்கோட்டையில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அரியாலைச் சேர்ந்த தனபாலசிங்கம் தர்மராசா (வயது 29) என்பவரே காயமடைந்தவராவார். (த-02)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரியின் வாரமலர் பக்கங்கள் - 16

# சங்கு நாதம்

Sankunatham

திங்கட்கிழமை (22-28.யூலை.2002)

சங்கு:- 03 வள்ளுவர் ஆண்டு 2033 தொலை பேசி 3378 நாதம்:- 21

பக்கம்-02



அரசியல் அலசல்

பக்கம்-08



மௌனத்தின் தேடல்கள்

பக்கம்-11



மகளிர் உலகம்

பக்கம்-14



சிறுவர் அரங்கம்

பக்கம்-16



சினிமாச் சிதறல்

## கடல் நடமாட்டம் தரும் சர்ச்சை
## அரசு- புலிகள் உறவை குலைக்குமா?



கனடா பொங்குதமிழில்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் வாரமலர்

# கடல் நடமாட்டம் தரும் சர்ச்சை

# அரசு - புலிகள் உறவை குலைக்குமா ?

அரசும் - விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் காலம் கடந்து செல்வதனால் இரு தரப்புக்கும் இடையிலான உறவில் பகைமை ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரித்து வருகிறது. இரண்டு குடும்பங்கள் ஒரே வீட்டில் நீண்ட காலம்





சேர்ந்திருந்தால் எப்படி பிணக்குகள் ஏற்படுமோ அதே நிலைதான் அரசும் - விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கும் ஏற்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னோடியாக ஏற்படுத்தப்பட்ட ஓர் பூர்வாங்க நடவடிக்கையே புரிந்துணர்வு ஒப்பந்தம். எனினும் ஒப்பந்தத்தில் அரசு இணங்கிக் கொண்டவாறு ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலிருந்து படையினரை முழுமையாக வெளியேற்றாத நிலையில் பேச்சுவார்த்தைக்கான திகதி பற்றிப் பேசசு நடத்துவதே முடியாத காரியமாகவுள்ளது.

## படையினருக்கு புதிய சிக்கல்

ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் பொது இடங்களிலிருந்து படைகள் முழுமையாக வெளியேற வேண்டும் என்பது ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றப்படவேண்டியதொன்றாகும். எனினும் `நடைமுறைச்சிக்கல்கள் காரணமாக அது சாத்தியப்படாமல் போக, ஆகஸ்ட் 2ம் திகதிக்கு முன்னர் பொது இடங்களிலிருந்து படையினர் முழுமையாக வெளியேறி விடுவர் என்ற வாக்குறுதியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் வழங்கியுள்ளார்.

ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்று மாதங்களில் பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறுவர் என்ற நிபந்தனையையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவே ஏற்றுக் கொண்



டவர். எனினும் அதனை அவரால் நடைமுறைப்படுத்த முடியாமல் போயிற்று. அதாவது சமாதான முயற்சியின் அடிப்படையான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் காலதாமதமெனில் இனப் பிரச்சினைக்கான தீர்வை எட்டுதல்

**விதுரன்**

என்பது இலேசான காரியமாக இருக்க முடியாது. எதுவாயினும் ஆகஸ்ட் 2ல் பிரதமரின் வாக்குறுதி நிறைவேற்றப்படுமென்பது உறுதி. எனினும் இவ் விடயத்தல் புதிய சிக்கலும் ஏற்படவே செய்கிறது. அதாவது ஆலயங்கள், பாடசாலைகள், பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறுவது என்பது அவ்விடத்திலிருந்து முற்றாக வெளியேறுவதை குறிக்கிறதா? அல்லது குறித்த இடத்திலிருந்து வெளியேறி அருகில் புதிய முகாம்களை அமைப்பதற்கு அனுமதிக்கிறதா? என்ற பிரச்சினை எழவே செய்கிறது. பொது இடங்களிலிருந்து வெளியேறி மீண்டும் அருகிலுள்ள இடங்களில் புதிய முகாம்களை அமைக்கும் போது படையினர் வெளியேறியதனால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்பதாக நிலைமை முடிவதோடு, புதிய முகாம்களை அமைப்பதற்காக மீண்டும் பனை மரங்களும், தென்னை மரங்களும் தறிபடப்போவதும் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறுவதன் மூலம் தமிழர் பிரதேசத்தில் ஓர் வெளிப்பு ஏற்பட வேண்டுமே ஒழிய வெளியேறிய இடங்களுக்கருகில் புதிய முகாம்களை அமைப்பது சமாதான முயற்சிக்கு எவ் வகையிலும் உதவப் போவதில்லை.

இத்தகையதோர் சூழ் நிலையில் படையினருக்கெதிரான ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் நடைபெறப் போவது தவிர்க்க முடியாததென்பதோடு இராணுவமும் புதியதோர் பிரச்சினைக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

## இராணுவ முடக்கம் எதுவுமில்லை

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறுவது என்பது படையினரை முடக்கம் செய்வதாகவே அமைய வேண்டும். அதாவது




பொது இடங்களிலுள்ள படையினரை வெளியேற்றி அவர்களை பலாலிப் படைத்தளத்தில் முடக்கம் செய்யும் போதே பொது இடங்களிலிருந்து படையினர் வெளியேறியதன் நன்மைகளை மக்கள் நுகர முடியும். ஆனால் அத்தகையதொரு முடக்க நிலையை அரசு மேற்கொள்வதாக இல்லை. யாழ் குடா நாட்டில் படையினர் இருந்த இடங்களில் அல்லது அதற்கு அருகில் தொடர்ந்தும் இருப்பது என்ற முடிவானது, மக்களின் மீள் குடியமர்வுக்கோ அல்லது விவசாயச் செய்கைக்கோ இடமளிக்கப்போவதில்லை, ஆக ஏதோ நாம் வாழ்ந்த பூமியை, இருந்த வீட்டை சென்று பார்த்து வந்தோம் என்ற திருப்தியை தருமேயொழிய இடம்பெயர் முகாம்களின் குறைப்புக்கோ அல்லது இடம்பெயர்ந்து படும் அவல நிலைக்கோ தீர்வு காணப்போவதில்லை என்பது உறுதி.

## புரிந்துணர்வில் புதிய சிக்கல்

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் பல சிக்கல்கள் எழுந்திருக்கும் வேளையில் சமாதான முயற்சியையே ஆட்டம் காண வைக்குமளவிற்கு, புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் புதியதொரு சிக்கல் எழுந்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும், விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் சமாதான முயற்சியை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதேயொழிய சமாதான முயற்சியை குழப்பும் நோக்கம் அங்கு இருக்க நியாயம் இல்லை.

ஆனால் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குட்பட்ட கடற்பரப்பில் இருந்து புதிய சிக்கல் புதிய வடிவம் பெற்றுள்ளது. கடற்பரப்பில் விடுதலைப்புலிகள் நடமாடுவது புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முரண் என்ற கருத்து அரச தரப்பில் நிலவுகிறது. அரசின் இத்தகைய



நிலைப்பாட்டிற்கு அடிப்படைக் காரணமாக இருப்பவர் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சந்தகிரி.

அவரின் கருத்தின்படி கடற்பரப்பு கடற்படையினரின் கட்டுப்பாட்டிற்குள் இருப்பது அவசியம். கடற்பரப்பின் ஊடாக விடுதலைப் புலிகள் ஆயுதம் கடத்தி வருகின்றனர். எனவே கடற்பரப்பில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் நடமாடுவது தடை செய்யப்பட வேண்டும் என்பது அவரின் நிலைப்பாடு. கடற்படைத் தளபதியின் கருத்திற்கு பாதுகாப்பு அமைச்சு தலை ஆட்டுவதும் புலனாகிறது.

இதனால் கடற் பரப்பில் விடுதலைப்புலிகள் நடமாடும் விடயத்தில் அரசு மிகவும் இறுக்கமான போக்கை கடைப்பிடிக்க முனைகிறது. இதன் ஒரு வெளிப்பாடே இரணைதீவு கடற் பரப்பில் இடம்பெற்ற சம்பவம் ஆகும்.

இரணைதீவுக் கடற் பரப்பில் விடுதலைப்புலி உறுப்பினர்கள் நடமாடிய சம்பவம் ஆனது ஓர் பெரிய பிரச்சினையாக எடுக்கப்படவேண்டிய ஒன்றல்ல. ஆனால் கடற்படைத் தளபதி தனது கருத்தை நியாயப்படுத்துவதற்காக இரணைதீவுக் கடற்பரப்பில் இடம்பெற்ற சம்பவத்தை ஓர் பெரிய விவகாரமாக அரங்கேற்றினார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் விடுதலைப்புலிகள் தமது அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளவும், சுதந்திரமாக நடமாடவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் வழியமைக்கும்போது புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அடங்கும் கடற்பரப்பில் விடுதலைப்புலிகள் நடமாடுவதை தடுப்பது விசித்திரமாக அமைந்தாலும், புலிகள் கடற் பரப்பின் ஊடாக ஆயுதம் கடத்துகின்றனர் என்ற சந்தேகம் அரசிடம் வலுப்பெற்றிருப்பதே புதிய பிரச்சினை எழுவதற்கு அடிப்படைக் காரணமாக உள்ளது.

## புலிகள் தரப்பு நியாயம்

இலங்கைக் கடற் பரப்பில் புலிகள் நடமாட்டம் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் விலாவாரியாக எதனையும் குறிப்பிடாவிடினும், அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது இலங்கையில் இரண்டு படைகள் இருப்பதை ஏற்றுக்கொள்வதாக அமைந்துள்ளது. அவ் வகையில் விடுதலைப்புலிகள் கடற்பரப்பில் நடமாடுவதை எவராலும் தடுக்க முடியாது என்பது விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் வாதம்.


அதாவது அரசுடன் விடுதலைப் புலிகள் ஒப்பந்தம் செய்வதற்கு முன்னர் கடற் பரப்பில் கடற் புலிகள் சுதந்திரமாக நடமாடினார்கள். அப்போதெல்லாம் கடற்புலிகள் நடமாடாத நேரங்களிலேயே கடற்படை தனது நட்மாட்டத்தை வைத்துக் கொண்டது. சிலவேளைகளில், கடற் புலிகள் கடற்பரப்பில் நடமாடும்போது தெரிந்தோ தெரியாமலோ சந்தித்த கடற்படையினருக்கு புலிகள் வழங்கிய பரிசு என்ன என்பதையும் அரசு அறியாமல் இல்லை. நிலைமை அப்படி இருக்கும்போது சமாதான நோக்கோடு செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் புலிகளின் கடல் நடமாட்டத்தை எவ்வகையில் தடுக்க முடியும் என்பது விடுதலைப்புலிகள் தரப்பு நியாயமாக இருக்க முடியும்.

## எதிர்வாதம் வலுக்கிறது

இரணைதீவுக் கடற்பரப்பில் எழுந்த விவகாரம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்ற கருத்தை தென் இலங்கையில் தோற்றுவித்துள்ளது. ‘‘மீளாய்வு’’ என்ற கருத்து தனியே எதிர்க்கட்சிகளிடம் மட்டும் ஏற்படவில்லை, மாறாக பாதுகாப்பு அமைச்சரின் செயலாளரும் இதே கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட போது ஆர்ப்பரித்த பொதுஜன ஐக்கிய முண்னணி, ஜே.வி.பி போன்ற கட்சிகள் சில மாதங்கள் அமைதியாக இருந்தன. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போதிலும், விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கமோ, சமாதானப் பேச்சுவார்த்தையோ நடைபெறாமல் இருப்பதே எதிர்க்கட்சிகளின் அமைதி நிலைக்கு காரணமாக இருந்தது.

இப்போது வெறு வாய்க்கு அவல் கிடைத்தது போல், இரணைதீவுக் கடற் சம்பவம் எதிர்க்கட்சிகளை முடுக்கிவிட்டுள்ளது. அதன் வெளிப்பாடே புரிந்துணர்வு ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்படவேண்டும்



என்ற கருத்தாகும்.

இக் கருத்துக்கு பாதுகாப்பு அமைச்சும் உடந்தையாக இருந்த போதிலும், அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் புரிந்துணர்வு ஒப்பந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டும் என்ற பேச்சுக்கே இடமில்லையென அடித்துக் கூறிவிட்டார். அமைச்சர் பீரிஸின் அறிவிப்பு காலம் உணர்ந்து விடுக்கப்பட்டதாக இருந்தபோதிலும், புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு தொடர்ச்சியான சிக்கல்களை கடற்பரப்பு விவகாரம் ஏற்படுத்தப்போவது தவிர்க்க முடியாததொன்றே. கடற்பரப்பில்



விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தை அரசு தடைசெய்யமுற்படுமாயின் அது அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உறவுகளை பாதிக்கும் என்பது சர்வநிச்சயம். புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டு ஐந்து மாதங்கள் முடிவுற்ற நிலையிலும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசைக்கு செல்ல முடியாத அரசு புலிகளுடனான நல்லுறவைக் குலைக்க முற்படுமாயின் அது புரிந்துணர்வு ஒப்பந்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதுடன் சமாதானப் பேச்சுக்கே இடமில்லாமலும் போய் விடும். சமாதானத்தை எப்பாடுபட்டும் ஏற்படுத்துவோம் என்ற ஓர்மத்துடன் ஆட்சிப் பீட மேறிய ஐக்கிய தேசிய முன்னணி அரசு விடுதலைப் புலிகளுடன் பகைத்துக் கொள்ளாதவாறு நடந்துகொள்வது மிக மிக அவசியம் ஆகும். அவ்வாறு விடுதலைப்புலிகளுடன் ஓர் நல்லுறவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும், ஐ.தே.மு.அரசும் ஏற்படுத்தவேண்டுமாயின் கடற்படைத் தளபதியின் கட்டுக்குள் நின்று பிசகாமல் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் எவ்வாறு புலிகள் சுதந்திரமாக நடமாடமுடியுமோ அதேபோன்று கடற்பரப்பிலும் சுதந்திரமாக நடமாடுவதற்கு அரசு அனுமதி வழங்கவேண்டும்.


வலம்புரி + சங்குநாதம்
வவுனியா, கொழும்பு
விலை ரூபா:- 17.00


*மின் பாவனையாளர்களே!*

**NIPPON** ஏனஜி பல்பை பயன்படுத்தி
உங்கள் மின்சார கட்டணத்தை
5 மடங்காகக் குறையுங்கள்



| விலை | ஏனஜி பல்ப் | சாதாரண பல்ப் |
|---|---|---|
| 295/- | 11w | 55w |
| 340/- | 13w | 65w |
| 340/- | 15w | 75w |
| 450/- | 18w | 90w |
| 470/- | 20w | 100w |
| 490/- | 22w | 110w |
| 500/- | 26w | 130w |



160V - 240V வரை தொழிற்படக்கூடியது.

மேற்குறிப்பிட்ட ஏனஜி பல்புகள் 1 வருட உத்தரவாதத்துடன் எமது நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படுகின்றது.

5 பல்பிற்கு மேல் கொள்வனவு செய்பவர்களிற்கு 10 %கழிவு (15.08.2002 வரை) வழங்கப்படும்.

விபரங்களுக்கு:

**JAFFNA TECHNICAL INSTITUTE**
11/10B, ஸ்ரான்லி வீதி, (முட்டாஸ்கடைச் சந்தியருகில்)
யாழ்ப்பாணம். T.P.No: 3335

**குறிப்பு:-** கீழ் குறிப்பீட்ட நிறுவனங்களிலும் விற்பனை செய்யப்படுகின்றது.

1. **J.T.I.** No.07, Palaly Road, Jaffna.
2. **J.T.I.** 357, Clock Tower Road, Jaffna.
3. **Sriram Electronics** 105, Stanley Road, Jaffna.
4. **P.R. Communication** 14, Jubilee Bazaar, Jaffna.
5. **Ram CD World Electronic** 220, Stanley Road, Jaffna.
6. **Kinstan Electronics** 62/30, Stanley Cross Road, Jaffna.
7. **Rajan Electronics** Bus stand, Achchuvely.

# சங்க இலக்கிய ஆய்வுகளில் தனிநாயகம் அடிகளார்

தன்னுடைய ஆய்வுக் கருத்துக்களை உலகக் கருத்தரங்குகளிலே எடுத்துக் கூறுவதில் அடிகளார் மிகவும் முயற்சியுடையவராக இருந்துள்ளார். நமது நாட்டிலே நடைபெறும் நுண் ஆய்வுகளை வெளிநாட்டவரும் அறிய வேண்டும், அப்போதுதான் எம்மவர் புலமையும் அங்கு மதிக்கப்படுமென எண்ணிய அடிகளாரின் செயற்பாடு எம்மவர்க்கெல்லாம் வழிகாட்டியாக அமைந்துள்ளது.

அடிகளாரின் ஆய்வுப் பணியிலே பலரும் தொடர்புறவேண்டி அவர் ஆரம்பித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இன்று அவர் வழி நின்று பணி செய்ய ஒரு நிறுவனமாக நிலைத்துள்ளது. 07.01.1964 டில்லியிலே உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் உருவாக அடிகளார் முன்னின்று உழைத்தார். உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகள் நடத்தித் தமிழாய்வை உலகளாவிய நிலை செய்யும் பணியையும் அவரே தொடக்கி வைத்தார். அவருடன் அக்காலத்திலே உடன் நின்று உழைத்தவர் அவருடைய நோக்கத்தின் இலக்கை நன்குணர்ந்திருந்தனர். இன்று தமிழ் மொழி உலக அரங்கிலே ஆய்வு நிலையிலே வைத்துப் பேசப்படுவதற்கு இதுவே காரணமாயிற்று. உலகத்திலே உள்ள தமிழரும், வேற்றுமொழியாளரும் ஓரிடத்திலே கூடி ஆய்வு செய்ய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பயன்படுகிறது. அது அடிகளுடைய இறவாத தமிழ்ப்பணியாக என்றும் தொடரவுள்ளது.

இன்னும் இந்நிறுவனத்திலிருந்து வெளிவரும் Journalof Tamil Studies என்னும் ஆய்விதழும் தமிழாய்வு பற்றிய கருத்துக்களையும் செய்திகளையும் உலகெங்கும் எடுத்துச் செல்லும் அஞ்சலாகத் திகழ்கிறது. அடிகளாரின் அன்றைய தமிழ்த் தூதை இன்று அது நிறைவேற்றி வருகிறது. இந்த ஆய்விதழிலே 1972ஆம் ஆண்டு அடிகளார் எழுதிய 'தொல்காப்பியம் மிகப்பழைய காவியம்' என்ற ஆய்வுக் கட்டுரையே அவருடைய இறுதிக் கட்டுரையாக அமைந்தது. சங்க நூல்கள் பற்றிய ஆய்வுக்குத் தொல்காப்பியம் பற்றிய அறிவும் இன்றியமையாதது என்பதை அடிகளார் நன்குணர்ந்திருந்தார்.

அடிகளாரின் சங்க இலக்கிய ஆய்வு அவருடைய குருத்துவப் பணிக்கு என்றுமே இடையூறாக அமையவில்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.தனக்கு முன்னே வாழ்ந்த சுவாமி ஞானப்பிரகாசர் தாவீது அடிகள் போலத் தமிழ்ப் பணியை ஆற்றியுள்ளார். பன்மொழிப் புலமையால் இவரது முன்னோடிகளும் தமிழ்மொழியின் வளத்தை உலகறியச் செய்தனர். ஆனால் அவர்களின் தமிழ்ப்பணி மதப் பணியின் ஒரு கருவியாக இருந்தது எனக் கருதப்பட்டது. ஆனால் தனிநாயக அடிகளாரின் தமிழ்ப்பணி சற்று வேறுபட்டது போலக் காணப்படுகின்றது. மதத்துடன் நேரடித் தொடர்பற்ற அவருடைய தமிழ்ப் பணியால் குருத்துவப்பணி குறைவுபடவில்லை.

**''என்னை நன்றாய் இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே'**

என்ற திருமூலருடைய திருமொழியைத் தனிநாயக அடிகளார் தனது வாழ்க்கைக்கும் ஏற்றுக் கொண்டார். ஒரு மொழியால் உலகமெல்லாம ஒன்றாக்கும் பணியை மேற்கொண்டார். அவருடைய குருத்துவ வாழ்வும் தோற்றமும். தமிழ்மொழியின் வளத்தை உலகெல்லாம் பரப்ப உடன் நின்றன. இதனால் மறை வாழ்விலும் தனிநாயக அடிகள் தனக்கென ஒரு புதிய வழியைத் தேர்ந்தார். நெடுந்தீவிலே பிறந்த ஒருதமிழ் மகன் உலகமெல்லாம் அறிந்த குருத்துவப் பணியில் வாழும் திருமகன் ஆகியமை குறிப்பிடத்தக்கது. அவருடைய பேச்சுத்திறன் அவரது மறைவாழ்வுத் தோற்றத்தின் பயனை வெளிப்படுத்தியது. அந்த வகையிலே இன்றைய மறை வாழ்வுக்குத் தம்மைக் கொடையாக்கியவர்க்கு ஒரு புதிய வழி காட்டியாய் அமைந்துள்ளார்.

**பேராசிரியர்.அ.சண்முகதாஸ்**

தனிநாயகம் அடிகளைத் தமிழ் கவர்ந்தது. அதனால் அவர் தமிழ்த் தூதரானார். ஆய்வு அவரை புலமையாளனாக்கிற்று. அவர் சங்க இலக்கிய ஆய்வாளரானார். குருத்துவப் பணி அவரைச் செம்மைப்படுத்திற்று. அவர் உலகறிந்த தமிழ் மறையாளர் ஆனார். இன்று அவருடைய வாழ்க்கை தமிழ் வரலாற்றில் நன்கு ஆவணமாகி விட்டது. தமிழ்மொழியைத் தனக்குத் தாய் மொழியாகத் தந்த இறைவனுக்கு அவர் நன்றியுடையவராய் என்றும் வாழ்ந்தார். அவர் வழி நின்று நாமும் எம்மாலான தமிழ்ப் பணியை உலகளாவிய நிலையிலே செய்வதற்கு ஒரு உந்து சக்தியானார். அவர் வாழ்ந்த காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என நாம் பெருமைப்பட வைத்த தமிழ்த் தூதர் தனிநாயகம் உலகம் உள்ளமட்டும் எமது தமிழ் ஆய்வின் வழிகாட்டியாய் நின்று வாழ்த்துவார்.

* * *

# புதிய ஏற்பாடு



*மனமே*
*இழிந்தவர்க்கும் கூட*
*இன்னும்பணிவு காட்டு*

*சாக்கடையிலும்*
*தாழ்ந்து பணிந்தோடிவரும்*
*தண்ணீர் போல*

*நாவே*
*இன்னும் கொஞ்சம் மௌனம் கா*
*வாயில்லாச் சில்லறைகள் சத்தமிட்டாலும்*
*வாய்திறந்தும் பேசாத சுருக்குப்பை போல*

*நெஞ்சே*
*துயரத்திலும் நன்மை காண்*
*மரணம் வரைக்கும் சென்ற விதை*
*இன்னொரு ஜனனம் காண்பது போல*

*உயிரே*
*இன்னும் கொஞ்சம் ஊறிவா*
*பொழுது சாயச்சாய*
*நீளம்கொள்ளும் நிழல் போல*

*உணர்வே*
*கலங்குதல் தவிர்*
*கடமை செய்யும் போது*
*கண்கலங்காத*
*வெட்டியான் போல*

*அறிவே*
*இன்னும் கொஞ்சம் அடக்கமாயிரு*
*எல்லாமிருந்தும் மௌனம் காக்கும்*
*நூலகம் போல.*

*மனமே*
*இன்னும் கொஞ்சம் ஆசை அறு*
*சுற்றம் உலகைச் சூழ்ந்திருந்தாலும்*
*ஒட்டாதுலவும் காற்றைப் போல*

*எண்ணமே*
*நலிந்த பொழுதிலும் நம்பிக்கை கொள்*
*தட்டான் தட்டலில்*
*உதிரும் தங்கமும்*
*நகையாகுமென்று நம்புதல் போல*

*இளமையே*
*இன்னும் கொஞ்சம் கோபம் கொள்*

*நிலக்கரிக்குள் உயிரூட்டி*
*எந்திரம் தள்ளும்*
*நெருப்பைப் போல*

*உடலே*
*இன்னும் கொஞ்சம் உறுதி பெறு*

*தன்னிலும் வலியது*
*தாங்கிச் சுமக்கும்*
*தண்டவாளம் போல*

*ஞாபகமே*
*பகைமை மற*

*உயரப்பறக்கப் பறக்க*
*மனிதன் கிழித்த கோடுகள்*
*மறைவது போல*

*காலே*
*சுயமாய் நில்*
*இரவல் ஒளிகொள்ளும்*
*சந்திரன் போல் தேயாமல்*
*சொந்த ஒளி கொள்ளும் சூரியன் போல*

*விழியே*
*எதிலும் நல்லது காண்*
*வேப்பம் பூவிலும்*
*தேன்பிரித்தறியும் தும்பியைப் போல*

*முயற்சியே*
*இலட்சியத்தோடு*
*இலக்குத் தொடு*
*பயணத்தின் இறுதிவரை*
*கூடு துறந்து விடாத*
*நத்தையைப் போல*

*தோளே*
*இன்னும் இன்னும் சிரமம் தாங்கு*
*ஊருக்கு நிழல் வழங்க*
*தன் தலையில் வெயில் தாங்கும்*
*விருட்சம் போல*

# சங்ககால இலக்கியம்

சங்ககாலத் தமிழ் இலக்கியங்கள் என்னும் பெயரோடு இன்று நம்மிடம் இருப்பவை பத்துப் பாட்டும், எட்டுத் தொகையுமே ஆகும். இவற்றிலும் காலத்தால் முற்பட்டதாகிய தொல்காப்பியத்துள் காணப்படும் சில குறிப்புக்களாலும் இவற்றுள் வரும் சில செய்திகளாலும் பண்டைய உரையாசிரியர் உரைப்பகுதிகளாலும் பொதுவாக இலக்கிய வரலாற்று முறைமையாலும் இவற்றுக்கு முற்பட்ட இலக்கியங்கள் பல இருந்திருக்க வேண்டுமென்பது தெளிவாகப் புலப்படும். அத்தொல்லிலக்கியங்கள் எவ்வெவ் வகையில் எவ்வெவ் வடிவங்களில் இருந்தன என்பதை அறிய இயலவில்லை.

'என்றும் கிழியாதென்பாட்டு.' என்று கூறப்படுவதற்கேற்ப அழிபடாது கிடைக்கும் பாட்டும், தொகையும் கொண்டு சங்ககால தமிழ் இலக்கியங்களின் சிறப்பியல்புகளுள் சிலவற்றைக் குறிப்பிட முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொல்காப்பியர் வகுத்துரைத்த பண்டைத் தமிழ் இலக்கிய நெறியை ஒட்டியே இச்சங்க இலக்கியங்கள் அகம், புறம் என்னும் இரு கூறுகளையும் எடுத்தியம்புகின்றன. அகத்தால் உணரப்படுவனவற்றுள் தலையாயஇன்பத்தை அகம் என்றும், பிறவற்றை புறம் என்றும் கொண்டு விளங்கிற்று தமிழ் இலக்கிய நெறி.

''அறம், பொருள், இன்பம், வீடடைதல், நூற்பயன்.'' என்னும் கருத்தை விழுமியதாகக் கொண்டோர் அந்நான்கையும் அகம், புறம் என்னும் இவ்விரண்டினுள் அடக்கினர்.

## அகத்தின் சிறப்பு

பிறப்பொருள் பற்றிய இலக்கியங்கள் பண்டைத் தமிழர் தம் புறவாழ்வை தெளிவாகக் துலக்குகின்றன.

''நெல்லும் உயிரன்றே நீரும்
உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர் தலை
யுலகம்''

எனக் கொண்டவர்களின் வாழ்வைப் புலப்படுத்து வன ஆதலால் சங்கப்புற இலக்கியங்கள் அரசர் குறு நில மன்னர் போன்ற வள்ளியோரையும் ஏனை ஒள்ளியோரையும் அவரோடு தொடர்புடைய பிறரையுமே காட்டி விளக்கிச் செல்கின்றன. ஆனால் புறத்திற் காணப்படும் இதனை நாம் அக இலக்கியங்களுள் காண இயலவில்லை. அங்கு கூறப்படும் ஒழுக்கம் முழுதும் மன்னர் முதலியோருக்குரியன. என்று கூறுவதற்கு சிறிதும் வாய்ப்பில்லாதபடி பொது மக்களின் அக ஒழுக்கத்தையே அவை முற்றிலும் எடுத்துக் காட்டுகின்றன. புறத்தே காணப்படும் வேறுபாடு அக உணர்வில் இல்லாமை இதற்குக் காரணமாகலாம். ஆயினும் அடியோர் வினை வலர் முதலியோர் பண்பாடு சிறக்கப் பெறாமையால் இவ் ஒழுக்க நெறிக்கு ஏற்புடையராம்.

## அகத்தின் மிகுதி

சங்க இலக்கியங்களிலேயே அகப் பொருள் பற்றியவை மிகுதியாக விளங்குகின்றன. புற ஒழுக்கத்திலும் அக ஒழுக்கமே ஒரு சமூகத்தைச் செம்மைப்படுத்தி உயர்த்த இன்றியமையாதது என்பதால் அதனையே பண்டைப் புலவோர் மிகுதியாகப் பாடினர். மக்களைக் கவர்வதில் அகச் செய்திகளுக்கு தனியாற்றல் உண்டு என்பதோடு அவை சுட்டி ஒருவர் பெயர் குறிக்கப் படாமல் பொதுவாக ஒழுக்கக் கூறுகளை மட்டும் விளக்கிச் செல்வதால் காய்தல், உவத்தல் அகற்றி அவை மக்களால் நன்கு போற்றப்பட்டன என்பதும் அதற்கு காரணமாகலாம்.

அக இலக்கியங்கள் நமக்கு மற்றொரு சிறப்புத் தகவலையும் அளிக்கின்றன. அக்காலத்தில் தமிழ் மகளிர் வீரர் செறிந்த ஆடவரையே விரும்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் அவ்வாறு விரும் பியதால் அக்கால ஆடவரும் சிறந்த வீரர்களாகத் திகழ்ந்தனர். அத்துடன் வினை வல்லவர்களாகவும் ஆடவர்கள் இருக்க வேண்டும் என்று மங்கையர்



எதிர்பார்த்தனர். ஆடவர்கள் வினையே உயிராகக் கொண்டிருப்பர் என்பதனை

''வினையே யாடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க் காடவ ருயிரென
நமக்குரைத் தோரும் தாமே
அழாஅ றோழி யஞுங்குவர் செலவே''

என்னும் குறுந்தொகைப் பாட்டு எடுத்துக் காட்டுகின்றது. பெண்ணுக்கு ஆண் உயிர், ஆணுக்கு வினை உயிர் என்றிருப்பதால் உலக முன்னேற்றம் தடைப்படாது. ஆணுக்கு வினை உயிர் என்பதால் அவனுக்கு பெண் மீது அன்பில்லை என்றோ பெண்ணுக்கு ஆணுயிர் என்பதால் அவளுக்கு வினை மீது ஆர்வம் இல்லையென்றோ கூற முடியாது. பெண்ணுக்கு ஆண் உயிர் ஆணுக்குப் பெண் உயிர் என்றால் அவ்வுணர்வு சுழலும் வட்டமாய் முற்றுப் பெற்று விடும்.

## புலமையின் தலைமை

புறப்பொருள் பற்றிய இலக்கியங்களில் அரசர்க்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டிருந்தது. அரசர்களது அகம், புறம் ஆகிய இரு வாழ்விலும் புலமை தலைமை வகித்திருக்கிறது. அரசியலின் எல்லாக் கூறுகளிலும் புலவர்கள் புகுந்து செயற்பட்டிருக்கிறார்கள். அன்றைய அரசு வீரம் மிகுந்ததாக இருந்தது போன்றே புலமையும் எதற்கும் சாயாத, தளராத திண்மை உடையதாக விளங்கிற்று. சங்க நூல்களில் வீரம், ஈகை முதலிய சிறப்புப் பண்புகளே போற்றப்பட்டன. அவற்றை உடைமையாக உடையோரும் போற்றப் பட்டனர்.அரசு புலமையை போற்றியிருக்கிறது.

வறுமையால் வாடியோர் பாடியவையொன்று சங்கப் பாடல்களை ஒதுக்கி விடமுடியாது. வறுமை புலமையை அணுகவேமுடியாது.புலவர்கள் வாழ்வு பரிசில் வாழ்வேயன்றி இரந்து வாழும் வாழ்வன்று. சங்கப்புறபாடல்கள் அனைத்துமே வறுமையைக் கூறி பரிசில் வேண்டுவனவாய்அமைந்தவை அல்ல என்பதையும் மறுப்பதிற்கில்லை. புலவர்கள் எவரும் தம் வறுமைக்காகப் பாடல்கள் பாடவில்லை என்பதே உண்மை.

## ஆற்றுப்படை

புறப் பொருள் பற்றிய வற்றுள் ஆற்றுப்படையென்பது தனிச்சிறப்புடைய இலக்கிய வகையாகும். வள்ளியோரை நாடிச் செல்லும் நெறி கூறும் முறை. இவ்வகை இலக்கியத்தின் தோற்றக் காலத்தையும் காரணத்தையும் பல சங்க இலக்கியங்கள் விரிவாக உணர்த்தக் காணலாம்.

சங்க இலக்கியங்கள் நாட்டையும் நகர் ஊர் முதலியவற்றையும் கண் முன் கொணர்ந்து நிறுத்தும் ஆற்றல் பெற்றவை என்பதற்குப் பட்டினப்பாலை சான்றாகும். சங்கால தமிழகத்தை மாசின்றிக்காண இவ்விலக்கியங்கள் துணை செய்யும்.

## பதிற்றுப் பத்து

பதிற்றுப் பத்து மற்றொரு சிறப்பு வாய்ந்த இலக்கியமாகும். சேர மரபில் வந்த பத்து அரசர்களைப் பற்றிப் பத்துப் பத்துப் பாடல் கொண்ட இந்நூல் தமிழர் வரலாற்றுணர்வுக்கு முன்மாதிரியாக திகழ்கின்றது. பின்னர் பிற பலவற்றையும் போல் அத்துறையை வளர்க்காதது பின்னோர் செய்த பெரும் பிழையாகும்.

**புலவர்.மா.நன்னன் எம்.ஏ**

## சமயம்

சங்க இலக்கியங்களில் சமயக் கருத்துக்கள் மிகுதியாக இடம்பெறவில்லை. இக்கருத்துக்கள் பெரும்பாலும் கருத்தை விளக்க வரும் உவமை போன்ற நிலையிலேயே இடம் பெற்றுள்ளன. பிறகால சமய நூல்களோடு ஒப்பிட்டால் மிக மிகக் குறைவான கருத்துக்களே அக்காலக் கருத்துக்கள் என்பது தெளிவாகும்.

## தூய புலமையின் துலக்கம்

சங்க இலக்கியப் பாடல்கள் இயல்பான தேவை ஏற்பட்ட பொழுது உள்ளத்தில் எழுந்ததூய உணர்ச்சியால் தூண்டப் பட்டு துலங்கிய புலமையின் துலக்கமேயாகும். குறைந்த அடிகளில் ஓர் உணர்வை அல்லது நிகழ்ச்சியை மட்டும் உணர்த்திக் காட்ட எழுந்தவையே இக்காலப் பாடல்கள். பாடுவோர், பாடப்படுவோர், காலம்,களம் ஆகியஅனைத்தும் தொடர்புற்று இணைந்தவையாதலால் அவை தம்முள் வரை கடந்த புனைவுக்கும் இயல் பிறந்த கற்பனைக்கும் இடமேயில்லை.

இச்செம்மைநெறியில் நின்றும் பிற்கால இலக்கியங்கள் திறம்பியமையே தமிழலக்கியம் தனித்தன்மையை இழந்ததற்கும் வளராது சாய்ந்து சரிந்ததற்கும் காரணங்களாம். சிலம்பு ஓரளவு விலக முயன்றது. மணி மேகலை ஓரளவு விலகிற்று. சிந்தாமணி மேலும் விலகிற்று. பின்னவை படிப்படியாக முற்றிலும் விலகின. எனவே சங்ககாலத் தமிழ் இலக்கியம் பிற்காலத் தமிழ் இலக்கியங்களில் அருமருந்தாயிற்று.

# விடுதலைப் புலிகளின் கோரிக்கைகள் காற்றோடு போய் விடவில்லை கருத்தில் எடுத்து கையாளப்படுகின்றன

இலங்கைத் தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் செப்டம்பர் மாதம் 19ம் திகதி ஐ.நா.சபையில் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவினால் வெளியிடப்படவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நீண்ட காலமாக புலிகளின் சார்பில் வலியுறுத்தப்பட்டு வந்த மிக முக்கியமான கேள்விக்கும் இதன் மூலம் பதில் கிடைத்திருக்கிறது. கோளாறை நன்கு இனங் கண்டதுடன் அதனை அணுகி அடக்கி விடும் சாணாக்கியத்திலும் தனது வித்துவத்தைப் பிரதமர் காட்ட முன் வந்திருக்கின்றார் போலும்!

ஆரம்ப காலத்திலிருந்தே விடுதலைப்புலிகள் கொண்டிருந்த சந்தேகம், அது போன்று அவர்கள் விடுத்து வந்திருந்த கோரிக்கை என்பன காற்றோடு போய்விடவில்லை. கருத்திலெடுக்கப்பட்டு கண்டிப்புடன் கையாளவும் படுகின்றன எனக் கூற முடியும்.

*வரலாறு கற்றுத் தந்த பாடம்*

இலங்கையை மாறிமாறி ஆண்டுவந்த அரசாங்கங்களுடன் அவ்வப்போது தமிழ்த் தலைவர்கள் வைத்துக் கொண்ட பேச்சுக்கள் குறுகிய ஆயுளுடன் அழிந்து போயின என்பது வரலாறு. இந்த வரலாற்றில் இருந்து பாடம் கற்றுக் கொண்ட புலித் தலைமை இனிமேல் எந்த வொரு ஆளும் கட்சியுடனும் பேச்சு நடத்தத் தயாரில்லை என்று பிடிவாதமாக இருந்தது. குறைந்த பட்சம் இரு பெரும் கட்சிகளுமாவது ஒருமித்து முன்வைக்கும் தீர்வே நீடித்து நிற்கக் கூடியது. எனவே ஒரு இரு கட்சி அணுகுமுறை வேண்டும், என வலியுறுத்தியது. இதனால் தென்பகுதி மக்களின் 75 சதவீத முடிவை உறுதி செய்து கொள்ளலாம். இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுக்கள் சிங்கள மக்கள் ஏகோபித்த வகையில் முன்வைக்கும் ஒரு தீர்வாக இருக்க வேண்டும் என்பதில் புலிகள் தலைமை அவதானமாக செயற்பட்டு வந்தது. இதற்கான ஆரம்ப முயற்சிகள் சிரேஷ்ட பிரிட்டிஷ் அரசியலாளர் சியாம் பொக்ஸ் அவர்களால் முன்னெடுக்கப்பட்டு ஓரளவு வெற்றியும் கண்டது. அந்த ஒப்பந்தம் செத்து விட வில்லை என்பதை சில சம்பவங்கள் இப்போதும் காட்டுகின்றன.

இரு இனங்களும் மீண்டும் சமாதானமாக வாழும் நிலைப்பாடு பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் அனைவரினதும் ஏகோபித்த முடிவினால் உறுதி செய்யப்பட வேண்டும் என்ற பேரார்வம் எதிர்பார்ப்பை விடவும் பல மடங்கு உத்தரவாதத்துடன் நிறைவேறுவதற்கு ரணில் விக்கிரமசிங்க இப்பொழுது வழி வகுப்பது போல் தெரிகின்றது. ஐ.நா.சபையில் அங்கம் வகிக்கும் 189 நாடுகளினதும் வரவேற்பைப் பெறும் வகையில் தனது தீர்வுத் திட்டத்தை அவர் அங்கு வெளியிட முடிவு செய்திருப்பது எதிர்பார்த்ததைவிட அதிகமான உத்தரவாதமின்றி வேறு என்ன?

*தீர்வுத் திட்டத்தை பரிசீலிக்க புலிகள் தயார்*

அடுத்து, தனித் தமிழ் ஈழ அரசு என்னும் குறிக்கோளுக்கு குறைவான ஏதேனுமொரு தீர்வுத் திட்டம் அரசினால் முன்வைக்கப் படுமானால் அதனைப் பரிசீலிக்கப் புலிகள் தயாராகவிருப்பதையும் புலிகள் பல தடவைகள் அறிவித்து வந்துள்ளனர். வரலாற்றில் சில தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப் பட்டுமிருந்தன. அதிகாரப் பரவலாக்கலை மையமாகக் கொண்டு மாவட்ட சபைகள், மாகாண சபைகள் என்பன நடைமுறைக்கு வந்தன . 2000 ஓகஸ்ட் மாதத்தில் அன்றைய பொ.ஐ.மு.அரசு ஒரு தீர்வுத் திட்டத்தைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தது. அதனைப் பாராளுமன்றம் நிறைவேற்றினால் அதன் பின் அதனைப் புலிகள் முன்னிலையில் வைத்துப் பேச்சுக்கள் நடத்துவது என்றும் அறிவித்திருந்தது . ஆனால் துரதிர்ஷ்டவசமாக முன்வைக்கப்பட்ட தீர்வுத்திட்டங்கள் எவையும் தமிழர்களின் அபிலாஷைகளுக்கு நெருக்கமாக வரவில்லை. தமிழர்களின் அடிப்படைத்தேவைகளை அங்கீகரித்திருக்கவில்லை. தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற கண்ணோட்டம் ஏற்றுக் கொள்ளப்படாமல் வெறும் அதிகாரப் பரவலாக்க முயற்சிகளாகவேயிருந்தன. ஒற்றையாட்சியின் அடிப்படையை விட்டு விலகவே மறுத்தன.

சுயாட்சி என்ற வகையில் ஒரு குறிப்பிட்ட பிரதேச மக்கள் தம்மை நேரடியாகப் பாதிக்கும் விவகாரங்களில் தாங்களே தங்களின் பிரதிநிதிகளூடாக தீர்மானங்களை எடுக்கவும் அமுல் செய்யவும் அதிகாரம் இருக்க வேண்டும். குறிப்பிட்ட விடயங்களில் பாராளுமன்றமானது சட்டங்களை இயற்றும் தனது அதிகாரத்தைப் பிரதேச அலகுக்குக் கையளித்து அப்பிரதேச இறைமையை ஏற்றுக் கொள்ளும் நிலை வேண்டும். இதனால் ஒற்றையாட்சி என்ற நிலைப்பாட்டிலிருந்து கணிசமானளவிற்கு மாற்றங்கள் ஏற்பட முடியும் ஆனால், இவை மட்டும் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கவில்லை.

*சமாதானத்திற்கு விமானப்படை ஆதரவு:*

இப்பொழுது மீண்டும் நல்லதொரு சூழ்நிலை உருவாகி வருகிறது. முழுநாடும் ஒரு நாடு என்பதனை நடைமுறையில் செயற்படுத்தும் அடிப்படைகளாக ஏ-9, ஏ-5 நெடுஞ்சாலைகள் திறக்கப்பட்டு விட்டன. அகில இலங்கையிலும் மக்கள் சேவை செய்யும் அரச, தனியார் நிறுவனங்கள் வட பகுதிக்கும் வந்துவிட்டன. அரசியற் கட்சிகளின் தலைவர்களும் மன மாற்றம் பெற்றவர்களாக வெளிப்பட்டுள்ளனர். சமாதான நடவடிக்கைகளுக்குக் குந்தகமான விவகாரங்களில் ஈடுபடுவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ நிலைப்பாடு எடுத்துள்ளார். பௌத்த துறவியும் எதிர்க்கட்சி எம்.பி.யுமான சமித்ததேரர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை வாயார வாழ்த்தியுள்ளார். மக்கள் மத்தியிலும் மனமாற்றம் மிக நன்றாகவே வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களும், மதவழி பாட்டுக்காரருமென பரஸ்பரம் வடக்குக்கும், தெற்கிற்குமிடையே உறவுப் பாலம் அமைத்து வருகிறார்கள். புதிய விமானப் படைத்தளபதியாகப் பதவிப் பிரமாணம் எடுத்ததும் டொனால்ட் பெரேரா சமாதானத் திட்டத்திற்கு விமானப்படையினர் உச்சளவு ஆதரவு தருவார்கள் என உறுதியாகக் கூறியிருக்கிறார். அரசியல் மட்டத்திலும், அதிகாரிகள் மட்டத்திலும், முதலீட்டாளர்கள் மட்டத்திலும் பரந்த மக்கள் மட்டத்திலும் ஏகப்பட்ட ஆதரவு.

கடந்த இருபது ஆண்டு காலமாக இலங்கையின் இனப் பிரச்சினையுடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டு உலக நாடுகளும் பல உதவிகளைச் செய்திருக்கின்றன. ஆயுத உதவிகளையும் தாராளமாக வழங்கியிருக்கின்றன. இந்தியாவும், மேற்கு நாடுகள் பலவும் இலட்சக்கணக்கானவர்களை அகதிகளாக ஏற்று பராமரித்திருக்கின்றன. தொழில் வாய்ப்புகளும் ஏனைய வசதிகளும் வழங்கியிருக்கின்றன. மனிதாபிமான அடிப்படையில் ஏதோ விதங்களில் இலங்கை மக்களின் இன்ப, துன்பங்களில் பங்கேற்றிருக்கின்றன. நிதியுதவிகளையும் வழங்கியிருக்கின்றன. இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்று விருப்பம் கொண்டிருக்கின்றன. அதற்கான தயாரிப்புகளிலும் பங்கு கொள்ள முன்வந்திருக்கின்றன. தமிழ் மக்களுக்கு இருக்கும் வேதனைகள் நியாயமானவை என்று பிரகடனம் செய்திருக்கின்றன. கனடா போன்ற சில நாடுகள் தமிழர் நலன்களுக்கான தீர்வுத்திட்டம் பற்றியும் கருத்து வெளியிடப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவும், கனடாவும் சமஷ்டி ஆட்சி பொருத்தமானது என்ற கருத்தை மறைமுகமாக வெளியிட்டிருக்கின்றன.

*தமிழர் உரிமைகளுக்கு உத்தரவாதம்.*

உலகநாடுகள் கருத்தூன்றி கண் காணித்து வரும் இலங்கைத் தமிரின் இனப்பிரச்சனைத் தீர்வை அம்மக்களின் முன்னால் பார்வைக்கு வைப்பது பொருத்தமான செயலேயாகும். முன்வைக்கும் திட்டத்தை அந்நாடுகள் கவனத்திற்கெடுத்து கருத்துக் கூறும் நிலையும் மிகவும் விரும்பத்தக்கதேயாகும். உலகத்தின் ஆசிகளுடன் ஒரு தீர்வுத்திட்டம் அமுலாக்கப்படும் நிலை தோன்றுமாயின் அது தமிழர்களின் குறைந்தபட்ச உரிமைகளுக்கு உலகம் கொடுத்த உத்தரவாதமாகும். இதனால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் திட்டங்கள் மக்களிடமும் எதிர்கால சந்ததியினரிடமும் நற்பெயரை ஏற்படுத்தும்.

வர்த்தக வாணிப நடவடிக்கைகள் வேகமாக உலக மயமாக்கப்பட்டு வருகின்றன. எமது நாட்டின் இனப்பிரச்சினையும் உலக மயமாக்கப்பட்டுள்ளது. அண்மையில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சீனாவிடம் கடற்படை உபகரணங்கள் பற்றிய பேச்சுக்கள் நடத்தச் சென்ற போது சீனாப் பாதுகாப்பு அமைச்சர் கூறிய கருத்து அர்த்தமுள்ளது. பயங்கரவாதிகள் உலகரீதியாக தமது பயங்கரவாத சகாக்களுடன் இணைந்து இயங்கும் போது அதனை முறியடிக்கும் சக்திகளும் உலகரீதியாகவே ஒன்றுபட வேண்டும்.அதனைமறு வளமாகக் கூறுவதும் அதிகம் பொருத்தமானது. உரிமைகளை மறுக்கும் அரசாங்கங்கள் கைகோர்த்து இயங்குவதால் விடுதலை இயக்கங்களும் கைகோர்த்து இயங்க வேண்டும். எவ்வாறாயினும், உலகமயமாக்கப்பட்ட இனப்பிரச்சினைக்குத் தீர்வும் உலகமயமாக்கப்பட்டதாக இருத்தலே யதார்த்தம்.

இலங்கை இனப்பிரச்சினையை உலகநாடுகள் மத்தியில் சிக்கலுக்குள்ளாக்கிய கதிர்காமர் இராட்சியத்திற்கு மாறாக, ரணில் விக்கிரமசிங்க இலங்கை இனப்பிரச்சினையின் தீர்வை உலகமயப்படுத்தி வருகிறார்.

**சர்வன்**

இனப்பிரச்சினை விவகாரத்தை நேரடியாகவும், மறைமுகமாகவும் உலக நாடுகளுடன் வெகு சாதாரணமாகவே பிணைத்து விடுகிறார். சமாதானப் பேச்சுக்கள் விவகாரத்தை நேரடியாக வல்லரசுகளுக்கு எடுத்துக்காட்டுகிறார். நாடுகளை ஈடுபடவும் வைக்கிறார். இதனைத் துரும்பாக பாவித்து நிதியுதவிகளுக்கு அடித்தளமும் இடுகிறார். இவர் செய்யும் வர்த்தக உடன்படிக்கைகளும், பொருளாதாரரீதியான ஒப்பந்தங்களும் கூட இனப்பிரச்சினைத் தீர்வை மனத்திற் கொண்டு மறைமுகமான பாதுகாப்பு ஒப்பந்தங்களாகவே கருதப்பட வேண்டும். திருகோணமலை எண்ணெய்க்குத ஒப்பந்தம் ஒரு உதாரணம்.

பின்லேடனுடன் உறவா? என்ற சந்தேகத்தை எழுப்பிப் பயங்கரவாதிகள் உலக ரீதியாக அணிதிரள்வதை அமெரிக்கா தடுத்து விடும். அமெரிக்காவைக் காவலுக்கு இழுப்பதா? என்ற கேள்வியைக் கேட்டு ரணில் விக்கிரம சிங்க புலிகளை மட்டுமன்றி எதர்க்கட்சிகளையும் அடக்கிவிடத் திட்டமிட்டுள்ளாரா?

* * *

# பிறந்த நாள் பலன்கள்

## நவம்பர்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

இருபாலாரும் கவர்ச்சியாக இருப்பார்கள், மன உறுதியும் ஆசையும் அடக்கமுடியாத அளவில் வாய்க்கும் போது, இவர்கள் இந்தத் தன்மையினால் சில எதிர்பாராத பலன் அடைவார்கள்.

எப்போதும், இவர்களுக்கு ஆசை வளருவதுதான் சிறப்பு. இந்த ஆசைதான் இவர்களைப் பாதுகாக்கும். ஆசையின் விளைவாக, மற்றவர்களை விடச் சிறந்த பயனுள்ள செயல்களை இவர்களால் செய்ய முடியும்.

உலகத்தின் எண்ணங்களுக்கு இவர்கள் எப்போதும் மிகுந்த மதிப்புத்தருவார்கள். இதனால், இவர்களை அச்சுறுத்திப் பலர் பயனடைகிறார்கள்.

சுயநலத்தின் காரணமாக மற்றவர்கள் தமக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்க வேண்டும் என்று இவர்கள் எண்ணுவார்கள். ஆனால், வெற்றி பெற்றதும் தமக்காகத் தியாகம் செய்பவர்களுக்குப் பத்துமடங்கு அதிகமான உதவிகளைச் செய்யவும் காத்திருப்பார்கள்.

குடும்பத்தில் இவர்கள் இட்டது தான் சட்டம். ஆனால், இவர்களுடைய கவர்ச்சியில் மயங்கும் பெண்கள் இவர்கள் சொல்லுகிறபடியெல்லாம் கேட்பார்கள். மனைவியை இவர்கள் துன்புறுத்தினாலும் கூட, அதே மனைவி கணவனுக்காக உயிரையும் கொடுக்கத் துணிவாள்.

மற்றவர்களிடம் செல்வாக்குப் பெறும் சிறந்த சக்தி இவர்களிடம் உண்டு. மற்றவர்களுக்குத் தமது சக்தி முழுவதையும் செலவு செய்து உதவி செய்வார்கள். இதனால் மற்றவர்கள் குறைகளை இவர்கள் இயற்கையாகப் போக்கி விடுகிறார்கள். மற்றவர்களுக்காக எப்படிப்பட்ட ஆபத்தையும் சந்திப்பார்கள்.

மறைத்து வைத்திருக்கும் தமது ஆற்றலை எப்போதாவது வெளிப்படுத்துவதன் மூலம், சிறந்த கலைஞர்களாகப் புகழ் பெறுவார்கள். இயற்கையின் மாணவர்களாகவும், தத்துவஞானிகளாகவும், மற்றவர்களைப் பற்றி ஆராயும் தன்மையுள்ளவர்களாகவும் விளங்குவார்கள்.

இவர்களைப் புரிந்து கொண்டவர்கள் இவர்களைப் பாராட்டுவார்கள். ஆனால், இவர்களுள் பலர் மட்டமான செய்திகளுக்கு இலக்காவார்கள்.

இவர்களுக்கு எப்போதும் இரண்டு வகையான வருவாய் வந்தபடி இருக்கும், இளம் வயதில் நிறைந்த அளவில் துன்பங்களையும் தொல்லைகளையும் காணுவார்கள். அதன் விளைவாக அவர்கள் ஆசையும் உறுதியும் வளர்ந்து, வெற்றியும் புகழும் அடைந்து மிகச் சிறப்புடன் வாழ்வார்கள்.

### உடல் நிலை

சிறுவயதில் இவர்கள் மிக இளைத்தும், எடைகுறைவாகவும் இருப்பார்கள். ஆனால் நடுத்தர வயதை அடைந்ததும் களைத்துப் படுத்து விடுவார்கள்.

இதயம் பாதிக்கப்படலாம். இவர்கள் அதிகமாக வேலைகளோ, பயிற்சியோ செய்யக் கூடாது.

### வண்ணங்கள்

இளஞ்சிவப்பு, இரத்தச் சிவப்பு, நீலம்.

**இந்த மாதத்தில் பிறந்த சிலர்**

1. ரூஸ்வெல்ட்
2. ஷீரோ (கைரேகை நிபுணர்)
3. விவன்லே (பிரிட்டிஷ் நடிகை)
4. மாண்ட்கோமரி.
5. ஜவஹர்லால் நேரு
6. இந்திரா காந்தி

## டிசம்பர்

**நவம்பர் 21 ஆம் திகதியிலிருந்து டிசம்பர் 20 ஆம் திகதி வரையில் பிறந்தவர்களுக்கான பலன்கள்:**

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் தலையாய பதவியில் உள்ளவர்களாகவும், அஞ்சாதவர்களாகவும், தாம் ஏற்றுக்கொண்ட செயல்களில் மன உறுதி கொண்டவர்களாகவும் இருப்பார்கள்.

அவர்கள் பேசுவதின் முடிவுகள் பளிச்சென்று தெரியும். எதையும் மறைவின்றிச் சொல்லி விடுவார்கள். ஆகையால், இவர்களை மற்றவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு, எதிரிகளாக மாறி விடுவார்கள்.

தாம் செய்யும் செயல்களிலேயே முழுக்கருத்தையும் செலுத்துவார்கள். இவர்கள் எண்ணுவதைத்தவிர, வேறு எந்த விதமான வேறு வழியும் இவர்கள் எடுத்துக் கொண்ட செயலில் இருக்க நீதியில்லை என்று முயற்சி செய்வார்கள்.

இவர்கள் மூளை மிக விரைந்து வேலை செய்யும். மற்றவர்கள் பேசும் போது இடையிடையே குறுக்கிட்டுப் பேசுவார்கள். இவர்கள் சொல்லுவது தான் முடிவு என்று எப்போதும் எண்ணுவார்கள்.

களைப்படைந்து வரும் வரையில் இவர்கள் ஏற்றுக்கொண்ட வேலைகளைச் செய்து கொண்டேயிருப்பார்கள்.

பொதுவாகவும், குறிப்பாக மற்றவர்கள் தம்மை நம்பும் போதும், மதிப்புள்ளவர்களாக நடந்து கொள்வார்கள்.

உண்மையைக் கடைப்பிடிக்கக் கடுமையான சோதனைகளைத் தாங்குவார்கள். ஏமாற்றுவதை இவர்கள் விரும்புவதில்லை. தம்மையோ, மற்றவர்களையோ ஏமாற்றுபவர்களை இவர்கள் எளிதில் விட மாட்டார்கள். வாழ்க்கையின் தத்துவங்களை ஏற்று, நல்லவற்றை எப்போதும் செய்ய முன் வந்து நிற்பார்கள். இவர்கள் தனிப்பட்ட முறையில் உள்ள நிறுவனங்கள் மூலம் ஏழைகளுக்குத் தருமம் செய்வார்கள். ஆனால், தனிப்பட்ட மனிதனாக வரும் எந்த ஏழைக்கும் உதவி செய்யாமல், தாம் தொடர்பு கொண்டுள்ள நிறுவனங்களுக்கு அனுப்பிவிடுவார்கள்.

தொகுப்பு:-
**வளவன்**

தன்னால் வாழ்பவர்களிடமும் தனக்கு வாழ்வளிப்பவர்களிடமும் இவர்கள் மிக்க கவனத்துடன் நடந்து கொள்வார்கள்.

தொழிலில் பெருமளவில் வெற்றியடைய இவர்களுக்கு வாய்ப்பு உண்டு. ஆனால் ஒரு குறிப்பிட்ட தொழிலில் மட்டும் ஒட்டியிருக்க மாட்டார்கள். ஏதாவது ஒரு வழியில் வெற்றி பெற்றால், கடைசி வரையில் அதே தொழிலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இவர்கள் எண்ணுவதில்லை. ஆகையால், பாதணி விற்பவர்கள் பங்கு மார்க்கட்டில் கூடப் புகுந்து விடுவார்கள்.

(தொடரும்....)

**வியாசர் ஐயா! திடீரென்று உங்கள் வீட்டிற்குள் ஒரு திருடன் புகுந்து விட்டான். உங்களிடம் கத்தியைக் காட்டிப் பணம், நகை வைத்திருக்கும் அலுமாரியின் திறப்பைத் தா என்று மிரட்டினால் என்ன செய்வீர்கள்?**


வியாசர் ஐயா! வீரப்பனையே கைது செய்ய முடியாமல் இருக்கும் ஜெயலலிதா தமிழ த் தேசியத் தலைவரைக் கைது செய்ய நினைக்கிறாரே? இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

❖ **செய்வதைத்தான் சொல்ல வேண்டுமென சட்டமா போட்டிருக்கிறார்கள். சும்மா ஒரு கதைக்குச் சொல்ல வேண்டியததானே!**

*த.நந்தினி கல்வியங்காடு*
அறுவை விடையர் வியாசர்! ஆண்கள் இறுக்கமான உடையுடன் நகர் வலம் வரும் காரணத்தை நவிலும் ஐயா?

❖ **மங்காய் நந்தினி, ஆடையிலும் நாம் இறுக்கமானவர்கள் என்பதை உணர்த்துகிறார்கள் நம் மைந்தர்கள்.**

*வே.சஞ்சீவன். ஒட்டுமடம்.*
வீதியால் செல்லுகின்ற பொழுது எந்தப் பெண்களும் எனக்குத் தெரியாமல் இருப்பதற்காக `Cooling Glass' அணியலாமா வியாசரே?



❖ **பெண்களோடு முட்டி மோத வேண்டுமென்பதற்காக இப்படியும் ஒரு திட்டமா மகனே! வேண்டாமப்பா இந்த விபரீத முடிவு.**


*L.சசிதேவி வல்வெட்டித்துறை*
வியாசர்ஜயா! எல்லாத் துறைகளிலும் பெண்களே அதிகமாக முன் நிற்கிறார்கள். இனிமேல் ஆண்களின் நிலை என்ன?

❖ **வீட்டிற்குள்ளே ஆணைப் பூட்டி வைப்போமென்ற விந்தை மனைவியரை ஒழிப்போமென்று புரட்சிப்பாடல் பாட வேண்டியதுதான்.**

'விமர்சனம்' என்பது ஒருவனை வளர்க்கிறதா? தாழ்த்துகின்றதா?

❖ **விமர்சனம் செய்பவனைப் பொறுத்தது.**

*மைந்தன். பண்ணாகம்.*
டியர் வியா! பெண்கள் சிரித்தால் போச்சு, புகையிலை விரித்தால் போச்சு இது இப்பவும் பொருந்துமா? பிளீஸ் கூறுங்களேன்?



❖ **இப்போது பெண்கள் சிரிக்காமல் விட்டால் (காதல்) போச்சு என்று மாற்றிக் கொள்ளும்.**

*N.P.சங்கர். பொன்னாலை.*
வியாசரே! புத்திர சோகத்தால் தசரதன் இறந்தும் கோசலை அப்படிச் செய்யாததற்குக் காரணம் என்ன? (விரிவான விளக்கம் தாருங்கள்)

❖ **புத்திர சோகத்தால் நீ மாழ்வாய் என முனிவர்கள் இட்ட சாபம் தசரதனுக்கேயொழிய கோசலைக்கல்லவே.**

பெண்களைத் தெய்வத்திற்கு ஒப்பிடலாமா?

❖ **ஒப்பிடலாமா என்று இப்போதா கேட்கிறீர். ஒப்பிட்டதால் படும்பாடு போதாதா!**

*மு.கற்பகவல்லி பருத்தித்துறை*
வியா சார்! ஆண்கள் பெண்களை இழிவுபடுத்துவதைப் பற்றி?

❖ **இலட்சுமணன் சூர்ப்பனகையின் மூக்கையும், மார்பையும் வெட்டிய காலம் முதல் தொடர்கின்ற சித்திரவதை. இதைத் தடுப்பாரும் இல்லை தட்டிக் கேட்பாருமில்லை.**

*ந.வினோதரன். ஒட்டுவெளியூர்.*
வியாசர் அவர்களே! திருமணம் செய்து கொள்வோமா? என்று காதலியிடம் கேட்டபோது உமக்கு HERO HONDA ஓடத் தெரியுமா? என்று கேட்கிறாளே?

❖ **திருமணம் செய்வதற்கு ஆண்களிடம் சில அடிப்படைத் தகுதிகள் இருக்க வேண்டுமெனப் பெண்கள் எதிர்பார்க்கின்றனர் அதில் ஒன்று தான் இது.**

வியாசரே! சமூகத்தைச் சீரழிப்பவர்கள் ஆண்களா? பெண்களா?

❖ **பெண்களால் ஆண்கள்.**

## வியாசரின் பதில்கள்

**வீதியால் செல்லுகின்ற பொழுது எந்தப் பெண்களும் எனக்குத் தெரியாமல் இருப்பதற்காக 'Cooling Glass' அணியலாமா வியாசரே ?**

*A.சங்கர் பொன்னாலை*
வியாசரே! ஆலயத்தில் நடக்கும் உயிர்ப்பலியைத் தடுக்க நடவடிக்கை எடுக்காதவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்?

❖ **ஆழமாக ஊறிப்போன நம்பிக்கைகளைத் தடுப்பது இலேசான காரியமல்ல. உயிர்ப்பலி தம் உயிரைப் பாதுகாக்கும் என நம்புவதை உரியவர்கள் என்று கைவிடுகிறார்களோ அன்று தான்.**

*தென்.சீலன்.*
வியாசர் அவர்களே! தற்காலத்தில் எமது சமூகத்தின் நிலையை மையமாக வைத்துப் படம் ஒன்று தயாரிக்கப்போகிறேன் என்ன பெயர் வைக்கலாம்?

❖ **''ஓ'' போடு பெயர் வைக்கலாமே.**

மனிதன் மனிதனாகத் தான் வாழ விரும்புகிறான். ஆனால் சிலர் மிருகமாக மாற்ற முயற்சிக்கிறார்களே ஏன் ?

❖ **மனிதன் மனிதனின் வழி காட்டலில் செல்ல வேண்டும். மிருகம் மனிதனை வழிப்படுத்துமானால் வழிப்படுவான் மனிதனாக இருந்திருக்க முடியாது.**

*தமிழபிமானி. யாழ்ப்பாணம்.*
பண்டைய பண்பாட்டை ஆராயக் கருத்தரங்கு நிகழ்த்தும் பல்கலைக்கழகத்தினர் தம் தமிழ்ப் பண்பாட்டினை (ஆடைகள்) கருத்தரங்கு நாட்களிலாவது பேணியிருக்கலாம் தானே?

❖ **பண்டைய பண்பாட்டிற்கு முந்திய பண்பாடு பற்றிக் கருத்தரங்கு வைத்தால் நீர் என்ன கேட்பீர்?**

*கா.அருந்தா. முடமாவடி.*
அண்மையில் நடந்த சிலப்பதிகாரத்தில் ஊனமுள்ளவரைக் கடவுளாக வணங்குவது தவறு. அதனால் தான் கண்ணகியைப் புவனேஸ்வரி அம்மனாக மாற்றி வழிபடுகிறோம் என்று ஒரு குருக்கள் கூறினார். அப்படியாயின் கணபதியை எப்படி வழிபடலாம்? அவரது கொம்பும் உடைந்துள்ளதே. அதுவும் ஒரு உறுப்புத்தானே?

❖ **ஊனம் என்பதைக் குருக்கள் எவ்வாறு பொருள் கொண்டாரோ தெரியவில்லை. ஆனால் கண்ணகியின் இறுதிக் காட்சி பாண்டிய நாட்டை எரித்த கோரக் காட்சி என்பதால் அதனைச் சாந்தப் படுத்தி புவனம் காக்கும் தாயாக வழிபடுகின்றோம்.**

*A.அஜித். புங்கன் குளம்.*
வியாசர் அங்கிள்! நான் யாருமற்ற தீவில் தனியாக இருக்க விரும்புகின்றேன் என் ஆசை நிறை வேறுமா?



❖ **நிச்சயம் இமாலயப் பிரதேசத்தில் எத்தனையோ துறவிகள் தனிமையில் இருக்கிறார்களே.**

**வியாசர் அங்கிள்! நான் யாருமற்ற தீவில் தனியாக இருக்க விரும்புகிறேன் என் ஆசை நிறை வேறுமா?**

*T.தனரூபினி. பருத்தித்துறை.*
வியாசர் ஐயா! நேசக் கரத்துக்கு மோசக்கரம் நீட்டுகிறவர் பற்றி...?

❖ **தமிழக முதல்வரைப் பற்றி இப்படியா கேள்வி கேட்பது.**

*இ.சூட்டி நீர்வேலி*
வியாசர்ஜயா! திடீரென்று உங்கள் வீட்டிற்குள் ஒரு திருடன் புகுந்து விட்டான். உங்களிடம் கத்தியைக் காட்டிப் பணம் நகை வைத்திருக்கும் அலுமாரியின் திறப்பைத் தா என்று மிரட்டினால் என்ன செய்வீர்கள்?



❖ **திருடத்துரையே! இதுவரை காலமும் அலுமாரித் திறப்பு என்னிடம் இருந்ததாக வரலாறு இல்லை. உம்மால் முடிந்தால் என் மனைவியிடம் இருக்கும் திறப்பைப் பெற்று என்னிடம் ஒப்படையும். நன்றியுடையவனாக இருப்பேன்.**

இலங்கைத் தமிழர்களிடமிருந்து பிரிக்க முடியாதாது எது?

❖ **காட்டிக் கொடுத்தல், போட்டி, பொறாமை இம் மூன்றையும் ஒரு போதும் பிரிக்க முடியாது.**

வாழ்க்கை என்பது பூந்தோட்டமா? போராட்டமா?

❖ **வாழ்க்கை என்பது பூந்தோட்டம். அதற்குச் செல்லும் பாதை போராட்டம்.**

மனிதன் கடைசி வரை எதைக் காப்பாற்ற வேண்டும்?

❖ **மானத்தை.**

*எஸ்.ராஜ். வேரக்காடு.*
பெண்களை நம்பிவிடக் கூடாது என்று புதிய பாடல் எடுத்துக் காட்டுகின்றது. இது உண்மைதானா?

❖ **காலம் கடந்த ஞானப் பாடல் பரவாயில்லை எதிர் கால ஆண் சந்ததியாவது தப்பிக் கொள்ளட்டும்.**

பத்திரிகைத் தொடாபுகளில் சிலர் தமது சொந்தப் பெயர்களைக் குறிப்பிடாதது ஏன்?

❖ **பல காரணங்கள் உண்டு. அதில் சொந்தக் காரணம் எதுவுமில்லை. ஆயினும் தன்னம்பிக்கைக் குறைவே காரணம்.**

வியாசர் ஐயாவே, காதலித்தால் தான் கவிதை வரும் என்கிறார்களே இது சாத்தியமாகுமா? சத்தியமாகுமா?

❖ **தமிழ் மீது காதல் கொண்டால் தான் கவிதை வரும். இதுவே சாத்தியமும், சத்தியமுமாகும்.**

**டியர் வியா! பெண்கள் சிரித்தால் போச்சு, புகையிலை விரித்தால் போச்சு இது இப்பவும் பொருந்துமா? பிளீஸ் கூறுங்களேன்?**

---




திங்கள் தோறும் எங்கள் கரங்களில் சங்கத் தமிழ் சுவை கொண்டு நடு நிலையுடன் ஓங்கிவரும் சங்கு நாதமே! குறிப்பாக உனது வடிவமைப்பு மிகவும் சிறப்பாக இருக்கிறது! மற்றும் உளவியல் சம்பந்தமான பகுதியையும் சேர்க்கலாம்! சினிமாப் பகுதியில் திரைப்பட விமர்சனங்களை, திறனாய்வுகளை சேர்த்துக் கொள்ளலாம். என எதிர்பார்க்கிறேன். மகத்தான பணியை ஆற்றிக் கொண்டிருக்கும் வலம்புரி வாரமலர் சங்குநாதத்திற்கு வாழ்த்துக்கள்!
சங்குநாதமே!நீ வாழ்க...வாழ்க.

ஜோ.ஜெஸ்ரின்,
கொழும்புத்துறை.

*வார மலரே வருக! வருக!*
*வாடா மலராய் நெடுக! நெடுக!*
*வாசனை மணமே தருக! தருக!*
*வாசல் தோறும் மலர்க! மலர்க!*
*வானவில் போல ஒளிர்க! ஒளிர்க!*
*அனைத்தும் தமிழாய் கமழ்க! கமழ்க!*
*எட்டுத் திசையும் அறிய! அறிய!*
*சங்கு நாதம் முழங்க! முழங்க!*

*ம.பிறேமலதா,*
*அரியாலை.*

சங்குநாதமே, எடுத்த எடுப்பிலேயே எங்களை எல்லாம் மனம் கவர வைத்து விட்டாய்.

பத்திரிகையில் வரும்சகல விடயங்களும் மிகப் பிரமாதம் ஆனாலும் ஒரு சிறு குறை. குறுக்கெழுத்துப் போட்டி, இவரைத் தெரியுமா? போன்றவை சற்றுக் கடினமாக் உள்ளது.தயவு செய்து எல்லோரும் பங்குபற்றக் கூடியவாறு வாய்ப்பு அளியுங்கள்.

பொன்.குணரெத்தினம்,
நாவலர் வீதி.

15.07.2002 சங்குநாதத்தில் பிரசுரிக்கப்பட்ட தாட்சாயிணி எழுதிய 'துளிர்ப்புகள்' ஒரு யதார்த்தமான அருமையான சிறுகதை. அழகான மொழிநடை. படிமங்கள், உத்திகளிலும் புதுமை. தாட்சாயிணிக்கும் உங்களுக்கும் எனது பாராட்டுக்கள்.

அராலியூர்
ந.சுந்தரம்பிள்ளை.

திங்களில் மலர்ந்து
என்னைத் தித்திக்க வைக்கும்
சங்குநாதமே
கவிதைக் கலசமூடாக
என்னைக் கவிஞனாக்கிய
கன்னிநாதமே
உன் முகம்
பார்ப்பதற்காய்
திங்கள் வரை
தவிக்கின்றேன்.

ஆ.டீன்ஸ்ராஜ்,
இராசாவின் தோட்டம்.

பஞ்ச வர்ணத்தில்பவனிவரும்
பத்திரிகையாம் - எங்கள் சங்குநாதம்
படித்தோர் போற்றும் சங்குநாதமே
பல் சுவைக் கதம்பமாக விளங்குவாயே!

யாழ்மண்ணில் யாம் சுவைக்க
முதன்முதலில் மலர்ந்து ஒலித்து வரும்
சங்குநாதமே
செந்தமிழுக்கு செழுமை சேர்த்திட
சீரும் சிறப்புமாக விளங்கிப் பல்லாண்டு
வாழியவே.

கந்த ஞானமுத்து,
கைதடி மேற்கு.

திக் கெட்டின் சேதியையும், தித்திக்கும் கவிதைகளும் ,
மங்கையர்க்கு அறிவுரையும், மாணவர்தம்
ஆக்கங்களும், காந்தியண்ணா காவியமும்
கணனியதன் கல்வியையும், மரணத் தொடர் கதையும்,
மற்றும் பல மர்மங்களும், இன்றைய அரசியலும்,
அன்றைய இலக்கியமும்- நற்சந்தமுடன் நீ காவி
திங்களதில் மலர்ந்திடும் உன் தீந் தமிழ் நாத ஒலி
திருவருளால் ஓங்கிடட்டும்!
வாழ்த்துகின்றேன் உன் வாசகி ''நீ வாழ்க''

தமிழ் நிலா,
கொடிகாமம்.

யாழ்மண்ணிலே
அறிவுக் களஞ்சியமாக
வெளிவரும் வார இதழ்
சங்குநாதம்
நான்கு வர்ணத்தில்
வெளிவருவதையிட்டு
பெரும் மகிழ்ச்சி
கொள்கின்றேன்.

சி.இன்பு
மந்துவில்.

# அர்த்தமுள்ள இந்து மதம்

## கவிஞர் கண்ணதாசன்



எங்கிருந்தெல்லாம் எனக்கு ஆறுதல் வந்தது தெரியுமா?

யாரிடமிருந்தெல்லாம் எனக்கு உதவி வந்தது தெரியுமா?

நான் எதிர்பாராத இடமெல்லாம் எனக்குக் கை கொடுத்தன.

### கண்ணனை நினைப்பவர்கள் சொன்னது பலிக்கும்

நான் பிறருக்குத் திருமணம் செய்து வைத்தது வீண் போகவில்லை.

என் மகளின் திருமணத்தைக் கண்ணனே முன்னின்று நடத்தி வைத்து விட்டான்.

திருமண வரவேற்பில் 'பூ முடிப்பாள் இந்தப் பூங்குழலி' என்ற பாடலைச் சௌந்தரராஜன் பாடும் போது,

**'கைத்தலம் தந்தேன் என் கண்மணி வாழ கடமை முடிந்தது கல்யாணமாக'**

-என்ற என்னுடைய அடிகளே, என் கண்களில் ஆனந்தக் கண்ணீரை வரவழைத்தன.

அப்படியேதான் இரண்டாவது பெண்ணின் திருமணத்தைப் பற்றியும் நான் சிந்திக்கவில்லை.

''காசி விசாலாட்சி'' என்றொரு கதையும் வசனம் எழுத பெங்களூர் உட்லண்ட்ஸ் ஓட்டலில் தங்கியிருந்தேன்.

பாதிவரை எழுதிவிட்டேன்.

கிராமத்திலிருந்து காசிக்குச் சென்ற ஒரு தாயும், தகப்பனும் கொலராவினால் பாதிக்கப்பட, காசி விசுவநாதரும் விசாலாட்சியுமே தாய் தகப்பனாக வந்திருந்து, ஒரு பெண்ணின் திருமணத்தைப் பேசி முடிக்கிறார்கள்.

அதிலே முடிவாக நான் எழுதிய வசனம், 'இந்த ஆடி போய் ஆவணியிலே திருமணத்தை வைத்துக் கொள்வோம்' என்பதாகும்.

அதை எழுதி நிறுத்தியபோது சென்னையிலிருந்து டிரங்கால் வந்தது.

''சில பத்திரங்களில் கையெழுத்துப்போட வேண்டும். ஒரு நாள் வந்து விட்டுப் போங்கள்.'' என்றார்கள்.

நான் வந்தபோது, என் வீட்டிற்குச் சில உறவினர்கள் வந்திருந்தார்கள்.

அவர்கள் 'தம்பி, நல்ல பையன் இருக்கிறான்; குடும்பமும் சென்னையிலே இருக்கிறது; பேசலமா?' என்றார்கள்.

பேசினார்கள்; மறுநாள் பெண் பார்க்க வந்தார்கள்.

''மாலையிலேயே; நான் பெங்களூர் போக வேண்டும் என்றேன்.

பெண் பார்த்துவிட்டுப் போனவர்கள், ''நாளைக்கே பேசி முடித்துக் கொள்வோம்; பெங்களூர்ப் பயணத்தை ஒருநாள் ஒத்திப் போடு ங்கள்'' என்றார்கள்.

திருமணம் பேசி முடிந்துவிட்டது.

அப்போதும் பணம் இல்லாத நிலைதான்.

கண்ணன் எனக்கு வழி காட்டினான்.

தேவர் எனக்குக் கைகொடுத்தார். கேட்ட பக்கமெல்லாம் உதவி கிடைத்தது.

திருமணம் மங்கலமாக முடிந்து விட்டது.

''ஆவணியிலே திருமணத்தை வைத்துக் கொள்ளலாம்'' என்று காசி விசுவநாதன் சொல்வதாக நான் வசனத்தில் எழுதினேன். ஆவணியிலேயே திருமணம் நடந்து விட்டது.

நன்றியுடைமை, தெய்வபக்தி, வஞ்சகமற்ற உள்ளம் இவற்றுக்கு ஆண்டவன் எப்போதும் துணை நிற்கிறான்.

**'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்'**

**''நம்பினோர் கெடுவதில்லை, நான்கு மறைத்தீர்ப்பு''** என்பதெல்லாம் இந்துக்களின் பழமொழிகள்.

விதையைப் போட்டுவிட்டுக் கொண்டு கனி வராதா என்று நான் ஏங்கி எதிர்பார்த்ததில்லை.

விதைத்துக் கொண்டே போனேன். திரும்பி வந்து பார்த்த போது மரங்கள் பழுத்துக் குலுங்கின.

என்னால் நடத்த முடியாத நற்காரியங்கள் என் வீட்டிலே நடைபெறுமானால், இறைவனைத் தவிர வேறு காரணம் ஏது?

**கண்ணனை நினைக்கிறேன்.**

**சொன்னது பலிக்கிறது.**

### பூர்வ ஜென்மம்

''பூர்வ ஜென்மம் என்று ஒன்று உண்டா? பூர்வஜென்மத்தின் தொடர்ச்சியாக இந்த ஜென்மத்தில் நாம் நன்மை தீமைகளை அனுபவிக்கிறோம் என்பது உண்மையா?''

''ஜென்மங்கள் பற்றிய விஷயத்தில் கடவுளுக்குச் சம்பந்தம் என்ன?''

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் என்னுடைய பதிலைக் கூறுமுன் மதுரை ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் எழுதியுள்ள ஒரு சிறு நூலிலிருந்து விஷயங்களை வைக்கிறேன்.

''கடவுளை நோக்கிச் செய்கின்ற பிரார்த்தனை அல்லது வேண்டுகோள் பலனுடையதாக இருக்குமா? அப்படி ஒரு கடவுள் இருக்கிறாரா? அப்படி இருப்பாரென்றால், நமக்கும் அவருக்கும் எவ்விதத் தொடர்பும் இருக்கின்றதாகத் தெரியவில்லையே! அவ்வித மூடநம்பிக்கை நமது நாட்டை விட்டுப் போனாலன்றி நம் நாடு முன்னேற முடியாது'' என்று சொல்கின்ற பலர், ஆலய வழிபாட்டிலும், வீட்டு வழிபாட்டிலும் தலை சிறந்த நமது தமிழகத்திலேயே உற்பத்தியாகி இருக்கிறார்கள். இவை வெளிநாடுகளிலிருந்து விதைத்த விதைகளால் ஏற்பட்டவை.

(தொடரும்)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

### கரு மருத்துவம் [Nuclear Medicine]

கரு மருத்துவத்தில் கதிரியக்க சமதானிகள் (radioisotopes)இரு வழிகளில் பயன்படுகின்றன. அவையாவன நோயைக் குணமாக்கலும், நோயைக் கண்டு பிடித்தலும் ஆகும். இவை பற்றிய சில தகவல்களை இவ்வாரம் பார்ப்போம்.

### கதிரியக்க சிகிச்சை [Radiation Therapy]

கதிரியக்க சிகிச்சை மூலம் பல நோய்களை, குறிப்பாகச் சில வகைப்புற்று நோய்களைச் குணப்படுத்த முடியும். புற்று நோய்க்குள்ளான மென் சவ்வுக் கலங்களின் (cancerous tissue) மீது கதிர்ப்பானது மிகவும் கவனமாகப் பிரயோகிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றன. இவ்வாறு செய்யும் போது சாதாரண கலங்கள் அழிக்கப்படாதவாறு கவனித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும். அவ்வாறு நடந்தால், கதிரியக்க சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டவர்களிற்கு மயக்கம், வாந்தி போன்ற பக்கவிளைவுகள் ஏறபடும்.

### நோயைக் கண்டு பிடித்தல்

கதிரியக்க சமதானிகளானது, ஒரு நோயின் தன்மை பற்றியும், அது எவ்வளவு தூரம் பரவியுள்ளது என்பது பற்றியும் அறிவதற்கு உதவுகின்றது. உதாரணமாக கதிரியக்க அயடீன்-131 ஆனது தைரொயிட் சுரப்பியின் (thyroid gland) அளவு, வடிவம், செயற்பாடு என்பவற்றைக் கண்டு பிடிக்க உதவுகின்றது. அத்துடன் இச்சுரப்பியில் ஏற்படும் புற்று நோயையும் குணமாக்க உதவுகின்றது. இந் நோயால் பாதிக்கப் பட்ட ஒருவரிற்கு அயடீன்- 131 இனைக் கொண்டுள்ள பொட்டாசியம் அயடைட் கரைசல் குடிக்கக் கொடுக்கப்படுகின்றது. அவரின் உடலானது அயடைட்டை தைரெயிட் சுரப்பியில் சேர வைக்கும். வெவ்வேறு அளவுகளில் உள்ளெடுக்கப்படும் சமதானியின் அளவை காட்டிகள் (detectors) மூலம் அளந்து, கண்ணால் பார்க்கக் கூடிய படங்களாகப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றையே நாம் ''போட்டோஸ்கான்'' (photoscan) என அழைக்கின்றோம். இதன் மூலம் புற்று நோய் ஏற்பட்ட இடத்தை மிகவும் துல்லியமாக அறிந்து கொள்ளலாம். தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் புற்று நோயைக் குணமாக்க வேண்டின் அதிக அளவு கரைசல் நோயாளிக்குக் கொடுக்கப்படும். சமதானியிலிருந்து வரும் கதிர் வீச்சுக்கள் தைரொயிட் சுரப்பியில் உள்ள புற்று நோய்க் கலங்களை அழிக்கும்.

மருத்துவத்தில் அதிகளவில் பயன்படுத்தப்படும் இன்னோர் கதிரியக்கச் சமதானியானது கலோடினியம்-153 (Galodinium-153) ஆகும். இச்சமதானி எலும்புகளிலுள்ள தாதுப்பொருட்களின் அளவை அறிய உதவுகின்றது. அதிகளவு மக்கள், குறிப்பாகப் பெண்கள், வளரும் பருவத்தில் ''ஒஸ்ரியோ போறோஸிஸ்''(Osteoporosis) எனப்படும் (எலும்பின் அளவு குறைந்திருத்தல்) நோய்க்கு ஆளாகி, இச்சமதானி மூலம் சிகிச்சை பெறுகின்றார்கள். கலோடினியம் -153 ஆனது $\gamma$ -கதிர்கள், x-கதிர்கள் என இரண்டு வகையான கதிர் வீசல்களைக் கொடுக்கிறது. இவை எலும்புகளினுடாக அனுப்பப்படும் போது உறிஞ்சப்படும் கதிர்களின் அளவுகளில் இருந்து எலும்பின் அடர்த்தியைக் கணிக்கலாம்.

கலாநிதி.நா.சிவயோகன்
திரு.ந.குகநாதன்
விஞ்ஞான பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

ரெக்னீரியம் -99 (Technetium-99) என்ற சமதானியும் பல வகைப்பட்ட நோய்களைக் கண்டு பிடிக்க உதவுகின்றது. இது ஒரு நிலையற்ற சமதானியாகும். இது நிலையாக வருவதற்குக் குறிப்பிட்ட அளவு சக்தியை $\gamma$ -கதிர்களாக வெளிவிடும். இதில் முக்கியமானது என்னவெனில்ரெக்னீரியம்-99 இனது பிரிகையின் போது $\alpha$-கதிர் அல்லது $\beta$ -கதிர் போன்ற உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய துணிக்கைகளை வெளிவிடுவதில்லை. மேலும்ரெக்னீரியம்-99 இனது அரை வாழ்வுக் காலம் (ஆரம்பத்தில் இருந்த அளவின் அரை மடங்காகத் தேய்ந்து போக எடுக்கும் காலம்) கிட்டத்தட்ட 6 மணித்தியாலங்களாகும். இதனால் இச்சமதானி சோதனை முடிந்த பின் நீண்ட நேரம் நம் உடலில் தங்கியிருக்காது. இதன் அரை வாழ்வுக் காலம் குறைவாக இருப்பதால் இதைப்பாவிக்கும் பேது மிகவும் நன்கு திட்டமிட்ட பின்னரே உபயோகிக்க வேண்டும்.

காபன் -11 (Carbon-11) என்ற சமதானியானது பொசித்திரன் (Positron) என்னும் துணிக்கையை வெளிவிடும். இதனைப் பயன்படுத்தி குருதிச் சுற்றோட்டம்; உடலில் ஒட்சிசன், குளுக்கோசு என்பன உறிஞ்சப்படும் அளவு; மூளையில் ஏற்படும் சிதைவுகள் என்பனவற்றை அளக்கலாம். முதலில் காபன் - 11 என்னும் சமதானி உடலினுள் செலுத்தப்படுகின்றது. சமதானியால் வெளிவிடப்படும் பொசித்திரனானது உடனினுள் நீண்ட தூரம் செல்ல முன், ஒரு இலத்திரனுடன் சேர்ந்து இரண்டு $\gamma$ -கதிர்களை வெளிவிடும். இவை உடம்பை விட்டு வெளியேறும் போது எதிர் எதிர்த் திசைகளில் வெளியேறும். நோயாளியின் எதிர்பக்கங்களில் நிலைப்படுத்தப் பட்டிருக்கும் காட்டிகள் இக் $\gamma$-கதிர்களைப் பதிவு செய்யும். இதிலிருந்து உடலில் பொசித்திரன், இலத்திரன் என்பவற்றின் அழிவு நடைபெற்ற இடங்களின் விபரம் பெறப்படும். இதிலிருந்து அவ்விடத்திலுள்ள நோய் பற்றிய தகவல்களையும் அறிந்து கொள்ள முடியும்.

பின்வரும் அட்டவணையில் சமாதனிகளும் அவற்றின் உபயோகங்களும் தொகுக்கப்பட்டுள்ளன.

| சமதானி | பெயர் | கதிர்ப்பு | பயன்கள் |
|---|---|---|---|
| $^{51}Cr$ | குரோமியம் -51 | $\gamma$ | செங்குருதிக் கலன்களின் கனவளவு, மொத்தக் குருதியின் கனவளவு துணிதல். |
| $^{57}Co$ | கோபோல்ற் -57 | $\gamma$ | விற்றமின் $B_{12}$ இனது உள்ளெடுக்கப்படும் அளவைத் துணிதல். |
| $^{60}Co$ | கோபோல்ற் -60 | $\beta, \gamma$ | புற்று நோய்க்கான கதிர் வீசல் மூலமான சிகிச்சை. |
| $^{153}Gd$ | கடோலினியம் -153 | $\gamma$ | எலும்பின் அடர்த்தியைத் துணிதல் |
| $^{131}I$ | அயடீன் - 131 | $\beta, \gamma$ | தைரொயிட் சுரப்பியின் கோளாறுகளைக் காட்டும், ஈரலின் செயற்பாட்டை அளக்கலாம், கொழுப்பின் உயிரியல் பரிமாணத்தை அளக்கலாம், தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் புற்று நோய்க்குச் சிகிச்சை. |
| $^{59}Fe$ | அயண் -59 | $\beta, \gamma$ | செங்குருதிக் கலங்கள் தோன்றும் வீதம், அவற்றின் வாழ்வுக் காலம் என்பவை அளத்தல். |
| $^{32}P$ | பொசுபரசு -32 | $\beta$ | தோல் புற்று நோயைக் கண்டு பிடித்தல். |
| $^{226}Ra$ | ரேடியம் -226 | $\alpha, \gamma$ | புற்று நோயைக் குணமாக்கல். |
| $^{24}Na$ | சோடியம் -24 | $\beta, \gamma$ | குருதிச் சுற்றோட்டத்தில் ஏற்படும் அழுத்தம், தடை என்பவற்றை அளத்தல். |
| $^{99}Tc$ | ரெக்னீரியம் -99 | $\gamma$ | மூளை, தைரொயிட் சுரப்பி, ஈரல், சிறுநீரகம், இதயம் போன்றவற்றை படமாக்கல். |
| $^{3}H$ | ரைரியம் -3 | $\beta$ | உடலிலுள்ள மொத்த நீரின் அளவைத் துணிதல். |

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**

**புதிர் இல. 08**

**சரியான விடை** :-........................................

**முழுப்பெயர்** :-........................................

**முகவரி** :-........................................

........................................

**கையொப்பம்** :-........................................

**இவ்வாரப் புதிர் இல:08**

மணிக்கு 10 கிலோமீற்றர் வேகத்தில் சென்றால் குறிப்பிட்ட ஓர் இடத்திற்குப் பிற்பகல் 1.00 மணிக்குத் தாம் போய்ச் சேர்ந்து விடலாம். மணிக்கு 15 கிலோமீற்றர் வேகத்தில் சென்றால் காலை 11.00 மணிக்கே போய்ச் சேர்ந்து விடலாம் என்று ஒருவர் கணக்கிட்டார். நண்பகல் 12.00 மணிக்கு அவர் அவ்விடத்திற்குப்போய்ச் சேர வேண்டுமானால், எவ்வளவு வேகத்தில் அவர் செல்ல வேண்டும்?

சரியான விடையைக் கூப்பனில் எழுதி 26.07.2002 இதற்கு முன்னர்

பத்திராதிபர்,
யாழ்.விஞ்ஞான சங்கம்(A)
மே/பா விலங்கியல் துறை,
யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குக் கிடைக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

சரியான விடை எழுதும் 3 அதிர்ஷ்டசாலிகளுக்கு தலா 100 ரூபா வழங்கப்படும்.

*புதிர் இல.05*

*சரியான விடை:- 18 வயது*

*சரியான விடை எழுதி அனுப்பிய பலரில் பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்.*

**1.கஜேந்தினி சிவலிங்கம்**
**யாழ். இந்து மகளிர் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

**2. ரஞ்சனா நவரத்தினம்**
**மே/பா.P.சர்வேஸ்வரஐயர்**
**98(100) செட்டிவீதி, நல்லூர்.**

**3.பாலசுப்பிரமணியம் கரண்**
**12/4 அம்பாள் வீதி,**
**நாயன்மார்கட்டு**
**யாழ்ப்பாணம்.**

புதிர் 05ற்கான பரிசுப்பணத்தை அன்பளிப்புச் செய்வோர்

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

**குறிப்பு: புதிர்ப் போட்டிக்கான விடைகளை அனுப்புவோர் தமது முழுப்பெயரையும், முழுமையான அஞ்சல் முகவரியையும் தெளிவாகக் குறிப்பிடவும்.**

# அண்ணல் காந்தியின் கஸ்தூரி திலகம்

21

நான் எங்கேயாவது போய்ப் பிழைத்துக் கொள்ளுகிறேன். உங்கள் உதவி தேவை இல்லை' என்று வீராப்புடன் தந்தையை விட்டு வந்து தனித்து வாழ்கிறவன் அவன். இப்போது 'குழந்தைகளை நீங்கள் தான் கவனித்துக் கொள்ள வேண்டும்' என்று தந்தையின் காலில் போய் விழுவதற்கு அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. குழந்தைகளைத் தன்னிடம் அனுப்பி விடும்படி தாயிடமிருந்து கடிதங்கள் மேல் கடிதங்களாக வந்த போதும் விடாப்பிடியாகவே இருந்தான். நாள் ஆக ஆகத்தான் தாயில்லாக் குழந்தைகளை வைத்துக் கொண்டு குடித்தனம் நடத்துவது எத்தனை கடினமானது என்று அவனுக்குப் புரிந்தது.

'அம்மா, அம்மா' என்று ஓயாமல் அழுத சின்னஞ் சிறுசுகளை அவனால் சமாதானப்படுத்த முடியவில்லை. மனைவியை இழந்ததனால் தான்பட்ட துன்பத்தை மூடி மறைத்து, தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு குழந்தைகளுக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தான். எத்தனை நாட்கள் தான் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ள முடியும்? எனவே, குழந்தைகளை அழைத்துக் கொண்டு சபர்மதி ஆச்சிரமத்திற்குப் புறப்பட்டு விட்டான்.

'உணர்ச்சி வசப்படக்கூடாது, தன்னைப் பார்த்து அம்மா அழுதால் அவளைச் சமாதானப்படுத்த வேண்டும்' என்ற முன்னெச்சரிக்கையுடன் வந்த ஹரிலால் தாயைக் கண்டதும் தன் வயப்பட்டு விட்டான். அவள் கைகளைப் பற்றிக் கொண்டு குலுங்கிக் குலுங்கி அழுதான்.

"அம்மா, குலாப் என்னை மோசம் செய்து விட்டுப் போய் விட்டாள். இனிமேல் எனக்கு நிம்மதியே கிடையாது. வாழ்க்கையில் இருந்த பற்றுத் தளர்ந்து விட்டது. 'நிறையச் சம்பாதிக்க வேண்டும், வசதியாக இருக்க வேண்டும்' என்ற எண்ணத்தில் நான் பாபுவுடன் சண்டை பிடித்துக் கொண்டு வெளியேறினேன். ஆனால் குலாப் போனதிலிருந்து எனக்கு உலக வாழ்வே கசந்து விட்டது. இனி இந்தக் குழந்தைகளுக்காகத்தான் நான் உயிர் வாழ வேண்டும். நீ இவர்களைப் பார்த்துக் கொள். செலவுக்கு என்னால் முடிந்ததைக் கொடுக்கிறேன். இந்தா, இப்போதைக்கு இதை வைத்துக்கொள்" என்று நூறு ரூபாய் நோட்டை எடுத்துத் தாயிடம் கொடுத்தான்.

மகனின் பரிதாப நிலையைக் கண்டு கரைந்து விட்டாள் கஸ்தூரிபா. அவளுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. வெகு சிரமப்பட்டுக் கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

"இதோ பார் ஹரி! உன் வருத்தம் எனக்குப் புரிகிறதடா! இருந்தாலும் மனதைக் களர விடாதே. உனக்கு அப்படி ஒன்றும் வயதாகி விடவில்லை. நீ இன்னொரு கல்யாணம் செய்துகொள். நான் பார்த்து முடித்து வைக்கிறேன். அப்பாவையும் இணங்க வைக்கிறேன்..." என்று அன்னைக்கே உரிய அனுதாபத்துடன் கூறினாள்.

"வேண்டாம் அம்மா! தயவு செய்து அந்தப் பேச்சையே எடுக்காதீர்கள். குலாப் எனக்குப் புனிதம்மிக்க ஒரு பெயர். காலமெல்லாம் அவள் நினைவின் நிழலிலேயே தங்கிச் சுகம் பெறுவதை விட எனக்கு வேறு இன்பம் கிடையாது. மனைவி என்ற உறவு நாளுக்கு ஒன்றாக மலர்ந்து வாடி விடும் மலர் அல்ல. ஒரு முறை பூத்து வாழ்க்கை பூராகவும் மணம் பரப்பும் வாடா மலர் அது..! அம்மா, என்னால் அவளை மறக்க முடியாது, வேறொருத்தியை மனைவியாக மனத்தால் கூட நினைக்க முடியாது... மன்னித்து விடுங்கள்." அவனும் மனிதன் தானே! அவனுக்கு மட்டும் உள்ளம் இல்லையா, அதில் கனிந்த காதலுக்குத்தான் இடமில்லையா?

மகன் பேசியதைக் கேட்டு தாய் பெருமைப்பட்டாள். அவன் உள்ளத்தைப் புரிந்து கொள்ளாமல் ஏதோ உளறி விட்டோமே என்று ஒரு கணம் குமைந்து போனாள்.

"காந்திலால் எங்கேடா? அவனை அழைத்துக் கொண்டு விரவில்லையா?" தன் முதல் பேரன் என்றால் உயிர் கஸ்தூரிபாவுக்கு. இருக்காதா?

"இல்லை அம்மா! அவனை என்னுடன் கல்கத்தாவிலேயே வைத்துக் கொள்ளப் போகிறேன்.



அவ்னை நிறையப் படிக்க வைக்கப் போகிறேன். இங்கே கொண்டு வந்து விட்டால் படிக்க வைக்காமல் பாபு அவனையும் பாழாக்கி விடுவார். நான் ஒருத்தன் திண்டாடுவது போதாதா...?"

ஹரிலாலுக்கு அப்பாவிடமிருந்த அந்தப் பழைய கோபம் இன்னும் தீரவில்லை என்பதைக் கண்ட கஸ்தூரிபா துணுக்குற்றாள். அதைப் பற்றிப் பேசி அவன் வாயைக் கிளற வேண்டாம் என்று பேசாமல் இருந்து விட்டாள்.

ஹரிலால் தாயின் கைகளைத் தொட்டுப் பார்த்தான். அவள் கன்னங்களைத் தடவிக் கொடுத்தான். "அம்மா, நீ ரொம்ப இளைத்துப் போயிருக்கே! அப்பாவுடன் சேர்ந்து கொண்டு நீயும் அடிக்கடி பட்டினி இருக்கிறாயா? வயிற்றுக்கு நிறையுச் சாப்பிடு. உன்னைப் பார்க்கவே எனக்குக் கஷ்டமாக இருக்கிறது! அம்மா, உன்னை அழைத்துக் கொண்டு போய் இரண்டு வேளை சோறு போட முடியாத பாவியாகி விட்டேன் நான்.." உள்ளக் குமுறல் அவன் உணர்ச்சித் துடிப்பிலே தெரிந்தது.

"டேய்! இப்படியெல்லாம் பேசாதே! நீ எங்கையாவது சுகமாயிருந்தால் அதுவே போதும்! நான் தான் கஷ்டப்படுவதற்கென்றே பிறந்தவளாயிற்றே.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. ஏன் அம்மா நீ இப்படி மாடாக உழைக்கவேண்டும்? அப்பாவுக்குச் சமைத்துப் போட வேண்டியது நியாயம் தான். ஆனால், வேலை வெட்டி இல்லாமல் இங்கே உட்கார்ந்திருக்கிறவர்களுக்கெல்லாம் நீ ஏன் சமைத்துப் போட வேண்டும்..?

"ஹரி! வாயை மூடு! அப்பா காதிலே விழப் போகிறது.."

"விழட்டுமே! நான் அவரிடமே சொல்கிறேன். எனக்கென்ன பயமா? மகாத்மாவாம், மகாத்மா! சொந்தக் குடும்பத்தைக் கவனிக்காமல், மனைவி மக்களின் நலனில் அக்கறை காட்டாமல் இவர் நாட்டுக்காக ஏதோ செய்து விடப் போகிறாராம்! சத்திய சோதனையாம்! ஆத்ம சுத்தியாம்! மண்ணாங்கட்டி!"

அவன் வாயைப் பொத்தினாள் கஸ்தூரிபா. "இப்படியெல்லாம் பேசுவதாக இருந்தால் நீ இங்கேயிருந்து போய் விடு."

"பின்னே இங்கேயே இருப்பதற்கா வந்தேன்? இதோ போகிறேன்.

ஒரு நாள் பேத்திகளை அருகில் உட்கார வைத்துக் கொண்டு பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார் தாத்தா. அப்போது கஸ்தூரிபா அங்கே வந்தாள்.

"வா கஸ்தூரி, நீயும் உடகார். உனக்கும் இரண்டு பாடம் சொல்லிக் கொடுக்கிறேன்" என்றார் காந்தி. ராமியும், மனுவும் கை கொட்டிச் சிரித்தார்கள். பாட்டி வெட்கத்தால் தலையைக் குனிந்து கொண்டாள்.

"என்னையும் அரிச்சுவடி கிளாசில் உட்கார வைக்கலாம் என்று நினைக்கிறீர்களா? நான் இப்போது எழுத்துக் கூட்டி பேப்பரெல்லாம் படிக்கிறேன், தெரியுமா? என்றாள் பெருமையுடன்.

"கீதை படிக்கிறாயா?" என்று கேட்டார் காந்தி.

"இன்னும் கொஞ்சம் பெரிய எழுத்தாக இருந்தால் நன்றாகப் படிப்பேன். அப்படியே 'பெரிய எழுத்து' துளசி ராமாயணமும் ஒன்று வாங்கித் தருகிறீர்களா?" என்று குழந்தை போல் கெஞ்சினாள்...

"அதற்கென்ன, வரவழைத்துக் கொடுக்கிறேன்" என்று காந்தி அன்பொழுகக் கூறினார்.

தாத்தாவும், பாட்டியும் பேசிக் கொண்டிருந்ததைச் சாக்காக வைத்துக் கொண்டு குழந்தைகள் மெள்ள நழுவி விட்டன. அதைக் கவனித்தும் கவனிக்காதது போல் இருந்து விட்டார் காந்தி.

"தாத்தாவான பிறகு உங்க குணமே மாறி விட்டது. முன்பெல்லாம் எதற்கெடுத்தாலும் உங்களுக்குக் கோபம் வருமே, ஞாபகமிருக்கிறதா? உங்களைக் கண்டால் நானும் குழந்தைகளும் எப படி நடுங்குவோம்! இப்போது உங்களைப் பார்த்தால், அவர் தானா நீங்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது...."

"என்னவோ, அப்படியொரு பயித்தியக்காரப் புத்தி அப்போது! உன் பொறுமையாலும், அடக்கத்தாலும் நான் எத்தனையோ மாறி விட்டேன்."

"நேற்றுத்தான் நடந்த மாதிரி இருக்கிறது! ஜோகன்ஸ் பர்க்கில் ஒரு நாள் நான் சமைத்துக் கொண்டிருந்தேன். அடுப்பு சரியாக எரியாமல் தொல்லை கொடுத்ததால் சமையல் ஆவதற்கு நாழியாகி விட்டது. நீங்கள் எட்டு மணிக்கு வந்து 'இன்னுமா சமைத்துக் கொண்டிருக்கிறாய்? என்று ஆத்திரமாக இரைந்து விட்டு ஒரு பக்கெட் தண்ணியை எடுத்து அடுப்பின் மீது கொட்டி அணைத்து விட்டுப் போய் விட்டீர்கள். அன்று இரவு எல்லோரும் பட்டினியாய்ப் படுத்துக் கொண்டோமே. நினைவிருக்கிறதா?... எனக்குப் பொழுது போக விட்டால் தென்னாப்பிரிக்காவில் நாம் குடித்தனம் பண்ணின வேடிக்கையையெல்லாம் ஒவ்வொன்றாக நினைத்துக் கொண்டு நானே சிரித்துக் கொள்வேன்."

"அதெல்லாம் பழைய கதையாகி விட்டது!... போகட்டும், விடு... உன் பிள்ளை வந்திருந்தானே, என்ன சொன்னான்?"

"என்ன அப்படிப் பேசுகிறீர்கள்? உங்களுக்கு மாத்திரம் அவன் பிள்ளை இல்லையா... பாவம். என்னவோ கொஞ்சம் கோணல் புத்தி.. நீங்கள் அன்பா இரண்டு வார்த்தைகள் பேசினால் சரியாய்ப் போய் விடுவான்..."

"அது சரி! அவன் என்ன சொன்னான், அதைச் சொல்லு!..."

"ஒன்றும் சொல்லவில்லையே? அவன் குறையை ஒரு குரல் அழுது விட்டுப் போனான்."

"ஏன் மறைக்கிறே! என்னை மனதாரத் திட்டி விட்டுப் போயிருப்பானே!"

"எதையோ உளறி விட்டுப் போனான். அவனுக்கு அவ்வளவுதான் புத்தி." சாமர்த்தியமாகப் பதில் சொன்னாள் கஸ்தூரிபா.

"சே...சே? அவன் புத்திசாலித்தனத்திற்கு ஒன்றும் குறைச்சல் இல்லே! நம்ம பிள்ளைகளில் இவன் தான் ரொம்பக் கெட்டிக்காரன் என்பது என் அபிப்பிராயம். அவனுக்கு எது சரி என்று தோன்றுகிறதோ அதன் படி செய்யட்டும். ஒழுங்காக எங்கேயாவது பிழைக்கட்டும்."

மகனைப் பற்றித் தாய்க்கு இருந்த கவலை தகப்பனுக்கும் இருந்தது. கருணை உள்ளம் படைத்தவருக்கு, அன்புத் தெய்வத்திற்கு பெற்ற பிள்ளையிடம் அன்பும் அக்கறையும் இல்லாமலா போய் விடும்? ஆனால், துறவு நிலையில் சொந்த உணர்ச்சிகளை உள்ளடக்கிக் கொண்டார் காந்தி.

அடுத்த மூன்று ஆண்டுகள் காந்திக்குச் சோதனை மிக்க காலம். அவருடைய சத்திய நெறிக்கும், ஆட்சியாளரின் சர்வாதிகாரத்திற்குமிடையே போர் மூண்டு விட்டது. அடக்கு முறையின் அடையாளமாக! ரௌலத் சட்டம்' வந்தது. அகிம்சையின் அடையாளமாக 'ஹர்த்தால்முறை' பிறந்தது. அவர் வகுத்த அறப்போர், பலாத்காரப் புயலில் சிக்கிச் சின்னாபின்னமாகவே, "நான் இமாலயத் தவறு இழைத்து விட்டேன். வெட்கித் தலை குனிகிறேன்" என்று அறிவித்து முதன்முறையாக அரசியலுக்கு அறநெறியை அறிமுகப்படுத்தினார் காந்தி. 'பஞ்சாப் படுகொலை' பாரதத்தை விழிப்புறச் செய்தது. ""பழி வாங்கியே தீருவோம், வழி தெரிந்து விட்டது" என்று மக்கள் சூளுரைத்தனர்.

"வெள்ளையனுடன் ஒத்துழைக்காதே. அவன் துணியை உடுக்காதே, அவன் சட்டத்தை மதிக்காதே, அவன் கேட்கும் வரியைக் கொடுக்காதே, பட்டாளத்தில் சேராதே, பள்ளிக்குப் போகாதே, நீதிமன்றங்களை நாடாதே, அன்னை அழைக்கிறாள், அவசரம், அவசரம்" என்று அண்ணல் அறைகூவல் விடுத்தார். ஊர் ஊராகச் சென்று, சத்தியத்தின் சங்கநாதத்தை எழுப்பினார். நாட்டுப் பற்றுமிக்கவர்களெல்லாம் சிலிர்த்தெழுந்து சாத்விகப் போராட்ட வேள்வியில் குதித்தனர். பல்லாயிரக் கணக்கான பாரதச் செல்வங்கள் பதினாயிரம், இருபதினாயிரம் என்று சிறை புகுந்து, சிறைப்

**பரணீதரன்**

பட்டிருந்த அன்னைக்குத் துணையாக நின்றனர். அடக்கு முறையின் அலங்கோலம் அளவுக்கு மீறியது.

'ஓராண்டில் சுயராஜ்யம் வாங்கித் தருகிறேன்' என்று வீரம் பேசிய காந்தி சற்று மனம் தளர்ந்தார். ஆனால், நம்பிக்கை இழக்கவில்லை. 'பர்தோலி'யில் சத்திய வழியில், ஒரு சட்ட மறுப்புச் சோதனை செய்து பார்த்து விடுவது என்று தீர்மானித்து, தேதியும் குறித்து விட்டார். அப்போது ஐக்கிய மாகாணத்தில் மீண்டும் மிருக வெறி தலை தூக்கியது. ஆயுதமற்ற பொலிசை மக்கள் தாக்கித் தீயிட்லிட்டுப் பொசுக்கினர். அகிம்சைப் போருக்கு இதை விட அபசகுனம் வேறென்ன வேண்டும்? காந்தி ஐந்து நாட்கள் உண்ணா நோன்பு மேற்கொண்டார். 'அடுத்தபடி என்ன செய்யலாம் நமக்குத் தோல்வி மேல் தோல்வியாக வருகிறதே" என்று மனம் வெதும்பி ஒரு நாள் ஆழ்ந்த சிந்தனையில், அசையாத சிலையாய் உட்கார்ந்திருந்தார்.

கஸ்தூரிபாவுக்கு வேறு ஏதோ கவலை. கணவனிடம் அதைப் பற்றிப் பேச அவளுக்கு ஏது நேரம்?

(தொடரும்)

## சிந்தனையாளரின் சுவையான அனுபவங்கள்

### வயதே ஒரு சுமைதான்

கவியரசர் ரவீந்திரநாத் தாகூர் தமது எண்பதாவது வயதைத் தொட்ட போது காந்தியடிகள் ஒரு வாழ்த்துத் தந்தியை அவருக்கு அடித்திருந்தார்.

'எண்பதுவயது போதாது. நூறு வயதுக்கு மேலும் வாழ்ந்து கலைச் சேவை செய்வீராக'

இது காந்தியடிகள் அனுப்பிய தந்தி வாசகம்.

தாகூர் காந்தியடிகளுக்குப் பதில் தந்தி அனுப்பினார்.

உங்கள் அன்புக்கு நன்றி. 'வயது எண்பது ஒரு சுமை. எண்பது வயதைச் சுமக்கவே நான் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறேன் நூறு – நூற்றைம்பது வயதுகளைச் சுமக்கும் அளவுக்கு எனக்கு சக்தியில்லை."

இது காந்தியடிகளுக்குத் தாகூர் அனுப்பிய பதில் தந்தி.

### எழுதியது யாருக்கு

பிரபல எழுத்தாளரான சரத்சந்திரர் வீட்டில் சில நண்பர்கள் கூடியிருந்தனர். அவரைப் புகழ வேண்டுமென்று ஒருவர் சொன்னார்.

'சரத் பாபு' நீங்கள் எழுதுவது எவ்வளவு எளிமையாக இருக்கிறது. ரவீந்திரநாத்தாகூரும் எழுதுகிறாரே அதுவும் எழுத்தா? ஒன்றுமே புரியவில்லை' என்றார்.

'அவர் என்போன்றவர்களுக்காக எழுதுகிறார். நான் உங்களுக்காக எழுதுகிறேன்,' என்றார் சரத்பாபு.

### காண முடியுமா?

பிரெஞ்சு நாவலாசிரியர் பால்சாக் வசித்த அறைக்குள் ஓரிரவு திருடன் நுழைந்து மேசையைத் துழாவிக் கொண்டு இருந்தான். தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருந்த பால்சாக் இதைக் கவனித்துவிட்டு உரக்கச் சிரித்தார்.

'ஏன் சிரிக்கின்றாய்?' என்று மிரட்டினான் திருடன்.

'நான் பகலில் காண முடியாத பணத்தை இரவில் கண்டு விடலாமென்று இவ்வளவு சிரமப்படுகிறாயே! அதைத் நினைத்தேன்; சிரிப்பு வந்தது!' என்றார்.

### மறந்து விடுவார்கள்

தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் கர்நாடகம் கேரளத்தின் சில பகுதிகளும் சேர்ந்த சென்னை ராஜதானி விடுதலைக்கு முன்பு இருந்தது. அப்போது இருந்த சட்ட சபையில் உறுப்பினராக வி.ஆர்.கிருஷ்ணய்யர் இருந்தார். ராஜாஜி பிரதம மந்திரி.

'உம்மைப்போன்ற அறிவாளிகள் மந்திரியாக இருந்தால் மக்களுக்கு உபயோகமாக இருக்குமே', என்றார் ராஜாஜி.

'எனக்கு உங்கள் கண்ணில் பட்டுக் கொண்டே இருக்க வேண்டும் என்று ஆசை. எதிர்க் கட்சியில் நான் இருந்தால் தான் அது சாத்தியம். மந்திரியாக உங்கள் பக்கத்தில் உட்கார்ந்தால் நான் இருப்பதையே மறந்து விடுவார்கள்' என்றார் கிருஷ்ணய்யர்.

# மௌனத்தின் தேடல்கள்

### தளிரே...!
நிமிர்ந்த நிலையும்
நேர் கொண்ட பார்வையும்
கைகளின் வலியும்
கள்ளச் சிரிப்பும்
பாட்டியின் ஆசீர்வாதமும்
நானிலம் போற்றும்
நல்ல செயலுக்குத் தானே.
*பே.தவேஸ்,*
*யாழ்ப்பாணம்.*

### தம்பி கவனமடா!
கடவுளுக்கும்
காய்ச்சல் வரும்
காலமிது கண்ட படி
தெருவில் திரியாதே
தத்தளிக்கும் தரணி
உன்னைத்தான்
நம்பியிருக்கிறது.
*கா.அருந்தா,*
*முடமாவடி.*

### பின்பற்று!
துடிக்கின்ற இளமையிது
துயருற்ற வாழ்வெதற்கு?
படிக்கின்ற பருவமிது
பள்ளிக்குக் களவெதற்கு?
பிடிப்புக் கொள் வாழ்க்கையில்
பின்பற்று பாட்டி சொல்
*அ.மீனா,*
*சாவகச்சேரி.*

### வாழ்த்து!
நாளைய உலகை
ஆளப்போகும் இளம் தளிரே
எதர்காலம் உனக்குண்டு
எம் சந்ததியை வாழவைக்கும்
பொறுப்பும் உனக்குண்டு
வரலாறு படைக்கப்போகும்
உன் கரங்கள் வலிமைபெறட்டும்.
*K.கற்பகவல்லி,*
*பருத்தித்துறை.*

### கைவைத்தியமிது!
நெற்றி சுடுகிறது பேரா!
''குடி நீர்'' வைச்சுத் தாறன்!
''குடிநீர்'' குடிச்சால்
காய்ச்சல் வலி தீரும்!
கைவைத்தியமிது பேரா!
*- மாருதி,*
*ஆவரங்கால்.*

### உதவிக் கரம்!
தாய் இழந்து தந்தை இழந்து
வீதிக்கரை வாழ்வென்று
போன பின்பும்?....
நானுண்டு மனிதராக
நீ வாழ என்றுரைத்து
வாழ்த்தினையோ தாயே
நீ வாழி வாழி...
*தி.ஜெயராஜ்,*
*நல்லூர்.*

### பிரார்த்தனை!
அப்பாவும் அம்மாவும்
உனக்கில்லை என்பதால்
பாதியிலே படிப்பை
விட்டு விடாதே பேரா
பள்ளி சென்று பயின்று வா
நாளை இந்த உலகை
வென்று வா?
*ப.உதயகுமார்,*
*அளவெட்டி.*

### இன்றைய தெரேசா!
இந்த
யாரும் அற்ற அனாதையில்
தன்னல மற்ற தனயனின்
தலையினைத் தடவி
ஆறுதல் சொல்லும் தாயே!
நீ யார்?.....
ஓ.. இன்றைய தெரேசாவோ?
*வீ.மயூரதாஸ்,*
*வராத்துப்பளை.*

### அருளாசி..!
ஏழ்மைக் கடலில் உதித்து
துன்பக் கடலில் தவித்த - நீ
இன்பக் கடலில் நீந்த
பாட்டியின் அருளாசியை
வேண்டி நிற்கின்றாயோ...?
*A.S.கந்தன்,*
*நல்லூர்.*

### உரைப்பது!
குழந்தாய்...
குதூகலமற்று நீயேன்
சோர்ந்து போகின்றாய்...? - உன்
கனவுகளும் கற்பனைகளும்
தொலைந்து போகிறதோ - எம்
சமாதானம் போல்...?
காத்திரு காலம் வரும்...
என்றா உரைக்கிறாய் தாயே!
*சி.மதியழகன்,*
*திக்கம்.*

### பற்றி விடு!
ஏழ்மையைச் சுவாசிக்கும்
என்னருமைச் சகோதரனே
சிட்டுக் குருவியெனச்
சிறகடிக்கும் பருவத்தில்
சுட்ட வறுமையினால்
சுமை தாங்கி ஆனாயோ?
பொட்டிட்ட பொன் மகளின்
போதனையைப் பற்றி விடு.
*இரா.ஜெயக்குமார்.*

### உயர்வாய்!
ஆச்சியின் ஆசியாலே
அவனியில் உயர்வாய் தம்பி
ஆசிகண்டு உன் முகம்
மலர்வது அதனால் தானே?
*கு.சிவகுமார்,*
*சுன்னாகம்.*

### ஆத்மாவின் பாசை!
புண்பட்ட மனித வாழ்வில்
புயல் வந்து ஓய்ந்த பின்பும்
வழியொன்றுனக்குண்டு
வருந்தாதே மகனே – நீ
துவளாத வாழ்வுகாண
துணையாக (நான்)
இருப்பேன்.
*R.காயத்ரி,*
*நல்லூர்.*

### ஆசி வேண்டும்!
முதியோரைப் புறக்கணித்தால்
சீரழிகிறது இளம் சமுதாயம்
நீயாவது ஆசி பெற்று
சிறப்பான சமுதாயத்தை
இனிமேல் கட்டியெழுப்பு.
*L.சசிதேவி,*
*வல்வெட்டித்துறை.*

### வெற்றி உனக்கே!
தாய்த்திருநாட்டின் - எதிர்கால
தலைமகன் நீயோ?
தமிழரின் தலையெழுத்து
தானாக மாறிடட்டும் இல்லையேல்
தாமதமின்றிப் புறப்படு - நாளை
வெற்றி உனக்கே நானிடும்
வீரத் திலகம் உன் வெற்றிக்கு
வித்திடட்டும்.
*பூ.சாவித்திரி,*
*இரா. நுண்கலைக்கழகம்.*

### தாய் இவள்!
வெற்றித் திலகமிடும்
வீரத்தாயோ....? இல்லை
நெற்றி வியர்வைதனை
துடைத்து விடும்
ஏழைத்தாயோ..?
*வீ.றஞ்சி,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*



### அர்த்தமுள்ளதாய்...!
அகதிகளும், அநாதைகளும்
அநீதிகளும் அவலங்களும்
நிறைந்த எம் தேசத்தில்
அன்னையே உன் ஆசீர்வாதம்
அர்த்தமுள்ளதாயாகட்டும்.
*பரணி பாதுசன்.*
*நல்லூர்.*

### ஆறுதலற்ற மனங்கள்!
இடிந்துபோன சுவர்கள்தான் எச்சம்
ஒடிந்துபோன மனங்கள் தான் மிச்சம்
இங்கே!
'யார், யாருக்கு ஆறுதல் சொல்வது.
*யோ.திருவேரகன்,*
*சாவகச்சேரி.*

### ஏற்றும் ஏணி!
உயரத்தில் ஏறி நிற்கும்
பேரனை 'வாழ்க்கையில் நீ
மேலும் உயர்வாய்' என்று
ஆச்சி ஆசி கூறுகிறாள்
இந்த ஆசி அவனை
ஏற்றும் ஏணி
இவன் தனது இலட்சியத்திலும்
உயர்ந்தே இருப்பான்.
*ச.தமிழினி,*
*வழக்கம்பரை.*

### தாயின் ஆசி!
மகனே! தாயின் ஆசியுடன்
இவ்வுலகில் நீ வாழும் வரை
தாழ்வின்றி என்றும் உயர்ச்சியுடன்
வாழ்வாயாக.
*மனோ.*

### அன்புப் பரிசு!
சாந்து பூசப்படாத
சிவரல்லடா
சின்னஞ் சிறுவா நீ
உந்தன் வதனமதில்
சாந்தம் மலரவே
சத்தியம் செய்து
அரவணைக்கும்
ஆச்சி கரம் தான்
அன்புப் பரிசுனக்கு.
*ஜோ. ஜெஸ்ரின்,*
*கொழும்புத்துறை.*

### அனுபவப் பெட்டகம்!
பாட்டி
உனது பேரன்
பாடசாலை செல்லாவிடினும்
உன் அனுபவங்கள்
உன் பேரனை மனிதனாக்கும்.
*ஸ்ரீ.சிந்துர்ஜன்,*
*ஆனைப்பந்தி.*

### ஆசிகள்!
அன்புவழி நீ நின்று
அறவழிதான் சென்று
அகிலத்தை வென்றிடவே
உன் அம்மாவின் ஆசிகள்.
J.தனேஸ்,
நல்லூர்.

### காரணம் என்ன?
சிறுவனே!
நெற்றித் திலகமிட்டு
ஆசி வாங்குவதன்
நியாயமான காரணத்தை
எமக்கும் கூறுவாயா?
*T.தனரூபினி,*
*பருத்தித்துறை.*

### குறும்பு!
சிட்டுக் குருவியாய்
சிறகடிக்கும் பருவத்தில்
குறும்புகள் புரிவதற்கா?
ஆசீர்வாதம் பெறுகின்றாய்...!
*வீ.உரேஸ்,*
*உசன்.*

### உறவு!
அன்புச் சிறகு விரிக்கும்
உறவுகளின் உன்னத உறவு
உத்தமமாய்த் தெரிகிறதே.
க.நிரோஷினி,
தென்மட்டுவில்.

### பலவீனம்!
சொந்தங்களை இழந்தவன்
பந்தங்களையாவது மீட்க
தன் பலவீனம் தெரிந்திருந்தும்
தன்னை இந்த உலகிற்கு
அர்ப்பணித்து தியாகியாக மாறி விட
தாயவளிடம் சின்னஞ் சிறுவன்
ஆசி பெறுகிறான்.
*T.குமரநாதன்.*

### விட்டுவிடு அசட்டையை...!
தம்பி....!
மலரப் போகும் இளஞ் சமூகத்தில்
செய்ய முடியாதது ஒன்றுமில்லை
அனைத்தையும் செய்து
சாதனை புரிவாயாக...! எனப் பாட்டி
ஆசி வழங்க நீயோ அசட்டையாக நிற்கிறாய்.
*P.Y.ஜயந்தி,*
*வல்வெட்டி.*

### கற்றுக்கொள்!
வளர்ந்து வரும் பிஞ்சிற்கு – பாட்டி
என்னதான் ஆசீர்வாதம்
கொடுக்கிறாள் – ஓ
சீரழிந்திருக்கும் எம் சமூகத்தில்– நீ
சீராக வாழக் கற்றுக்கொள் என்றா?
*முல்லை முருகன்.*

### விழித்துக் கொள்!
அன்னையே - இது
சங்ககாலமல்ல
மானிடநேயம் சாகும் காலம்
உன் மகனை நல்ல மனிதனாக்கு
மானிலமே உன்புகழ் பாடும்.
*அருமை - அன்பு,*
*கொற்றையூர்.*

## மௌனத்தின் தேடல்கள் – 22



அன்பின் வாசகர்களே, உங்கள் எண்ணத்தில் தோன்றும் உன்னத வெளிப்பாடுகளை மிகச்சிறிய கவிதைகளாக்கி தபால் அட்டையில் சங்குநாதத்திற்கு அனுப்பிவையுங்கள்.

முடிவுத்திகதி :– 27.07.2002

அனுப்ப வேண்டிய முகவரி:– மௌனத்தின் தேடல்கள் –22
சங்குநாதம்,
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# கவிதைக் கலசம்

## அன்பு!

அறிந்து கொண்ட
மாத்திரத்தில்
ஆழமாய்
துளிர்விட்டு
அழகாகப் பரிணமித்த
அற்புத விருட்சம்.

இ.ஷோபனா
வேலணை.





## அன்னை!



முந்தித் தவங்கிடந்து முந்நூறு நாட்சுமந்து
முத்தென பிள்ளையை ஈன்றெடுக்கிறாய்
பாலூட்டும் போதே அதனுடன்
பண்புகளையும் ஊட்டி விடுகின்றாய்
சிறு பிள்ளை தேவையறிந்துஅதற்கு
சினமின்றி பணி புரிகின்றாய்
கண்ணை இமை காப்பது போல
கண்ணியமாக காத்து வருகின்றாய்
பள்ளிப் பருவம் வந்ததும்
பாதிவழிவந்து படிக்க அனுப்புவாய்
கண்மணியின் கடமைகளை நீ
கருத்தறிந்து செய்து முடிப்பாய்
உண்ண வைத்து உண்ணுவாய்
உறங்கவைத்து உறங்குவாய்
அன்னையே அன்பதனை அளவின்றிக் கொடுக்கின்றாய்
அன்பான அன்னையே
குழந்தையின் வளர்ச்சியிலே
குறைவின்றி பங்களிப்பாய்
இத்தனை திறமைகளையும்
அன்னையே நீ கற்றது எங்கே?

க.மகுடநந்தினி,
வட்டுக்கோட்டை.

## நட்பு!



நீயே எந்தன் உயிர்நாடி!
என்றும் நான் உன் உயிர்த்தோழி!!
நீ,
எந்தன் மனத்தில் ரோஜாப்பூ!
என்றும் கண்டதில்லை ரோஜாமுள்!!
பழகினோம் சில நாட்கள்
பிரிய முடியவில்லை.
நீ எந்தன் உறவுமல்ல
ஆனால்,
நீ துயரடைய என் மனம் வாடும்!
உன் இன்பம் கண்டு என் மனம் துள்ளும்!!
ஏன் நண்பி!
இதுதான் நட்பென்பதா?
எனக்குப் புரியவில்லை!
உனக்குப் புரிகிறதா?

த.பூஜித்திரேயி,
கரவெட்டி.

## தாயில்லாக் குழந்தை நான்!

நீயற்ற நான்
ஒரு தாயற்ற குழந்தையம்மா..
பத்துத் திங்கள் சுமந்தவள்
பல மைல்கள் தொலைவிருந்தும்
சொந்தம் பல விருந்தும் – இங்கு
பற்றுக் கொண்ட நான்
தாயில்லாக் குழந்தையம்மா...




உணவு வேண்டும்
உன் கரத்தால் பரிமாற
உண்ண வேண்டும் – நான்
உள்ளத்தால் மகிழ வேண்டும்..
வெறுக்கும் நீ
வெந்து போகும் இதயத்தை
எரிக்கிறாய் நினைவால்
என்ன சொல்லி யாறுவேன்..?
நிறை சொந்தம் இருந்து
மெனை
நிர்க்கதி யடைய வைத்த
நின் இதயம் என்றும்
நின்மதி அடைவதாக..

உனை இழப்பதால்
நான் தாயில்லாக் குழந்தை
இனி
நாடா.. காடா
நாட்கள் போகும்
நானடைய என்னவுண்டு..?
இருந்தும் சொல்வேன்...
இறக்காது என் நேசம்
இந்த அநாதைக்குள் அது
இமயமாய்க் கிடக்கிறதே..!

சி.சிறிதர்,
திக்கம்.

## நாங்கள்!

நாங்கள்
நிம்மதியைத் தொலைத்து
நீண்ட நாட்கள் ஆனவர்கள்
நாங்கள்
நிஜங்களை
இழந்து
நீண்ட தூரம்
சென்றவர்கள்
நாங்களும்
சிறகடிக்க
நினைத்து
சிதைந்து
போனவர்கள்



எங்களுக்குள்ளும் பல ஏக்கங்கள்
வினாவாய் விடையாய்
வியப்புக்குறியாய்
நாங்கள் ஏன்
பச்சை குத்தப்பட்டோம்
எங்களுக்கு மட்டுந்தானா
வரிசைகளும் வரிகளும் வரம்புகளும்
நாங்கள் தட்டினோம்
எமக்காய் எந்தக்கதவுகளும்
திறக்கப்படவில்லை.
நாங்கள் கத்தினோம்
எமக்காய் எந்தச் செவிகளும்
கேட்கப்படவில்லை
இன்னுமா புரியவில்லை?
நாங்கள் யாரென்பது?

இ.ஜெறோ.
யாழ்ப்பாணம்.

## முட்களுக்கோர் முகமாலை!

மூகர்ந்து பார்க்கின்ற சில முகங்களை
முட்டவிடக்கூடாது என்பதற்காகவே
முட்கள் முகிழ்த்தன ரோஜாவில்
ரோஜாவைக் காக்கின்ற கடமையை
பெற்றுக் கொண்டதால் மட்டும் முட்கள்
பெருமையடிப்பதில்லை.
முட்களின் பெருமையை
பூக்களின் வாழ்நாளே வரையறுத்துக்
காட்டுகிறது.
மலர்களின் ஆளுமையில்
முட்களின் முகாமைத்துவம்
மூடப்பட்டு விட்டது
எந்த முள்ளாவது பூக்களின்
அடிக்காம்பில் அடிமையாக
முளைத்ததுண்டா?
முட்கள் மட்டும் தமது
முனைகளின் முகங்களை நீட்டுவோம்
என்று
முனைப்புடன் முடிவெடுத்தால்
பூக்கள் தாம் புகழ் பெறுவது எப்படி?
எனவே மனிதர்களே!
கட்டிய மாலைகளைக் கையிலெடுத்து
கடமையைக் கடக்காத
முட்களின் முகத்தில்
முதலில் சூட்டுங்கள்!

ந.சத்தியவேந்தன்.
மானிப்பாய்.

## காதல் எதில்!

அடியேய் காதலி
என் இதயத்தில் நீ கட்டிய
காதல் மாளிகை கல்லறை ஆனது
ஏன்?



உன்னைத் தேடித் தேடி
தாகமானபின் தண்ணீர் குடித்தால்
தொண்டைக்குள் முள்ளாய் சிக்குதடி
தண்ணீர்

கனக்கும் இதயத்திற்கு இசையைவிட
வேறென்ன ஆறுதல்
உன் நினைவோடு வீணையைத்தொட்டால்
தந்திகள் எல்லாம் முட்கம்பி ஆனதடி
புல்லாங் குழல் துளைகளில் எனது மூச்சே
நெருப்பாய் விரலைச் சுட்டதடி

இப்போது புரிகிறது காதல் என்பது
கவிதைகளோடும்
கடிதங்களோடும்
பூச்செண்டுகளோடும் மட்டுமல்ல
காயங்களோடும்
கண்ணீரோடும்
உயிரோடும் சேர்ந்ததென்று.


தென் சீலன்.

## சொல்லாமலே!

இறுதித் தேர்வின்
சித்தியை மெச்சி
பாராட்டிய போது
வாட்டம் கண்டு
சுரமா வென்று
இதமாய்க் கேட்க
இல்லை யில்லை
இலை மறை
காய் போல்
காதலென்று
நான்கு வார்த்தை
காற்றில் வந்தது
இல்லை யில்லைக்
காத லென்றதால்
உண்மை கூறும்
அரு மருந்து
கால மென்று
காத்திருக்கையில்
ஆண்டிரண்டில்
ஆண்டவனருளால்
திருமண மென்று
அழைப்பு வந்தது
நேரில் சென்று
வாழ்த்திய போது
சுகமா வென்று
சுருங்கிய கேள்விக்கு
இல்லை யில்லை
இற்றை வரை
இனிய சுகம்
என்று பதிலை
என்னால் சொல்ல
ஏன் முடியவில்லை?

க.நாசராசா,
நுணாவில்.

## விடை கொடுப்பது விழி நீர்...!



வழியனுப்ப....
கரம் அசைய மறுக்கிறது
உனக்குக் கையசைத்து
விடைகொடுக்க
மூச்சு வர மறுக்கிறது...
உனக்கு விடை கொடுத்து
வழியனுப்பும்
வார்த்தைக்காய் – என்
கைகள் உனக்கு
அசைந்து விடை
கூற வில்லை – என்...
கண்ணீர்த் துளிகள்தான்...
விடை கொடுக்கிறது.

அன்பே...!
நீ பிரிந்து செல்லும் வேளை...
வார்த்தைகள் வரமறுக்கிறது
உனை வாழ்த்தி

ஈ.ஆனந்தன்,
பருத்தித்துறை.

## இந்த நிலை மாறுமா...?

வாழ்வின் அவலங்கள் வந்தவழி தெரியாமல்
போயிட வேண்டுமிந்தப் பூமிதனில் என்றும்
சாவின் விளிம்பினிலே சந்ததிகள் வாழாமல்
ஓயட்டும் மரண ஓலம் ஒழியட்டும்
போர் முழக்கம்

தாயின் வதனமதில் துயரங்கள் மறையட்டும்
சரித்திரத்தில் நாமும் சிரித்திட வழிபிறக்கட்டும்
கோயில் குளமெல்லாம் குதூகலங்கள்
பொங்கட்டும் - குல மகளிர் நெற்றியிலே
குங்குமம் நிலைக்கட்டும்

வேலையில்லாத் துயரம் விடி நாளில் அகலட்டும்
வெந்தணலில் வேகுகின்ற இந்த நிலை மாறட்டும்
சாவும் துயர் நிலையும் சரித்திரத்தில் மாறட்டும்
சமாதான சக வாழ்வு
செகந்தனிலே மலரட்டும்!

வே.ஐ.குமரதாசன்,
அரியாலையூர்.

# விடியலை நோக்கி

வாழ்க்கை வட்டம் சுழன்று கொண்டிருந்தது. கவிதாவுக்குப் புரியாத புதிராக இருக்கிறது. வாழும் கிராமம் வசதியாக இல்லாவிட்டாலும் நிம்மதியைத் தந்திருந்தது என்பதனை மறுப்பதற்கில்லை. என்றாலும், ஒரு பெண் இத்தனை கஷ்டங்களை தாங்கமுடியுமா? தனது பெற்றோர் பட்ட கஷ்ரங்கள் தான் எத்தனை! தனது தம்பிமார்களான மணி, விஜயன் இருவரும் நன்றாகப் படிக்க வேண்டும், நல்ல உத்தியோகத்தில் அமர வேண்டுமென்றும் அவள் வேண்டாத கோவில்கள் இல்லை. அன்பைப் பகிர்ந்து கொள்வதற்கு அவளுக்கு அவளது சகோதரங்களைத் தவிர யாருமில்லை.

பருவ வயது வந்தாலும் கல்யாணச் சந்தையில் அவள் விலைபோக முடியவில்லை. தன் படிப்பைத் தன் தம்பிகளுக்காக தியாகம் செய்தவளல்லவா அவள். தம்பிமார்கள் இருவரும் பல்கலைக்கழகம் புகுந்து பட்டம் பெற்று விட்டார்கள். உள்ளம் புளகாங்கிதம் அடைந்தாள் கவிதா.

மணி பல்கலைக்கழகத்தில் வைத்திருந்த காதல் தொடர்பினால் அவளையே கட்டவேண்டும் என்று அடம் பிடித்துச் சகோதரி ஒருத்தி இருக்கிறாள் என்பதையே மறந்துவிட்டுக் கடமை மறந்து, காதலின் பின்சென்றான். இன்று துணை இருப்பது இளைய தம்பி விஜயன். தாய், தந்தை வறுமையில் பட்ட கஷ்டங்களையும், தனது சகோதரியின் நிலைமையையும் உணர்ந்து உழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் பேப்பர் படித்து நேர்முகத் தேர்வுகளுக்குப் போய் எதுவுமே வஞ்சகம் மிக்க சமூகத்தில் சரிப்பட்டு வராது என்பதை உணர்ந்து வெளிநாடு செல்ல வெளிக்கிட்டான் விஜயன்.

**சிறுகதை**

கவிதாவுக்கு வயது 30 ஆகிறது. தையல் வேலையும், சமையலும் நன்றாகச் செய்வாள். இதற்கு மேலாக ஒழுக்கமும், குடும்பப் பொறுப்பும்,எளிமையும் அழகும் நிறைந்த பெண். எவன் வருவான் பணம் இல்லாவிட்டால். வெளிநாடு சென்ற விஜயன் சிந்தித்தான். தன் நண்பர்கள் படுகின்ற கஷ்டங்களை அவன பத்திரிகை வாயிலாகவும், கடிதங்கள் வாயிலாகவும் அறிந்திருக்கின்றான். நடுங்கும் குளிரில் பட்டினி கிடந்து பணம் அனுப்பப் பகட்டு வாழ்க்கை நடாத்தும் பண்பற்ற குடும்பங்களையும் அவன் நேரில் கண்டிருக்கின்றான். கொழும்பு சென்று ஒரு மாதம் தங்கிய போது அனுபவத்தில் அவன் கண்ட உண்மையிது.


நோயுற்ற தாய், தந்தையரைக் கவனிக்கும் பொறுப்புக் கவிதாவுக்கு இருக்கிறது. தம்பியிடம் தனது தியாகங்களைச் சொல்லி அழமுடியாவிட்டாலும் தம்பி உணர்ந்து இருக்கிறான் என்ற தெம்பு இருந்தது. முதல் தம்பி பாதை தவறிய பயம் தன் இளையதம்பியும் அப்படி ஆகி விடுவானோ என்ற ஏக்கம். கடவுள் கைவிடுவாரா? விடவில்லை. பட்டம்பெற்றும், பருவம் அடைந்த அக்காவை கரைசேர்க்கத் துடித்தான் விஜயன். இரவு பகலாகக் கனடாவில் உழைத்தான்.

இரண்டு வருடங்கள் கழிந்தன. தனதுதாய் தந்தை செல் அடிபட்டு இறந்து விட்டனர் என்ற சோகச் செய்தி அவனை வந்தடைந்த போது அவன்பட்ட வேதனைக்கு அளவேயில்லை. தனது கஷ்டங்களை பிள்ளைகளுக்குச் சொல்லாமல் வளர்த்தார்கள். படிப்பித்தார்கள். ரேடியோவில் ஒலித்துக் கொண்டிருந்த பாட்டு இருக்கிற சோகத்தை ஆற்றுவதற்குப் பதிலாக வெடித்துக் கிளம்ப வைத்தது.

'பெற்றெடுத்த உள்ளம் என்றும்தெய்வம் தெய்வம்'

அவள் பேசுகின்ற வார்த்தை என்றும் மௌனம் மௌனம்'

யுத்த தேசம் சாதாரண வாழ்க்கையை எவ்வளவு அசாதாரணமாக்கி விட்டது. வெளிநாடு வந்து கஷ்டப்படுவதற்குக் காரணம் ஒன்று நாட்டு நிலைமை. மற்றையது வீட்டு நிலைமை. ஒரு வரைக்கூட மணம் செய்து பார்த்து பேரப்பிள்ளைகளோடு கொஞ்ச இயலாமல் மடிந்து விட்டார்கள். பரிதாபத்தை யாரிடம் போய் முறையிடுவது. நல்ல குடும்பங்கள் நாசமாகப் போவது ஆண்டவன் நியதியோ? சிந்திக்கச் சக்தி இல்லாதவனாக வெறுந்தரையிலேயே உறங்கி விட்டான் விஜயன்.



அனுப்பிய காசையெல்லாம் பத்திரமாகப் பாங்கில் போட்டு தேவையான போது செலவழித்துத் தன் குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றிய கவிதாவுக்குப் பெற்றோரின் பரிதாப இழப்பு சோகத்தை அதிகமாக்கியது என்பது உண்மைதான். ஷெல் பட்டு வீட்டின் ஒரு பகுதி பலத்த சேதமடைந்து விட்டது. இன்னும் எத்தனை ஷெல்களுக்காகக் காத்திருக்க வேண்டும். எதையுமே செய்ய முடியாத நிலை.

தம்பிக்குக் கடிதம் எழுதினாள். உழைத்ததைச் சேமியடா. தம்பி பட்ட கடன் எல்லாம் உன்னுடைய புண்ணியத்திலே அடைச்சிட்டன். சீதனம் என்று வந்தால் நீ போட்ட காசு பத்திரமாக இருக்குது. கடவுள் கைவிடமாட்டார். நீ செய்த காரியத்துக்கு நீ நல்லாய் இருப்பாய். உள்ளத்தில் உருகி வழிந்த ஆசீர்வாதங்களை மாலையாகக் கோர்த்துக் கடிதம் வரைந்தாள் கவிதா. யாரிடமும் கைநீட்டாமல் சுய மரியாதையோடு வாழ வைத்தது தம்பி அனுப்பிய பணம் அல்லவா?

காம வெறியர்கள் அவளின் உடலை விலை பேசினார்கள். அவளுக்கு மாங்கல்யம் தந்து மணமகளாகப்பார்க்க யாரும் ஒப்பவில்லை. தாய் தந்தை இழந்த பெண் தன் வீடே துணை,கோயிலே துணை என்று இருந்த பெண். தனக்குக் கலியாணம் செய்து வைக்க யாரிருக்கிறார்கள். தம்பி வெளிநாட்டு மாப்பிள்ளை பார்த்தான். நாகரிகம் முற்றி விட்ட சமுதாயத்தில் நல்ல மாப்பிள்ளைக்கு எங்கு போவது. குடியும், கூத்தும், ரவுடித்தனமும் நம்மவர்களுக்கு வெளிநாடுகளில் பழகி விட்ட ஒன்றாகி விட்டது.

உள்ளூரிலோ கொழுத்த சீதனம் வேண்டுமென்று அடம பிடிக்கின்றார்கள்.

எங்கட சனம் எவ்வளவு தான் கஷ்டப்பட்டாலும் திருந்தாதுகள் எனமூதாட்டி கவிதாவுக்குக் கூறிக் கொண்டிருந்தாள். இண்டைக்கு ஆபிசு பீயோன் கூட 3இலட்சத்துக்குக் குறையாமல் சீதனமும் வீடும் கேட்கிறான். எங்களது சனம் இடம்பெயர்ந்து படுகின்ற கஷ்டங்கள் போதாது. வார்த்தைகளின் யதார்த்தம் நெஞ்சைச் சுட்டெரித்தது. துப்பாக்கி வேட்டுக்களை விட சனங்களின் வறுவல் புத்தி நெஞ்சை வதைத்தது.

ரவிச்சந்திரன் பட்டம் பெற்றாலும் பண்பு மாறாத உள்ளம் படைத்தவன். கவிதாவின் ஊரைச் சேர்ந்தவன். கவிதாவின் குடும்பத்தை ஓரளவு தெரியும். பல்கலைக்கழகத்தில் நல்ல பெறுபேறு பெற்று கலைத்துறையில் ஒரு பேராசிரியனாகப் பணியாற்றுபவன். அவனுக்கு அதிகம் படிக்காத, ஆனால் பண்புள்ள கவிதாவைப் பிடித்துப்போயிற்று.

'அம்மா என்ர ஊரிலே இருக்கிற கவிதாவிலே எனக்குக் கொஞ்சம் விருப்பம். எனக்கும் கல்யாண வயசு வந்திட்டு தானே. பார்த்துச் செய்யுங்கோ' என அம்மாவிடம் கெஞ்சினான் ரவிச் சந்திரன். 'எட தம்பி நீ என்ன மாதிரி இருக்கிறாய். என்ன பட்டத்தோட பதவியிலே இருக்கிறாய். அவளின்ர குடும்பத்திலே அவள் படிக்கவும் இல்லை தாய் தகப்பனும் இல்லை. நீ ஏன் உதுக்குள்ளே போக ஆசைப்படுகிறாய்' என அம்மாவின் புலம்பல்.

அம்மா என்னைப் பார்த்துக் கொள்கின்ற எனக்கு உதவி ஒத்தாசையாக இருந்து எனது முன்னேற்றத்திலே அக்கறையுள்ள குடும்பப்பொறுப்பான குணமுள்ள பொம்பிளை தானம்மா எனக்குத் தேவை. கவிதாவிடம் அது எல்லாம் இருக்குத்தானே.

பெண் சகோதரங்கள் எவரும் இல்லாத தனிப்பிள்ளை ரவிச் சந்திரன். பார்த்த மாத்திரத்திலேயே கவிதாவைப் பிடித்துப் போய் விட்டது. அம்மா, ஆசிரியை, அப்பா அப்புக்காத்து கொழும்பிலே நல்ல சம்பாதிப்பு. நல்ல சிங்களமும் தெரியும். கொழும்பிலே வீடு வாங்கி வைத்திருக்கிறார்கள். நல்ல கொழுத்த சீதனத்தோட தான் எனது ஒரே புத்திரனைக் கரை சேர்க்க வேண்டுமென்ற துடிப்போடு இருந்த தந்தை மகாதேவனுக்கு இது பலத்த அடியாகப் போய் விட்டது.

'உன்ரை குடும்பப் பின்னணி என்ன? அவள் எங்கே? நீ நல்லா கஷ்டப் படவேணும்' என்று ஏதும் தலைவிதியோ என மகனுக்குக் கடிதம் எழுதினார் மகாதேவன்.

கஷ்டப்பட்ட பிள்ளைகள் தான் குடும்பத்தைக் கவனிக்குங்கள். வசதியான குடும்பம் என்று போனால் ஹொட்டல் சாப்பாடும், நிம்மதி இல்லாத வாழ்க்கையும் தான் அமையும் எனப் பதில் கடிதம் போட்டான ரவி.

மகாதேவன் விமானத்தில் பறந்து வந்தார். 'என்ன தம்பி நீ செல்லம் குடுத்து வளர்த்தால் இப்படியோ பேசுறது.' வந்ததும் வராததுமாக மகனிலே பாய்ந்தார் மகாதேவன்.

சொல்லுறதைச் சொல்லிப் போட்டன். இனி உன்ர இஷ்டம். முற்றுப்புள்ளி வைத்துவிட்டுக் கை கால் கழுவக் குளியலறையை நாடினார் மகாதேவன்.

ரவியோ பிடிவாதக்காரன். கவிதாவை நேரடியாகவே கேட்டு விடுவம் எனக் கிளம்பினான். வாசலில் பூப் பறித்துக் கொண்டிருந்த கவிதாவிடம் அறிமுகமானவன் போல் பேச்சுக் கொடுத்துத் தன் விருப்பத்தை வெளிப்படுத்தினான் ரவி.

தமிழ்ப் பண்பாடு என்னவோ கட்டுப்பாடுகள் பலவற்றைக் கொண்டிருந்தாலும் அர்த்தமுள்ளதாக இருப்பது உண்மையிலும் உண்மை.

ஒரு ஆடவன் தன்னை விரும்புகிறான் என்பதற்காக அவன் குலம், கோத்திர்ம், பதவி,கல்வி, செல்வாக்கு எல்லாம் அறிந்திருந்தும் தன் நிலை அவனோடு ஒப்பிடுகையில் தாழ்வாக இருப்பதனை ஒப்புக்கொண்ட போதிலும், எந்த வித தமிழ்ப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் பெண்ணும் தன் நிலையிலிருந்து கீழ் இறங்கி விடமாட்டாள். ஆம் கவிதா புன்முறுவல் ஒன்றைப் பதிலாகத் தந்தாள். தனக்கு என்று ஒரு தம்பி இருக்கிறான். அவனிடம் கேட்டாக வேண்டும். தானும் இதைப்பற்றிச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். எடுத்தவுடன் கூறிவிட முடியுமா? கால அவகாசம் வேண்டும் என்றாள்.

என்னுடைய நிலைமை உங்களுக்கு நன்றாகத் தெரியும் தானே ரவி சார்? அர்த்தமுள்ள பார்வையோடு மெதுவாகக் கேட்டாள் கவிதா?

உங்களை விரும்புவதற்குப் பல பெண்கள் இருப்பார்கள். நான் அப்படியல்ல. யோசித்துப் பாருங்கள். உங்களுக்கும், எனக்கும் எவ்வளவு தூரம் என்று. உங்களுக்கு ஏற்ற மனைவியாக நான் இருப்பேன் என எந்த நம்பிக்கையோடு இதனைக் கேட்கிறீர்கள்?

வார்த்தைகள் ஆழமாக இருப்பது புரிந்தது. கவிதா நிறையப் படிக்காவிட்டாலும் அனுபவமும், புத்திசாலித்தனமும் அவளிடம் குடி கொண்டிருப்பது புரிந்தது. ரவிக்கோ அவளின் அனுபவ முதிர்ச்சியும், பேசிய பேச்சும் மேலும் காதலைக் கூட்டியது.

கவலைப் படாதே நான் நன்றாகவே யோசித்து விட்டுத் தான் கேட்கிறேன். வேண்டுமானால் உன்னுடைய தம்பியுடன் ஆலோசித்து விட்டு மறுமொழியைக் கூறு. அவசரம் வேண்டாம். புன்னகையுடன் வெளியேறினான், ரவி.

தன்னிடம் இவன் நேரடியாக வந்து அலட்டிக் கொள்ளாமல் பேசி ஒரு முடிவைக் கூறு என நிதானமாகச் சொல்லி விட்டுப் போகிறான் யாவும் கடவுள் செயல்.

ரவி நல்லவன் ஒழுக்கமானவன். படித்தவன். இதற்கு மேலாக சிறந்த கம்பீரமான ஆண்மகன். வேறு என்ன வேண்டும் ஒரு பெண்ணுக்கு.

விரைவாகக் கடிதம் எழுதினாள் தம்பிக்கு. மாதம் ஒன்று கடந்து விட்டது. தம்பியிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது.

பிரித்துப் பார்த்தாள் போட்டோ ஒன்று. ஆணினுடையது. தம்பி மாப்பிள்ளை பார்த்திருப்பதாகக் கூறி எழுதியிருந்தான். மாப்பிள்ளை ஒழுக்கமானவன் என்றும், தனது தமக்கைக்கு பிடித்திருக்க வேண்டும் என்பதற்காகப் படம் அனுப்பி அபிப்பிராயம் கேட்டு எழுதியிருந்தான்.

இருதலைக்கொள்ளி எறும்பானாள் கவிதா. தம்பி எனது கடிதத்தைப் பார்த்திருப்பானோ என்னவோ? இப்படி ஒன்று வந்து விட்டதே எனக் கவலைப்பட்டாள்.

கோவிலில் பூப் போட்டுப் பார்த்து விடலாமா? எனத் தோன்றியது. கடவுளின் மேல் சுமைகளை இறக்கி அவனது முடிவே எனது முடிவு என எண்ணுவது எத்தகைய கவலைகளையும் புறந்தள்ளி விட உதவுகிறது என்பதைக் கடவுளின் அருளை உணர்ந்த யாரால் தான் மறுக்க முடியும்.

வருகின்ற வெள்ளிக்கிழமை பார்த்துக் கோவிலுக்குப் போவோம். வெள்ளியும் வந்தது. காலையில் தலை முழுகி வீட்டில் சுவாமி கும்பிட்டு கோவிலுக்குச் சென்றாள் கவிதா.

பூசை முடிந்து சுவாமியைத் தியானித்த பின் தன் எண்ணங்களை வெளிப்படுத்திப் பூப் போட்டாள்.

தன் எண்ணப்படியே இட்ட பூ தன்னை வெளிப்படுத்திய பூரிப்பிலும் தம்பி என்ன கூறுவானோ என்ற பயம்.

வீடு வந்து சுவாமி கும்பிட்டு அடுப்பங்கரையைநாடிய போது வாசலில் மணிச்சத்தம்.

அம்மா உங்களுக்குக் கடிதம். தபால்காரன் இரண்டு மூன்று தடவை கூப்பிட்டான்.

ஓடிச் சென்றவள் தம்பியின் கடிதம் என அறிந்து மகிழ்ச்சி

**மா.கணேசராஜா**

கலந்த அதிர்ச்சி என்றாலும், சுவாமியின் முன் வைத்துத் தியானித்து நிதானமாகப் பிரித்தாள். அக்கா உனது விருப்பமே எனது விருப்பம். ரவிசார் உனக்குப் பொருத்தம் என நீ விரும்பினால் கல்யாணம் செய்து கொள்ளலாம், சந்தோசம் என்று கடிதம் எழுதியிருந்தான்.

சந்தைக்குச் சாமான் வாங்க வேண்டும். சந்தைக்கு வெளிக்கிட்டாள் கவிதா. சந்தையில் எதிர்பாராதவிதமாக ரவி புன்னகையுடன் முடிவு நல்ல முடிவாக இருக்கும் என நம்புகிறேன் என்று வினாவினான்.

எல்லாம் தெரிந்தது போல் கேட்டது சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தாலும், எதை நல்ல முடிவு எனச் சொல்கின்றீர்கள்? புரியாதது போல் கேட்டாள். கவிதா.

திருமண விடயத்தைத் தான் கவிதா என நேரடியாகப் பதில் சொன்னான் ரவி. ரவி சார் தம்பியிடம் இருந்து பதில் வந்திருக்கின்றது. உங்கள் விருப்பத்திற்கு எனது சம்மதம் என்றாள் கவிதா.

காதற் பார்வையுடன் நான்கு கண்களும் கலந்தன. கண்களில் ஆனந்தப் பெருக்கு கவிதாவுக்கு.

கோவிலில் கேட்ட மேளச்சத்தம் மங்களமாக நினைவலைகளில் மோதி ஒலித்துக் கொண்டிருந்தது.

* * *

## சிரிக்கலாம் வாங்க

''பத்துப் பதினைந்து பூனைக்குட்டிகளோடை ஒரு நாய்க் குட்டியை வளர்க்காதே என்று சொன்னா கேட்க மாட்டியே''

''ஏன் அப்படிச் சொல்லுகிறீங்க''?

''திருடன் வந்தா அந்த நாய்க்குட்டி 'மியாவ் மியாவ்' எனக் கத்துது.





''நாய்க்குட்டிக்கு அந்த அம்மா ஓவரா செல்லம் கொடுத்து வளர்க்கறாங்க!''

''எப்படிச் சொல்றீங்க?''

''நிலாவைக் காட்டிச் சோறு ஊட்டறாங்களே!''

நண்பி – '' ஏன் உன் மாமனார் மீது அம்மிக் குளவியைத் தூக்கிப் போட்டாய்?''

மற்றைய நண்பி – ''இருட்டிலை என் கணவன் என்று நினைத்துத் தவறுதலாக மாமனார் மீது போட்டு விட்டேன்.




# வெற்றி நமதே!



வாழ்க்கை என்ற சுழல்சக்கரத்தை நம்பிக்கையின் ஏணிப்படிகளைத் துணை கொண்டு துணிவோடு செயற்பட்டால் வெற்றி நம்பக்கமே. எல்லோரிடத்தும் அன்பாகப் பழகுவதோடு அடையப் போகும் வெற்றியை மனதிற் கொண்டு செயற்பட வேண்டும். திட்டம் இல்லாத வாழ்க்கை திசையறிகருவி இல்லாத படகு போல் திசை மாறிச் சென்று விடும். தோல்வியை வெற்றியின் படிக்கற்களாக நினைத்துத் துணிவோடு கடந்து செல்ல முயற்சிக்க வேண்டும்.


மனதில் உள்ள இரகசியங்களை இலக்கை அடையும் வரை ஒருவரிடமும் கூறாதே நாணயத்தின் இரண்டு பக்கம் போன்று இன்பமும், துன்பமும் வாழ்க்கையில் மாறி மாறி வரும். இன்பத்தில் சந்தோசமடையும் நாம் துன்பத்தையும் Take it easy ஆக எடுத்துச் செயற்பட வேண்டும். இறந்த கால அத்தியாயங்களை நினைத்து வாழ்வதை விட நிகழ கால, எதிர்கால சிறப்பான வாழ்விற்கு செப்பனிட வேண்டிய செய்கைகளைப் புத்தாக்க உணர்வோடு, துணிவோடு பின்பற்றினால் வாழ்க்கையில் என்றும் மகிழ்ச்சியே என்பதில் ஐயமில்லை

*க.செந்தா,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

## உருளைக்கிழங்கு கேசரி

**தேவையான பொருட்கள்**

*பால் - 1லீற்றர்*
*பெரிய உருளைக்கிழங்கு - 2*
*தேங்காய் - 1*
*முந்திரிவற்றல் - 50கிராம்*
*ஏலக்காய் - 10*
*சர்க்கரை - 100கிராம்*
*அவல் - 50கிராம்*
*நெய் - தேவையானளவு*



**செய்முறை:-**

பாலைக் கெட்டியாகக் காய்ச்சவும். தேங்காயைத் துருவி அரைத்துத் தண்ணீர் விடாமல் கெட்டிப் பாலாக வடிகட்டி எடுக்கவும். முந்திரி வற்றல், அவல், இரண்டையும் தனித்தனியாக நெய்யில் வறுத்துக் கொள்ளவும். உருளைக்கிழங்கை வேகவைத்து தோல் நீக்கி மசித்துக் கலந்து கொள்ளவும்.

அகலமான பாத்திரத்தில் அரை தம்ளர் தண்ணீரில் சர்க்கரையைப் போட்டு அடுப்பில் வைக்கவும். கொதித்துக் கெட்டியானதும் காய்ச்சியபால், தேங்காய்ப்பால் மசித்த உருளைக்கிழங்கு, ஏலக்காய் என்பவற்றைப் போட்டு நெய்விட்டுக் கிளறவும். கொதித்துக் கெட்டியானவுடன் இறக்கவும். சூடாகச் சாப்பிட்டால் மிகவும் சுவையாக இருக்கும்.

எஸ்.செந்தூரி

# நல்லவராவதும் தீயவராவதும் பெற்றோரின் கைகளிலே!


குழந்தை வளர்ப்பு என்பது அற்புதமான ஒரு கலை. நம்மில் பலர் அக்கலையில் கைதேர்ந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. குழந்தை வளர்ப்பானது கடல் அலைகள் போல் கணக்கிலடங்காத பிரச்சினை



கள், சமாளிப்புக்கள் என்று நம்மைத் திணற வைத்துவிடும்.

தாயின் வயிற்றில் பத்துமாதம் கருவாக வளர்ந்து ஜனித்த குழந்தை உடலளவில்தான் முழு உருவம் அடைந்திருக்குமே தவிர, மனதளவில் அது செதுக்கப்பட வேண்டிய கல். அதனை ஒரு சிற்பியின் மனோபாவத்துடன் உருவாக்க முயல வேண்டும். இறைவன் நம் கைகளில் தந்த குழந்தை வெறும் பச்சை மண். அது சிற்பமாவதும், சீரழிவதும் பெற்றோர் கைகளில் தான் இருக்கிறது.

பெற்றோர்கள் சீரான தண்டவாளங்கள் போல் இணை கோடுகளாக இருந்தால் தான் தண்டவாளங்களை நம்பியோடும் ரயில்களான குழந்தைகளும் தடம்புரளாமல் வாழ்க்கையில் வெற்றியை நோக்கிச் செல்ல முடியும்.



குழந்தைகளோடு குழந்தையாய் ஒரு நாளைக்கு அரைமணி நேரமாவது அவர்களின் வயதுக்கேற்ற மனநிலையோடு செலவழியுங்கள். அந்தக் குறைந்த நேரத்தில் அவர்கள் மனதில் அசைக்க முடியாத நல்ல இடத்தைப்பிடிக்க முயலுங்கள்.

குழந்தைகளிடம் அன்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அவ்வாறு பகிர்ந்து கொள்ளும் அன்பு ஊற்று நீராக உயருமே தவிர வற்றி விடாது. உண்மையில் குழந்தைகள் குடும்பம் என்ற தோட்டத்தில் பூத்துக் குலுங்க வேண்டிய செடிகள். பூக்கள் அழகாகப்பூத்துக் குலுங்குவதும், கருகிப்பட்டுப் போவதும் பெற்றோர்களின் அன்பிலும் அரவணைப்பிலுமே தங்கியுள்ளது.

பெற்றோர்களே உங்கள் சுமைகளைப் பிஞ்சுகளின் தலைகளில் இடியாக இறக்காதீர்கள். அச்சுமைகள் அவர்களை மனத்தளவிலோ, உடலளவிலோ நிச்சயம் பாதித்து விடும். சற்றுச் சிந்தித்து உங்கள் சுமைகளைக் கணவன் மனைவியாகிய நீங்களே பகிர்ந்து கொள்ள முயற்சி செய்யுங்கள்.

''காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு'' என்ன பெற்றோர்களே உங்களுக்கும் உங்கள் குழந்தைகள் பொன்குஞ்சுகள் தானே? குழந்தைகள் நாளைய நாட்டின் நற்பிரஜைகள். நற்பிரஜைகள் உருவாவது உங்கள் கைகளிலே!

**வைதேகி,**
**ஆனைப்பந்தி.**

**பெண்ணின் மனம் அபூர்வமான விளைச்சல் நிலம். அதில் ஒரு முறை ஆதரவு என்ற வேர் ஊன்றி விட்டால். அது விரைவில் வளர்ந்து அன்பு என்ற கனியைக் கொடுக்கும்.**


***-காண்டேகர்-***

**மனிதனை நல்லவனாக வாழ வைப்பதற்குத் தான் கடவுள் பெண்ணை உலகத்தில் படைத்தார்.**


***-வால்டேர்***

## பெண்களைப் பெண்களே வெறுக்கலாமா...?

நாகரிகம் வளர வளர பெண்கள் மனதில் சில எண்ணங்களும் வளர்கின்றன. எண்ணங்கள் வளர்வதில் தடையில்லை. ஆனால், அவை விபரீதமான முடிவுகளில் முடிவதுதான் கவலைக்கிடமானது.



ஒரு தாய் கருவுற்றிருக்கும் போது அக்குடும்பத்திலுள்ள நூற்றுக்கு எண்பது சத வீதமானோர் ஆண் குழந்தைகளையே விரும்புகின்றனர். அதில் கூடுதலானோர் பெண்களாகவே காணப்படுகிறார்கள். பெண் பிறந்து என்ன பயன் என எண்ணிய காலம் மலையேறி விட்டது. பெண்களாலும் சாதிக்க முடியும் என்பதை நிலை நாட்டிய இந்தக் காலகட்டத்திலும் பெண் குழந்தையை வெறுத்து ஆண் குழந்தைகளையே



விரும்புவோர்களைக் காணும் போது வேதனையாக இருக்கின்றது.

எத்தனையோ லட்சம் ஆண்கள் இருந்தாலும் ஒரு பெண் இல்லாமல் ஜனனம் என்பதே இல்லை. இதை தெரிந்தும் தங்கள் எண்ணத்தை மாற்றாத பெண்களை நினைக்கும் போது தான் வேதனை அதிகம். இந்த எண்ணப் போக்கினால் தான் எத்தனையோ சிசுக் கொலைகள் இடம் பெறுகின்றன.

முந்திய காலத்தவர்கள் சொல்வார்கள் ஒரு வீட்டில் எத்தனை ஆண்குழந்தைகள் இருந்தாலும் ஒரு பெண் குழந்தை இருப்பது போல் வராது என்று அவ்வாறு சொன்னவர்கள் மத்தியிலும் பெண் குழந்தைகளை நஞ்சூட்டிக் கொலை செய்தவர்களும், கருவிலே அழித்தவர்களும் வாழத்தான் செய்தார்கள்.

தற்காலத்தில் பெண்களாலும் சாதிக்க முடியும் எனும் போது பெண் குழந்தையினால் பாரமேது? தாய்மாரே! முதலில் பெண் குழந்தைகளை நேசிப்பவர்களாக நீங்கள் மாறுங்கள். அதன்பின் ஆண்களை மாற்றுங்கள்.

L.சசிதேவி,
வல்வெட்டித்துறை.

# பெண்களே! குடும்பத்தின் கண்கள்!

*(சென்ற வாரத் தொடர்ச்சி...)*

வார்த்தைகளைக் கொட்டித் தீர்க்கக் கூடாது. காரணம் எண்ணங்கள் வார்த்தைகளாகி வெளிவந்து விட்டால் அவ்வளவு தான் மீண்டும் உள்வாங்க முடியாது. ஆகவே நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் எமது சிந்தனையின் இறுதி முடிவாக அமைதல் வேண்டும். எனவே பேச்சு, உடை, நடை அனைத்திலும் குற்றம் பார்க்கும் சுற்றமும் பெண்கள்தான்.

பெண்மையின் மென்மை காத்து நன்னடத்தையின் பக்கம் நடைபயின்று நாளைய உலகம் எங்கள் கையில் என்று இன்றைய விடயங்களை நல்ல மனதுடன் ஏற்போம்.

சில பெண்களுக்கு அவர்கள் செய்தது சரியென்று தோன்றும். ஆனால் சமுதாயத்தின் பார்வையில் அது தவறாகலாம். ஆனால் எனக்கு சமுதாயத்தைப் பற்றிக் கவலையில்லை என்று சாதாரணமாக இருந்து விடுவார்கள். இது முற்றிலும் தவறான எண்ணமாகும். சமுதாயத்தின் ஓர் அங்கமான நாம் ஒரு போதும் சமுதாயத்தை விட்டு தனித்து வாழ முடியாது. சமுதாயத்தோடு ஒன்றியே



வாழப்பழகிக் கொள்ள வேண்டும்.

எமக்கு நிறையப் பிடித்திருக்கும் சில காரியங்களைச் செய்யும் போது கூடச் சமுதாயம் அதைத் தவறான கண்கொண்டு நோக்குகிறது. இதற்குத் தனியொருவராக இருந்து கொண்டு எதுவும் செய்ய முடியாது. எனவே அச்செயலிலிருந்து விடுபடுவதே சிறந்த வழியாகும். மாறாகச் சமுதாயத்தோடு போராடி வீணான பழியை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது.

எம்மைப் பற்றி யாராவது தப்பாகப் பேசினால் எமக்கே ஆத்திரம் வருகிறது. எதற்கு இப்படி அபாண்டமாகப் பழி போடுகிறார்கள்.நான் அப்படியான எண்ணத்துடன் நடந்து கொள்ளவில்லையே என்று குமுறுகின்றோம். இச்சந்தர்ப்பத்தில் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். தப்பாகப் பேசுவதற்கு எங்கோ தவறாக நடந்து கொண்டுள்ளோம் அல்லது எமது நடவடிக்கை மற்றவர்களின் கண்களுக்குத் தவறாகப்படுகிறது. எனவே அத்தவறைத் திருத்திக் கொண்டு வாழ்வதே சிறந்த வழியாகும்.

ஒரு குடும்பம் நல்ல பெயரெடுப்பதும், கெட்டுக் குட்டிச் சுவராவதும் பெண்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே பெண்களே! உங்களையும் குடும்பத்தையும் காப்பாற்றி சமூகத்தில் நல்லவர்களாக வாழுங்கள்.

# மரண விளையாட்டு

## தொடர்கதை

### மாயவன்

### அங்கம் 18

''ஆனால் அரவிந்த் இவர்களும் மனிதர்கள் தானே ஆசைக்குக் கட்டுப்பட்டு விடுவார்களே'' என்றான் அவநம்பிக்கை கலந்த தொனியில். ''இல்லையடா இவர்கள் அப்படிப்பட்ட அற்ப விஷயங்களுக்கெல்லாம் இடங் கொடுக்க மாட்டார்கள். இவர்களுக்கு மரண தண்டனை கிடைத்ததற்கான ''டீற்றெயில்ஸ்'' இந்தப் பைலில் இருக்கிறது வாசித்துப் பார் இவர்கள் எப்படிப் பட்டவர்கள் என்று''. பிறவுண் நிற பைலை எடுத்து அர்ஜுனிடம் கொடுத்தான் அரவிந்.

அர்ஜுன் நிதானமாகப் பைலில் உள்ள விஷயங்களைப் படித்தான். ''ஓ.கே. அரவிந்த் அவர்களை எம்முடன் அழைத்துச் செல்லலாம். ஆனால். அவர்கள் இந்த மரண விளையாட்டுக்கு ஒப்புக் கொள்வார்களா? என்றான் கேள்விக் குறியுடன்.

''பார்ப்போம் அவர்களுடன் பேச வேண்டிய விதத்தில் பேசி ஒப்புக் கொள்ளச் செய்வோம்.'' என்று கூறிச் சிறைச்சாலைக்கு முன் மாருதியை நிறுத்தினான். ''டேய் நீ வெளியே நில் நான் போய் அவர்களிடம் பேசிவிட்டு வருகின்றேன் என்று கூறிய அரவிந்தன் வேஷத்தை மாற்றினான். பொய்த் தாடி மீசை ஒட்டித் தலையில் கறுத்தத் துணியைப் போட்டு பின் புறம் முடிந்தான்.

''அரவிந் அவர்கள் எதற்கும் பயப்படாதவர்கள் தற்செயலாக ஏதாவது தாறுமாறாக நடந்தாலும் நானும் உன்னுடன் வருகிறேன்'' என்று கூறியவனை அவசரமாகக் கையமர்த்தி விட்டு, ''இல்லை நீ வர வேண்டாம். ஏதாவது ஆபத்து என்றால் விசில் ஊதுகின்றேன் அப்போது நீ வந்தால் போதும்'' எனச் சற்றுக் கடுமையுடன் கூறி விட்டுக் காரில் இருந்து இறங்கிச் சிறைச் சாலையினுள் நுழைந்தான். வாசலில் நின்ற காவலாளி மறிக்கவும், பொலிஸ் கமிஷனர் தேவராஜ் அரவிந் இலங்கையின் எப்பாகத்திற்கும், போய் வரவும், எவரையும் எப்போதும் சந்திக்கவும் கூடியதான பெர்மிர்சன்கார்ட் அளித்திருந்தார். அதனைக் காட்டியதும். விறைத்துப் போன காவலாளி பதற்றத்துடன் கைகால்கள் தடுமாற ஒரு வகையாகச் சலூட் அடித்து மரியாதை செய்தவாறு கேற்றைத் திறந்து விட்டான்.

தூக்குத் தண்டனை கிடைத்த விஜய், ரஞ்சித், அபிநாஷ், ஜெகன் ஆகியோர் இருந்த அறையின் முன் வந்து நின்றான்.

அருகில் நின்ற காவலாளியை அழைத்துச் சிறைக்கதவை திறக்கச் சொன்னான். காவலாளி கதவைத் திறக்க உள்ளே நுழைந்தவனைக் கண்டு அந்த ஐவரும் திடுக்கிட்டு ஒருவித பரபரப்புடன் எழுந்து நின்றனர். தூயவெள்ளை நிற உடையும், முகத்தில் ஷேவ் செய்யப்படாத தாடியுடனும், ஒழுங்காகச் சீவப்படாத பரட்டைத் தலையுடனும் மயிர் கூச்செறியும் பயங்கரமானவர்களாகக் காணப்பட்டனர் தூக்குத் தண்டனைக் கைதிகள்



ஐவரும்.

உள்ளே நுழைந்த அரவிந்தைப் பார்த்ததும் ஐவரும் பக்கம் பக்கமாக நெருங்கினார்கள். விஜய் முன்னே வந்து அரவிந்தை மேலும், கீழுமாக ஒருவித முறாய்ப்புடன் பார்த்தவன் ''யார் நீ'' என்றான் குரலில் கடுமையான தொனியில். ஆனால் அரவிந்தோ மௌனமாக அந்த ஐவரையும் மாறிமாறி ஊடுருவிப் பார்த்தான். அந்தக் கழுகுப் பார்வை தங்களின் ஆத்மாவையே ஊடுருவிப் பார்ப்பது போல் இருந்ததால் சங்கடத்துடன் நெளிந்தனர் ஐவரும்.

'ஏய் யார் நீ சொல்ல மாட்டாய்?' என்று முறுகினான் ரஞ்சித். அவன் தொடர்ந்தும் 'எல்லாம் விசாரித்துத்தானே தீர்ப்பு வழங்கினீர்கள் பிறகும் என்னத்தைத் துப்பறிய வந்துள்ளாய்' என்றான் கடுமையுடன்.

அரவிந்தோ தன் குரலில் ஒரு வித சாந்தத்தையும், இனிமையையும் வரவழைத்துக் கொண்டு 'டியர் பிரண்ட்ஸ் நான் உங்களைத் துப்பறிய வரவில்லை. உங்கள் ஐவரின் உதவியை நாடித் தான் வந்துள்ளேன்.' என்றவனை நோக்கி ஐவரும் ஒரே நேரத்தில் வாயைப்பிளந்தவாறு ஏளனப் பார்வை ஒன்றை அரவிந்த் மீது வீசினர்.

அவர்களை ஒரு வித கவனிப்புடன் பார்த்தவாறே அரவிந் இது வரையிலும் கலையாத தன் வேசத்தைக் கலைத்தான். 'சேர் நீங்களா?' என்று அதிர்ச்சியால் வாயைப்பிளந்தவாறு கத்தினார்கள்.

'உங்கள் கெல்ப்த் தான் வேணும் எனக்கு' என்றான் அரவிந்த்.

'சேர் நாங்கள் உங்களுக்குக் கெல்ப் பண்ணுவதா' என்றான் அதிசயமான கேள்வித் தொனியுடன் விஜய்.

'ஆமாம், விஜய் அறிந்திருப்பீர்கள் என நினைக்கிறேன் தீவிரவாதிகள் எமது நாட்டில் செய்த அட்டகாசத்தை. அதனைத் தடுத்து தீவிரவாதிகளின் ஆணி வேரைக் கிளறி எறியும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்துள்ளார் மிஸ்டர் தேவராஜ். அதில் இறுதி ஒப்பரேசனில் நீங்கள் ஐவரும் எங்களுக்கு கை கொடுக்க வேண்டும்.

'எங்களுக்கு என்றால் யார் யாருக்கு?'

'ரஞ்சித் இந்தக் கேசில் நான், கராத்தே மாஸ்டர் அர்ஜுன், க்ரைம் பிரான்ஞ் இன்பெக்ஸ்டர் ரம்யா, அர்ஜுன் சேரின் ப்ரண்ட் ப்ரியா ஆகியோர். நாங்கள் நால்வரும் இந்த ஒப்பரேஷனில் தனியாகப் போதாது. நீங்கள் ஐவரும் கலந்து கொண்டால் நிச்சயம் வெற்றி எமக்குத்தான்.

'சேர் நாங்கள் ஐவரும் போதுமா?'

'நிச்சயமா நீங்கள் எதற்கும் அஞ்சாதவர்கள். எந்த ஆசைக்கும் கட்டுப்படாதவர்கள். உங்கள் இலட்சியமே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவீர்கள். ஆனால் பொலிசோ, எதிரியின் ஆசைக்கும், அச்சுறுத்தலிற்கும் கட்டுப்பட்டு உண்மையைக் கக்கி விடுவார்கள்.

விஜய் முன்னே வந்து 'சேர் உங்களின் இந்த உறுதியான நம்பிக்கைக்கு நான் கட்டுப்பட்டு நிச்சயம் உதவி செய்வேன். இது உறுதி' என்றான் உறுதியான குரலில்.

இதனைப் பார்த்த மற்றைய நால்வரும் இதே போல் உறுதி மொழி செய்தனர்.

''உங்கள் ஐவரில் யாரும் உயிரிழக்காமல் திரும்பி வந்தால் உங்களிற்கு நல்ல பதவியும், அந்தஸ்தும் பெற்றுத் தருவேன்' என்ற அரவிந்தை அவசரமாக இடைமறித்த விஜய்,

'நோ.. சேர் நாங்கள் எந்தப் பலனையும் கருதி உதவி செய்ய முன் வரவில்லை. உங்களின் நல்ல எண்ணத்திற்கும் உறுதியான முடிவிற்கும் தாய் நாட்டைப் பாதுகாக்க எடுத்துக் கொண்ட பிரமாணமும் எங்களைக் கட்டுப்படுத்தி விட்டது. அந்த நல்ல காரியத்தில் எமது பங்களிப்பும் உண்டு என நினைத்துப் பெருமைப்படுகிறோம். இதில் எமது உயிர்கள் போனாலும் பரவாயில்லை' என்று கூறி லேசாக மூச்சை உள்ளெடுத்து வெளி விட்டான்.

'சபாஷ் அரவிந்த் இவ்வளவு குயிக்காக நீ இவர்களை வசப் படுத்துவாய் என நான் நினைக்கவில்லை.' என்று கூறியபடி அர்ஜுன் சிறை அறையினுள் நுழைந்தான். விஜய் அன்ட்கோ அனைவரினதும் பார்வையும் அர்ஜுன் மீது திரும்பியது.

'காரியம் சக்ஸஸ் ஆக முடிந்து விட்டது' என்று தூக்குத் தண்டனைக் கைதிகள் ஐவரையும் தன் சுட்டு விரலால் சுட்டிக் காட்டினான் அரவிந்த்.

'அரவிந் இவர்கள் இப்போது என்ன கூறுகிறார்கள்? என்று கேள்விக் குறியுடன் நிறுத்தியவனைத் தொடர்ந்து,

'அர்ஜுன் அதற்கு முதல்....' என்று கூறி இடைமறித்தவன் அருகே நின்ற ஐவரையும் நோக்கி இவன் விஜய், இவன் ரஞ்சித், இவன் ஜெகன், இவன் அபிநாஷ், இவன் எட்வேட்' என்றவாறு ஐவரையும் அறிமுகப்படுத்தியவன் தொடர்ந்தும் அந்த ஐவரையும் நோக்கியவாறு 'இதோ இவன்தான் அர்ஜுன் இலங்கையின் கராத்தே சம்பியனும், ஆசியாவிலே இறுதி கராத்தே சம்பியனாக விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளான் என்று சுருக்கமாக அறிமுகத்தை முடித்தவன் திரும்பி அர்ஜுனைப் பார்த்தான். அவன் தான் அறிமுகப்படுத்திய விதத்தை விரும்பவில்லை என்பதை அவன் முகத்திலே கண்டான் என்றாலும் அவனோ ஹலோ என்று கைகுலுக்கி விஜய் அன் கோவுடன் அறிமுகமாகியதைக் கண்டு மகிழ்ந்தான்.

'ஓகே இனி இவர்களிடம் நான் கூறியது என்னவென்றால், ஐவரும் மரண விளையாட்டில் பங்கெடுத்துக்கொள்ள உறுதி எடுத்துக் கொண்டார்கள்.

(தொடரும்...)



# கம்பியூட்டர்க் கல்வி



## இன்ரநெற்



(சென்றவாரத்தொடர்ச்சி)

இன்ரநெற்றில் மிகவும் பிரபல்யமான சேர்ச் எஞ்சினான ''அல்ரா விஸ்ரா'' (Alta Vista-www.altavista.com) சேர்ச் எஞ்சினின் வெப்பக்கத்திற்கு சென்று அங்கே ''Colombo University'' என்று ரைப் செய்வோம் ஆயின், அந்த சேர்ச் எஞ்சின் தனது தகவல் பட்டியலில் ''Colombo University'' என்ற சொல்லுக்கு ஒத்ததாக உள்ள அனைத்து வெப் பக்கங்களின் முகவரியையும் எமக்குத் தரும்.

சில வேளைகளில் இந்த சேர்ச் எஞ்சின்கள் நாம் அவற்றிற்குக் கொடுக்கும் விடயத்திற்கேற்ப பல ஆயிரக் கணக்கான வெப் பக்கங்களின் முகவரிகள்ளை எமக்குத் தரும். ஆனால், அவற்றிலே ஒன்றோ அல்லது இரண்டோ தான் எமக்குத் தேவையான வெப் பக்கங்களாக இருக்கும். எனவே, இந்த சேர்ச் எஞ்சின்களில் எப்படி எமக்குத் தேவையான முகவரியை இலகுவாகப் பெறக் கூடியவாறு தேடுவது என்பது ஒரு முக்கியமான விடயமாகும். அதுபற்றிப் பின்னர் பார்ப்போம்.

இன்ரநெற்றில் பல சேர்ச் எஞ்சின்கள் உள்ளன. அவற்றிலே முக்கியமான சில சேர்ச் எஞ்சின்களைக் கீழே காணலாம்.

AltaVista (http://www.altavista.com)
HotBot (http://www.hotbot.com)
NorthernLight (http://www. northern light.com)
Excite (http://www.excite.com)
Lycos (http://www.lycos.com)
InfoSeek (http://www.infoseek.com)
Snap (www.snap.com)

இவற்றிலேயே இன்ரநெற்றில் மிகவும் பிரபல்யமானதும் அதிக வெப் பக்கங்களின் தகவல்களை கொண்ட மிகப்பெரிய தகவல் பட்டியலை வைத்திருப்பதும் ''அல்ரா விஸ்ரா'' (AltaVista) சேர்ச் எஞ்சின் ஆகும். இது 150 மில்லியனுக்கும் அதிகமான வெப் பக்கங்களின் தகவல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள சேர்ச் எஞ்சினாகும்.

இன்ரநெற்றில் தினமும் பல ஆயிரக்கணக்கான புதிய வெப் பக்கங்கள் உலகின் வெவ்வேறு மூலைகளில் இருந்து உருவாகிய வண்ணம் உள்ளன. அப்படியாயின் இந்த சேர்ச் எஞ்சின்கள் எப்படி தமது தகவல் பட்டியலில் அந்த புதிய வெப்பக்கங்கள் பற்றிய தகவல்களைச் சேர்த்துக் கொள்கின்றன என்று உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். சேர்ச் எஞ்சின்களைப் பாரமரிக்கும் நிறுவனத்தில் தினமும் புதிய தகவல்களைச் சேர்ப்பதற்காகப் பலர் தொடர்ந்து இன்ரநெற்றை கண்காணித்த வண்ணம் இருப்பார்கள் என்றும் நீங்கள் எண்ணக் கூடும். உண்மையில் அப்படி இல்லை. சேர்ச் எஞ்சின்க்ள் புதிய தகவல்களை தாமாகவே திரட்டுகின்றன. அதாவது புதிய வெப் பக்கங்களின் தகவல்களைத் தமது தகவல் பட்டியலில் சேர்ப்பதற்காக இந்த சேர்ச் எஞ்சின்கள் தன்னிச்சையாக இயங்கும் சிறு கம்பியூட்டர் புரோக்கிராம்களை உபயோகிக்கின்றன. அப் புரோகிராம்களை இன்ரலிஜன்ற் ஏஜென்ட் (intelligent agents), வோர்ம்ஸ் (Worms), குறோலோர்ஸ் (Crawlers), ஸ்பைடேர்ஸ் (Spiders), ரோபோட்ஸ் (robots) அல்லது பொட்ஸ் (bots) என்று அழைப்பர். இந்தக் கம்பியூட்டர் புரோக்கிராம்கள் தாமாகவே உலகில் உள்ள எல்லா வெப் பக்கங்களை வைத்திருக்கும் கம்பியூட்டர்களுக்கும் சென்று, அவற்றைப் பரீசிலித்து அவற்றில் ஏதாவது புதிய பக்கங்கள் சேர்க்கப்பட்டிருந்தால் அப் பக்கங்கள் பற்றிய தகவல்களை சேர்ச் எஞ்சின்களின் தகவல் பட்டியலில் பதிவு செய்கின்றன.

இப்போது இன்ரநெற் டிறெக்ரறி ரூல்கள், சேர்ச் எஞ்சின்கள் இரண்டிற்கும் இடையே உள்ள வித்தியாசமும் அவற்றைப் பற்றிய ஒரு சிறு விளக்கமும் உங்களுக்குக் கிடைத்திருக்கும். நாம் தொடர்ந்து இந்த ரூல்களை எப்படி உபயோகிப்பது என்று சுருக்கமாகப் பார்ப்போம். இன்ரநெற்றில் பல டிறெக்ரறிகளும், சேர்ச் எஞ்சின்களும் இருப்பதால் அவற்றிலே பிரபல்யமான YAHOO இன்ரநெற் டிறெக்ரறியையும் AltaVista இன்ரநெற் சேர்ச் எஞ்சினையும் உதாரணமாக எடுத்து நாம் அவற்றை எப்படி உபயோகிப்பது என்று சுருக்கமாகப் பார்ப்போம்.

### YaHoo (யாகூ)

### இன்ரநெற் டிறெக்ரறியை உபயோகிப்பது எப்படி?

இன்ரநெற் டிறெக்ரறிகள் பொதுவாகவே உபயோகிப்பதற்கு இலகுவானவை. ஏனெனில் அவை ஏற்கனவே இன்ரநெற்றில் இருக்கும் வெப் பக்கங்களை வகைப்படுத்தி ஒரு ஒழுங்கில் வைத்திருப்பதால் நாம் நேரடியாக எமக்குத் தேவையான பகுதிக்குச் சென்று எமது தேடலை ஆரம்பிக்கலாம்.

இன்ரநெற் சேர்ச் ரூல்களிலே இருக்கும் முக்கியமானதொரு வசதியே இந்த ரைப் செய்யும் இடமாகும். எமக்கு ஒரு விடயத்தைப் பற்றி இன்ரநெற்றில் அறிய வேண்டும்.

(தொடரும்....)

# இலங்கை இந்தியா இங்கிலாந்து நட்வெஸ்ற் தொடர்

பழையபடி வேதாளம்...... ''கிரிக்கெற்'' மரத்தில் தாவிக் கொண்டு விட்டது! (புரியாதவர்கள் போனவாரம் சங்குநாதத்தின் விளையாட்டுக் கட்டுரையைப் பார்க்கவும்.)

நிற்க, மிகப் பரபரபபாக நிகழ்ந்து முடிந்த உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளைத் தொடர்ந்து எம்மிடையே அதிக ஈர்ப்பையேற்படுத்தியது அண்மையில் இடம் பெற்ற நட்வெஸ்ற் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெற் போட்டிகள் தானெனின் அது மிகையன்று. அவ்வகையில் இவ்வாரம் அத்தொடர் பற்றிய ஓர் அலசலை இங்கே நோககுவோம்.

## தொடரின் தொடக்கத்தில்...

மேற்படி முத்தரப்புத்தொடரின் முக்கிய அம்சம் யாதெனில் இதில் பங்குபற்றிய அணிகளாகும்.. சமகால ஒரு நாள் போட்டித் திறனில் இரண்டாந்தர நிலையிலிருக்கும் (ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், நியூசிலாந்திற்குப் பிறகு) அணிகளிற்கிடையேயான ஒரு பலப்பரீட்சையாகவே இத்தொடர் கருதப்பட்டது. இதில் பங்குபற்றிய மூன்று அணிகளுமே ஏதோ ஒரு விதத்தில் இத்தொடர் மீது அதிக கவனஞ் செலுத்த வேண்டியிருந்தனர். எதிர்கொள்ளப் போகும் உலகக் கிண்ணக் கிரிக்கெற் போட்டிக்கு ஏறத்தாழ எட்டுமாதங்களே உள்ள நிலையில் அது தொடர்பான இறுதி ஆயத்தங்களிற்குரிய ஓர் அத்திவாரமாகவும் இப்போட்டி கருதப்பட்டது.

இலங்கை அணியைப் பொறுத்தமட்டில் இப்போட்டித் தொடர் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருந்தது. தொடர்ந்து நீண்ட காலமாக உள்ளூரில் நிகழ்ந்த ஆட்டங்களில் எல்லாம் எதிர்த் தரப்பினரைப் போட்டு உன்த யோ உதை என்று உதைத்திருந்தவர்கள் வெளியிடங்களிலும் - அதிலும் மிக வித்தியாசமான சூழ்நிலையிலும் தங்கள் பலத்தை நிரூபிக்க வேண்டியிருந்தது. அதுமட்டுமன்றி அதிர்ச்சியூட்டும் விதமாக இங்கு வைத்து இங்கிலாந்திடம் 2-1 எனத் தோல்விகண்ட டெஸ்ற் தொடரைஅங்கு வைத்து வஞ்சம் தீர்ப்போம் எனப் புறப்பட்டவர்கள் மறுபடி 2 - 0 என அடிவாங்கி நொந்து போயிருந்தனர். ஆகவே அதற்கெல்லாம் சேர்த்து ஈடுகட்டிவிட வேண்டும் என்ற அழுத்தத்தில் இலங்கை இருந்தது.

அதே கணம் இங்கிலாந்தின் நிலையைப் பார்த்தோமானால் அவர்களிற்கும் இது மிக முக்கியமான தொடராகவே இருந்தது. சொந்த நாட்டு இரசிகர்களின் முன்னிலையில், பழக்கப்பட்ட சீதோஷ்ண நிலைகளின் மத்தியில் சாதித்தே ஆகவேண்டும் என்ற சவால் அவர்களிற்கு விடப்பட்டிருந்தது. பலத்த எதிர்ப்பைத்



கங்குலி: தானாடாவிட்டாலும் தசையாடிவிட்டது!

தருமென எதிர்பார்க்கப்பட்ட இலங்கையைப் படு இலாவகமாக டெஸ்ற்றில் வென்றதும், இந்தியாவில் நடந்த ஒருநாள் தொடரில் 3 -1 என முன்னணி வகித்த இந்தியாவை இறுதி இரு ஆட்டங்களிலும் சமாளித்துச் சமப்படுத்தியதும் இம்முக்கோணத்தொடர் சார்பான இங்கிலாந்தின் மன உறுதிக்கு மேலும் வலுச்சேர்த்தன.

மறுபுறம் இச்சுற்றுப்போட்டிக்கு வந்திறங்கிய இந்தியா வெட வெடத்தவாறே வந்திருந்தது. அதிக எதிர்பார்ப்புக்களுடன் மேற்கிந்தியாவிற்குச் சென்று, அட்டகாசமாகவே டெஸ்ற்தொடரை ஆரம்பித்து, அந்தோ! இறுதியில் கூப்பரினதும் சந்திரபோலினதும் மட்டை வீச்சின் முன் மண்டியிட்டது இந்தியா. அதைப் பார்த்து ''ஐயோ! பாவம்'' என வானம் அழுததனால் இரண்டு ஆட்டங்கள் கழுவப்பட்டுப் போக (!) தட்டுத் தடுமாறி ஒருநாள் தொடரை மயிரிழையில் இந்தியா தக்க வைத்துக் கொண்டது. இந்தநிலையில் அண்மைக் காலமாக ஒரு நாள் போட்டிகளில் இலங்கையிடம் அடைந்த ''கொழுத்த'' தோல்விகள், முன்னணியில் இருந்து கொண்டேதமது சொந்த மண்ணில் இங்கிலாந்திடம் பெற்ற அதிர்ச்சிகள் என்றவாறு உண்மையிலேயே பலங்குறைந்த அணியாக இந்தியா இருந்தது.



ஜெயசூரியா: மீண்டும் வருமா மிடுக்கு?

இவ்வாறான பின்னணியில் இந்த மூன்று அணிகளும் தமக்கி டையே மோதித் தீர்த்து விட்டன! இனி அந்த மோதல்களின் போது ஒவ்வொரு அணியினதும் சாதக பாதகங்கள், சாதித்த சாதனைகள், எதிர்கால நிலைப் பாடுகள் பற்றிச் சுருக்கமாக ஆராய்வோம்.

## கலங்கிய இலங்கை!

இறுதிப் போட்டியைத் தவிர ஒவ்வோர் அணியும் ஆடிய ஆறு ஆட்டங்களில் இங்கிலாந்துடனான ஒரு வெற்றியைத் தவிர ஏனையவற்றிலெல்லாம் தோல்விகண்டு, இங்கிலாந்திற்கான தனது சுற்றுப் பயணத்தைக் கண்ணீரும் கம்பலையுமாக முடித்திருக்கின்றது இலங்கையணி. தொடர் தோல்விகளால் ஏற்பட்ட துவளல்மட்டுமன்றி முரளிக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான காயம், ருச்சிர பெரேரா எறிகிறார் என எழுந்த குற்றச்சாட்டு போன்றவற்றுடன் அவசியமற்ற விதத்தில் அரசியற் சாணக்கியமும் ஊடுருவி அவலட்சணப்பட வேண்டிய வந்துவிட்டது. எவ்வாறேனும் இறுதிப்போட்டிக்குத் தெரிவாகும் என எதிர்பார்க்கப்பட்ட இலங்கை, இறுதியில் ஏதாவது ஓர் ஆட்டத்தையாவது வெல்ல வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டதற்குப் பல காரணங்களுள.

அவற்றுள் முக்கியமானது முரளிதரன் ''முழிக்காத'' இலங்கையின் பந்து வீச்சில் ஏற்பட்ட வெளிப்பே ஆகும். அனுபவம் மிக்க சமிந்த வாஸிற்கு இங்கிலாந்துச் சுற்றுப் பயணமே கசப்பாகத்தான் முடிந்திருக்கின்றது. மற்றைய வேகப்பந்து வீச்சாளர்களான சொய்சாவும், விக்கிரமசிங்காவும் சோபிக்காத நிலையில், முரளி இல்லாத சுழற்பந்துப் பணியை உப்புள், சனத், ஆர்னல்ட் ஆகியோர் சேர்ந்தும் சரிப்படுத்த முடியவில்லை. ஆனாலும் திலான் சமரவீரவின் Off - break வீச்சுக்கள் சுழற் பந்துகளைச் சுலபமாகச்சமாளிக்க வல்ல இந்திய வீரர்களையே தடுமாற வைத்தமை ஓர் ஆறுதலே. ஆக, இலங்கைக்கு ஏற்பட்ட கலக்கத்திற்குப் பந்து வீச்சில் ஏற்பட்ட தொய்வே காரணமென்ற போதும் இன்னொரு விடயமும் இங்கு அவதானிக்கப்பட வேண்டி உள்ளது.

இலங்கையணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட அந்தத் தள்ளாட்டம் எவருமே எதிர்பார்க்காத ஒன்று. மஹேல, மார்வன், ஆர்னல்ட் போன்றோரின் அபாரதிறமை இத்தொடரின் அவ்வளவாக எடுபடவில்லை. தனது வழமையான பாணியில் ஜெயசூரியா நொருக்கும் போதெல்லாம் அவருக்கு ஈடுகொடுத்துத் துணைபுரியக் கூடிய சரியான தொடக்க ஜோடியும் இம்முறை இனங்காணப்படவில்லை. எப்படியோ சங்கக்காரா ஆவது இலங்கையின் துடுப்பாட்டத்தில் ஒரு துளிர்ப்பை ஏற்படுத்தினார். திறமையுள்ள இந்த இளம் விக்கெட் காப்பாளர் கூட, தொடரின் தொடக்கத்தில் களுவித்தாரணாவிடம் கையுறைகளைக் கையளித்து விட்டு, மட்டை வீச்சில் தவறினால் பட்டைதான் என்ற அழுத்தத்திற்குள்ளாக்கப்பட்டது அவசியமற்றது. இறுதி லீக் போட்டியில் இந்தியாவைக் கிலிகொள்ளச் செய்யும் வகையில் இவர் எழுப்பிய சங்கநாதம்(!) ஒரு நாள் போட்டிகளின் எதிர்கால ஆரம்பத்துடுப்பாட்ட வீரரிற்கானதிறனைக் கோடிகாட்டியது.

உலகக் கிண்ணத்தின் முன்னோடியாக - இத்தொடரிலே இலங்கையினால் பரீட்சிக்கப்பட்ட இளம் வீரர்களில் ஒரு முக்கிய நட்சத்திரம் தில்ஹார பெர்னாண்டோ. முரளி போன்றவர்கள் கூட சிரமப்படப்போகும் தென்னாபிரிக்காவின் முரட்டு வேக ஆடுகளங்களில் இவர் கவிதை வாசிப்பார் போலவே தெரிகின்றது. வேகப் பந்து வீச்சாளார்களிற்கேயுரிய உடல்வாகும் திறனும் உடைய இவர் வட்மோரின் கரங்களால் சரியாக வனையப்பட்டால் கில்கிறிஸ்ட் கூட நிதானிக்க வேண்டி வரும். எவ்வாறேனும் சவால்மிக்க ஆஸி சுற்றுப் பயணம் நெருங்கி வரும் வேளையில் எத்தனையோ புடம் போடல்கள் தேவையென்பது இச் சுற்றுப் போட்டியிலிருந்து இலங்கைக்குப் புலப்பட்டிருக்கும். அதை விடுத்துச் சென்ற இடமெல்லாம் ''சிறப்புப்'' பெற்று வரும் பங்களா தேஷைப் போட்டு மிதித்தால் அது மட்டும் போதாது!

## கலக்கிய இந்தியா!

இத்தொடரிற்குள் நுழையும் போது அதிகம் எதிர்பார்க்கப்படாத அணியாக வந்த இந்தியா நாம் குடாநாட்டு மின்சாரம் போல நீண்ட காலத்திற்குப் பிறகு தொடர்ச்சியாக ஒரு கலக்குக் கலக்கியிருக்கின்றது. (சச்சின் விரும்பாத பட்சத்தில்) வெகு விரைவில் சாகுல் ட்ராவிட்டிற்குக் ''கூஜா'' தூக்க வேண்டிய நிலையிலேயே இங்கிலாந்திற்கு வந்திருந்தார் ''கொல்கத்தாவின் யுவராஜா'' கங்குலி! அணியின் வெற்றி மட்டுமன்றி அவரது துடுப்புக்கூட அவருடன் ஒத்துழைக்க மறுத்தது. இறுதிப் போட்டியில் அதிரடியாகக் குவித்த அந்த 60 ஓட்டங்களிற்கு முன் ஆடிய 6 ஆட்டங்களிலும் அவரின் ஓட்டச் சராசரி வெறும் 14.8. இருந்த போதும் அணியின் எழுச்சி சௌரவின் கௌரவத்தை ஒருவாறு காப்பாற்றியிருக்கின்றது. அதிலும் சமகால அணித்தலைவர்களிலேயே இளம் வீரர்களை அதிகம் விரும்பும் இவரால் பலத்த சவால்களின் மத்தியில் தேர்வு செய்யப்பட்ட யுவராஜ் போன்றோர் தலைவனை மட்டுமல்லத் தாய் நாட்டையே நிமிர வைத்துள்ளனர்.



ஹுசைன்: இங்கிலாந்திற்கோர் இனியபுரட்சி!

மேற்கிந்தியத் தொடரில் மத்திய வரிசைக்கு சச்சின் இறங்கத் தொடங்கியதிலிருந்து இந்தியாவின் பக்கம் அதிர்ஷ்டம் பேசுவது போல் தெரிகிறது. சேவாக்கில் தொடங்கி ''கிரிக்கெட்டின் மெக்காவில்'' (லோட்ஸில்) அன்று தொழுகையை முடித்த (!) கைஃப் வரை ஒரு திடமான துடுப்பாட்ட வரிசையும் இந்தியாவிற்கு வலுச்சேர்க்கின்றது. மறுபுறம் பந்து வீச்சில் ஆரம்பத்தில் நன்குவீசிய வேகப் பந்தாளர்கள் போட்டிகளின் பிற்பாதியில் வாங்கிக் கட்டினர். ஆனாலும் இடதுகை வீச்சாளர்களிற்குரிய அநாயசமான திறமை மிக்க ஸகீர் - நேஹ்ரா ஜோடி இன்னும் சிறிது பக்குவப்படுத்தப்பட்டுப் பரா மரிக்கப்பட்டால் - ஸ்ரீநாத்தும் மறு படி இணைந்து கொண்டால் இந் தியா உசும்ப முடியும். சுழற்பந் தைப் பொறுத்த மட்டில் கும்ப் ளேயின் அத்திபாரம் ஹர்பஜனால் ஆட்டங்காணத் தொடங்கியிருப்பது அவர்களிற்கிடையே போட்டியை ஏற்படுத்தி இந்தியாவிற்கு நன்மை சேர்க்கலாம்.

துடுப்பாட்டத்தில் சோபிக்காத விக்கெட் காப்பாளர்களால் அவதியுற்ற இந்தியா, ட்ராவிட்டைப் பலிக்கடாவாக்கி, மொகமட் கைஃப் போன்ற மேலதிக துடுப்பாட்ட வீரரை இறக்கியது நன்கு பலனளித்திருக்கின்றது. ஆனால் பாவம்! திடீர்ப் பணியில் திணறும் ட்ராவிட் முன்னேற எவ்வளவோ இடமுண்டு. யுவராஜ் - கைஃப் - மொங்கியா கூட்டணியில் இந்தியக் களத்தடுப்பும் இம்முறை களைகட்டியது. எப்படியோ இடையிடையே ''சத்தியமங்கலம் நரி''யாக மாறிக் கடிபட்ட பின் தற்போது உண்மையிலேயே ''வங்காளப்புலி'' யாக மாறியிருப்பது போல் தெரியும் கங்குலியின் ஒழுங்கிணைப்பில் இந்தியா ஒரு கூட்டு மிக்க அணியாகப் போட்டியிட்டதே அவர்களின் சாதனைக்கு மூல காரணமாகும்.இருந்த போதும் தொடர்ந்து இங்கிலாந்தில் நடைபெறும் டெஸ்ற் தொடர்மூலம் அதிர்ஷ்டம் தான் உதவியதா இல்லை எதிர்காலத்தின் சவால் மிக்க அணியாக இந்தியா எழும்பத்தான் போகிறதா என்பது ஓரளவு தெரிய வரும்.

## குழம்பிய இங்கிலாந்து!

தொடரின் ஆரம்பத்தில் மற்றைய அணிகளை விடத் திடமாகவும், தெளிவாகவும் இருந்த இங்கிலாந்து, படிப்படியாகச் சற்று ''ஓவர் ஆக்டிங்'' செய்ய ஆரம்பித்தமை தெற்றெனத் தெரிந்தது. அதிகப்படியான ஓட்டங்களைக் குவிக்க வேண்டும் என்ற ஆதங்கமும் அளவிற்கு மீறிய தன்னம்பிக்கை மிக்க பந்து வீச்சுக்களும் சில சமயங்களில் சாதகத்தையும் அதேயளவிற்குப் பாதகத்தையும் இங்கிலாந்திற்கு ஏற்படுத்தியிருந்தன. இருப்பினும் முன்பு டெஸ்ட் போட்டிகளிற்கே இலாயக்காக இருந்த அணி தற்

க.சேந்தன்

போது ஒரு நாள் ஆட்டங்களிலும் சவால் மிக்க ஒன்றாக மாறி வருவது மகிழ்ச்சியான ஒரு மறுமலர்ச்சியே.வரலாறுகளை எவரும் தடுத்து விட முடியாது என்பதற்கிணங்க இறுதியாட்டத்தில் Iords இல் துவண்ட போதும் இத் தொடரில்இங்கிலாந்து இலங்கையைப் போல் சில தனிநபர் சாதனைகளை இனங்காட்டியது. அதிலும் பாகிஸ்தானின் ரஸாக்குகளும் தென்னாபிரிக்காவின் கல்லைஸ்களும் மின்னப் போகும் எதிர் வரும் உலகக்கோப்பையில், மித வேகப் பந்து வீச்சுடன் கூடிய ஒரு துடுப்பாட்ட வீரர் தேவைப்படும் அந்தச் சூழ்நிலைக்கு, றொனி இரானி, ஹொலிங்வூட் போன்றோர் இப்போதே இசைவாக்கமடைந்துள்ளனர் போல் தெரிகின்றனர். ஆறாவது துடுப்பாட்ட வீரராகத் தன்னைக் களமிறங்கச் சொன்னனோரையெல்லாம் அன்றைய கன்னிச் சதம் மூலம் வாயடைக்க வைத்த ஹுசைனின் தலைமையில், அனுபவமும் இளமையும் கலந்து விளையாடும் இங்கிலாந்து இன்னும் சிறிது கட்டுக்கோப்பிற்குள் வருவது காலத்தின் ஓட்டத்திலேயே தங்கியுள்ளது.

அதிக எதிர்பார்ப்புக்களுடன் விறுவிறுப்பாக நடந்த இந்தத் தொடர் ஒரு முடிவிற்கு வந்துள்ளது. இதில் கற்றுக் கொண்ட பாடங்கள் உலகக் கோப்பை நோக்கிய ஆயத்தங்களிற்கு மிக முக்கியமான ஆரம்பப்படிகளாக இருந்திருக்குமென்பதில் ஐயமில்லை.




## சுத்தம் சுகம் தரும்

நாம் சுத்தத்தைப் பேணி நடந்தால் சுகத்தை அடையலாம். நோயற்ற வாழ்வு வாழலாம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது முது மொழி. எனவே நோயின்றி வாழச் சுத்தம் அவசியம். சமைத்த உணவை மூடி வைத்தல் அவசியமாகும். நாம் வாழும் சுற்றாடலையும், வீட்டையும் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். எமது உடலைச் சுத்தமாக வைத்திருத்தல் மிக மிக அவசியம். கழிவுப் பொருள்களைச் சேரவிடாது அகற்றிச் சுத்தம் பேணி சுக வாழ்வு வாழ்வோம்.


*க.விஸ்ணுப்பிரியா,*
*யாழ்ப்பாணக் கல்லூரி.*

## பிள்ளையார்



அ.சஞ்ஜீவ்,
யா. டிறிபேக் கல்லூரி.

## குருவி



மு.நிரேஷ்,
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி

## நிறந்தீட்டுவோம் வாருங்கள்



அன்புக் குழந்தைகளே! விதம் விதமாக உங்களிற்கு வர்ணம் தீட்ட ஆசை தானே? இதோ இங்கு தரப்பட்டிருக்கும் படத்தில் உங்கள் கைவண்ணத்தைக் காட்டுங்கள் பார்க்கலாம். என்ன நீங்கள் நிறந்தீட்டத்தயார் தானே?



**வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட மூத்த பத்திரிகையாளர் அமரர் செல்லத்துரை ஞாபகார்த்தச் சிறுவர் பாடல் போட்டியில் பரிசு பெற்ற கவிதை இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**

## சின்னச் சின்னக் குருவிகள்

சின்னச் சின்னக் குருவிகள்
சிங்காரக் குருவிகள்
வண்ண வண்ணச்சட்டை போட்ட
வாயாடிக் குருவிகள்.

பள்ளி சென்று பாடம் படித்து
பாங்காய் நின்று பாட்டும் பாடி
அள்ளி அந்த அழகை நாளும்
ஆசையாக உண்ணும் வேளை

எமக்கு வந்த ஆபத்ததை
என்னவென்று கூறிடுவோம்
வந்து சேர்ந்தான் போரரக்கன்
எம்மவரை விரட்டித் தள்ள

அருமை அப்பா வாங்கித்தந்த
அழகுப் பொம்மை தானும் போச்சு

ஆசை மாமா வாங்கித் தந்த
யப்பான் பொம்மை கூடப் போச்சு

சொந்த மண்ணை வேண்டாமென்று
கையசைத்துக் காட்டும் வேளை
முற்றத்து மாந்தளிர்கள் கூட
கையசைக்க மறுத்தனவே

அகதியென்ற பேரெடுத்து
அற்புதமாய்க் குடிசை வைத்து
வந்த மண்ணில் வாழும் நாங்கள்
சொந்த மண்ணைக் காண்பதெப்போ?

*பா. சின்னையா,*
*மானிப்பாய் வீதி.*

## பொது அறிவு

- செந்நிறக் கோள் எது?
  **செவ்வாய்**
- துவிச்சக்கர வண்டியை கண்டு பிடித்தவர் யார்?
  **மக்மிலன்**
- உலகில் மிகப் பெரிய வெப்ப பாலைவனம் எது?
  **சகாரா (ஆபிரிக்கா)**
- உப்பிலிருந்து பெறப்படும் இரசாயனப் பொருள் எது?
  **குளோரின், எரிசோடா**
- நாக்கினால் வியர்வையை வெளியேற்றும் பிராணி எது?
  **நாய்**

*ச.ரிசிகேசனி,*
*சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.*


**கோபம் ஒரு காட்டுத்தீ . அதனைத் தணியாதோர் அத்தீயால் அழிந்து விடுகின்றனர்.**

## சென்றவாரக் கணிதப் புதிருக்கான விடைகள்

$1 + 2 + 3 = 6$ $1 \times 2 \times 3 = 6$

## இவ்வார விவேகப் புதிர்

10 தொடக்கம் 18 வரையான எண்களை சதுரம் ஒன்றிலுள்ள ஒன்பது கூடுகளிலும் ஒரு எண்ணை ஒரு முறை பயன்படுத்தி எப்பக்கத்தாலும் கூட்டினாலும் ஒரே விடை வரவேண்டும். அவ் விடையைக் கண்டு பிடியுங்கள். கண்டு பிடிக்க முடியன்று பாருங்கள். அல்லது மறு இதழ் வரும் வரை காத்திருங்கள்.



நா.மகேந்திரலிங்கம்.

## விடுகதைகள்

❖ கறுப்புத் தொப்பி போட்ட வெள்ளை மனிதன் அவன் யார்?
*தீக்குச்சி*

❖ இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு, பகல் விழித்திருக்கும் அது என்ன?
*கடிகாரம்*

❖ இலையுண்டு கிளையில்லை பூ உண்டு காயில்லை அது என்ன?
*கரும்பு*

❖ முக்காடு போட்டால் மூலையில் இருப்பான் காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடுவான் அவன் யார்?
*பேனா*

❖ ஆயிரம் பேர் கூடி அமைத்தனர் மண்டபம். ஒருவன் கை பட்டு உடைந்ததாம் மண்டபம் அது என்ன?
*தேன் கூடு*

*லோ.அருணா,*
*யா. வல்லை மகளிர் மகா வித்தியாலயம்.*

## அறிந்து கொள்ளுங்கள்

*United Nation Organization*
*ஐக்கிய நாடுகள் சபை*

*International Committee of the Red Cross*
*சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்*

*South Asian Association for Regional Cooperation*
*தெற்காசிய பிராந்திய நாடுகளுக்கான ஒத்துழைப்புச் சங்கம்*

*Asian Development Bank*
*ஆசிய அபிவிருத்தி வங்கி*

*World Health Organization*
*உலக சுகாதார ஸ்தாபனம்*

*International Bank for Recon struction and Development*
*உலக வங்கி*

ம.கோகுலவாசன்.

## வருமுன் காப்போம்...!

ஒரு காட்டில் கட்டுப்பன்றி ஒன்று தனது கொம்பை மரத் தின் மீது தேய்த்துக் கூர்மை யாக்கிக் கொண்டிருந்தது.

அந்த வழியாக ஒரு குள்ள நரி வந்து கொண் டிருந்தது. காட்டுப் பன்றி தனது கொம்மைக் கூர்மை யாக்கும் முயற்சியில் ஈடு பட்டுக் கொண்டிருந்த செயல் அதற்கு ஆச்சரியத்தையளித் தது.

''நண்பா! என்ன வேலை செய்து கொண்டிருக்கிறாய்?'' என்று காட்டுப்பன்றியை வின வியது குள்ளநரி.

''எதிரிகள் குறுக்கிடும் போது அவர்களைக் குத்திக் குடலைச் சரிப்பதற்காக என் னுடைய கொம்புகளைத் தீட்டிக் கொண்டிருக்கிறேன்'' என்று காட்டுப் பன்றி பதில் கூறியது.

குள்ளநரி சிரித்துக் கொண்டு ''இப்போது தான் உன் முன்




எந்த எதிரியும் இல்லையே! நீ எதற்காக வேலையற்று உனது கொம்பைத் தீட்டிக் கொண்டிருக் கிறாய்'' என்று கேட்டது.

''எம்மைப் போன்றவர்களுக் கெல்லாம் எதிரிகள் எப்போது எங்கே எந்நேரம் வந்து குறுக் கிடுவான் என்று சொல்ல முடி யாது. நாம் சற்று அயர்ந் திருக்கும் போது எந்த நேரத் திலும் எதிரி எம்மீது பாயக் கூடும். அதனால் எப்போதுமே நாம் தயார் நிலையில் இருக்க வேண்டியது அவசியம்'' என்றது காட்டுப்பன்றி.

குள்ளநரியும் வருமுன் காக்கும் காட்டுப் பன்றியின் முன் யோசனையையும், அதன் அறிவையும் பாராட்டிச் சென்றது.

**சிறுவர்களே! கதையைப் படித்தீர்களா? நீங்களும் எந்த விடயமானாலும் சிந்தித்து முன்யோசனையுடன் செயற் படுங்கள். திட்டமிட்டுச் செய்யும் செயல்கள் எப்போதும் உங் களிற்கு வெற்றியையே தரும்.**

*தொகுப்பு:- சுஜா*

## பகுத்தறிவு

**புத்தரும், மகாவீரரும், இராமலிங்கரும், சித்தர்களும் ஆரம்பித்த பணியை முழுமையடையச் செய்த மாபெரும் சாதனை பெரியார் ராமசாமியினுடையது. மூடத்தனத்தின் முடைநாற்றம் வீசும் காடு மணக்க வந்த கற்பூரப் பெட்டகம் அவர். பெரியாரின் பெரிய பணி சுயமரியாதை இயக்கத்தைத் தமிழகத்திற்கு அவர் அளித்துள்ளது. கால வெள்ளத்தால் மறையாதது அவருடைய தொண்டு. மானிட இனத்தல் மண்டி விட்ட தூறு வாரும் பணியில் தங்களை அப்பணித்த இங்கர்சால், புரூனோ, வால்டேரின் பட்டியலில் பெரியாருக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு.**

*நீர்வை மணி.*

## சிந்தனைத் துளிகள்

✡ மாணவரிடையே கற்கும் ஆர் வத்தைத் தூண்டாமல் கற்பித் தலைத் தொடரும் ஆசிரியர் தீய்க்காத இரும்பினை அடிக்கும் ஒரு தொழிலாளிக்கு ஒப்பாவார்.

✡ '' நான் வாழுகிறேன்'' என்பதை உறுதி செய்த என் தந்தைக்கு நான் கடமைப்பட்டுள்ளேன். எனினும் '' நான் நன்றாக வாழ் கிறேன்'' என்பதற்காக வழி காட்டிய ஆசிரியருக்கு அதனிலும் மேலாகக் கடமைப்பட்டுள்ளேன்.

தெ.திலீவ்,
சித்தன்கேணி.

# வீ.எம்.கே.ஜுவலர்ஸின்

**இவரைத் தெரியுமா — பரிசுப் போட்டி இல:— 21**

**படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?**

இவரைத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-



'இவரைத் தெரியுமா போட்டி இல:- 21'
'வீ.எம்.கே. ஜுவலர்ஸ்',
இல. 305,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


குறிப்பு:-
சரியான விடை எழுதும் மூன்று போட்டியாளர்கள் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும். பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா பரிசுப் போட்டி இல:— 21**

படத்தில் உள்ளவரின் பெயர் :-..............................
அனுப்புபவரின் முழுப் பெயர் :-..............................
அனுப்புபவரின் முகவரி :-..............................
..............................
..............................

**இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல 20 சரியான விடை**





**ஜவஹர்லால் நேரு**

இவரைத்தெரியுமா பரிசுப்போட்டி இல. 20 இல் பங்குபற்றி பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:

முதற்பரிசு :— யோ.சரண்யா
வேளாந் தோப்பு,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

இரண்டாம்பரிசு:— உ.சங்கீதா
கீரிமலை வீதி,
சித்தங்கேணி.

மூன்றாம்பரிசு:— கோ.இராசேந்திரம்
61, பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.

சரியான விடைகளை எழுதிப் பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:-
*ந.சிந்துஜன் யாழ்ப்பாணம், ச.பாரதி அல்வாய், சா.பிரியங்கா கொழும்புத்துறை வீதி, வ.ராதா கச்சேரி நல்லூர் வீதி, ஜ.சசிகலா யாழ்ப்பாணம், வி.செல்வநாயகம் சிறுப்பிட்டி, ச.பாரதி வேலணை, அ.மீனலோசினி சாவகச்சேரி, வி.ராதிகா நாவாந்துறை, க.தயாளன் சாவகச்சேரி.*

## யோகம் பற்றி அறிந்து கொள்வோம்

### ராஜயோகம்

நமது சரீரத்தில் மனதானது சிறிதளவு கூடப் புரிந்து கொள்ள முடியாத அவயவம். சுகத்திற்கும், வலிக்கும் அது தான் காரணம். இவ்வகையான அறிவு இருந்தும் தத்துவஞானிகளும், தீர்க்க தரிசிகளும் அதைக் கட்டுப்படுத்தத் தவறி விட்டார்கள். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் மனது மேற்பார்வை செய்கின்றது.

இந்த மனதைக் கட்டுப்படுத்துவதற்கு உண்டான வழியை முற் காலத்தில் உள்ள ரிஷிகள் வகுத்திருக்கிறார்கள். ஆனந்தமாக வாழ்வைக் கழிக்க வேண்டுமானால் குறைந்த அளவில் ஆவல்களும், தேவைகளும் இருக்க வேண்டும். கீழ் நாட்டு தத்துவஞானிகளும் பெரியோர்களும் அதிக காலம் முதலே சுகத்திற்கும், துக்கத்திற்கும் மனதே காரணம் என்று சொல்லி வந்திருக்கிறார்கள். யார் ஒருவன்தன் மனதைக் கட்டுப்படுத்துகிறானோ அவனே சுகமும், துக்கமும் அடையாத இடத்திற்குப் போகிறான் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

மனதைக் கட்டுப்படுத்துவது எப்படி? இதை யோகாசனத்தின் மூலம் தான் அடையலாம் என்று நம்புகின்றோம். சாந்தியும், விடுதலையும் இந்தப் பூமிக்கு அப்பால் ஒரு இடத்திலும் இல்லை. அதை இங்கே தான் மனதைச் சரியான படி கட்டுப்படுத்திப் பெற வேண்டும்.


தியானஞ் செய்வது அல்லது மனதைக் கட்டுப்டுத்துவது என்பது ஒரு கடினமான காரியம். அப்படி இருந்த போதிலும் அடிக்கடி பழக்கத்துடனும் வைராக்கிய மனதோடு அதை அடையலாம்.

(தொடரும்)








வே.மயூரன்.
வயது - 17
உடுத்துறை வடக்கு,
தாளையடி.
கவிதை, பத்திரிகை, வானொலி.



ஜெ.வசந்தகுமார்.
வயது - 19
ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
T.V, பத்திரிகை.



அன்ரன் இதயகுமார்.
வயது - 17
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
T.V, வானொலி.



பி.ராஜ்குமார்.
வயது - 18
இல.5,அலைகரை வீதி,
இறம்பைக் குளம், வவுனியா.
விளையாட்டு, T.V, பத்திரிகை.



ரா.தீபன்.
வயது - 16
30/8 குடியேற்றத்திட்டம்
கட்டுடை, மானிப்பாய்.
T.Vபார்த்தல்,கிரிக்கெட்,
புத்தகம் வாசித்தல்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 22

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | 3 |
| | ■ | ■ | | ■ | ■ | |
| 4 | | | | ■ | 5 | |
| | ■ | ■ | ■ | 6 | | ■ |
| | ■ | 7 | 8 | ■ | ■ | 9 |
| ■ | | ■ | | ■ | 10 | |
| ■ | 11 | | | ■ | | ■ |

*அனுப்ப வேண்டிய முகவரி*

**குறுக்கெழுத்துப் போட்டி இல -22**
*'சங்குநாதம்',*
*இல:- 15, வெள்ளாந்தெரு,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

பெயர் :- ..............................
விலாசம் :- ..............................
..............................
..............................

..............✂ இங்கே வெட்டுக..............................

### இடமிருந்து வலம்

(1) நிகழாதது நிகழ்வது போன்ற உணர்வு (4) ஆசி (5) தானியங்களிலொன்று (6) செறிவற்றது (7) ரெயில்வேச்சந்தி (10) திங்கள்களிலொன்று (11) மாடுகளுக்கு வரும் ஒருவகை நோய்

### மேலிருந்து கீழ்

(1) மணமகள் (2) பைத்தியம் (3) இது உள்ளவர்கள் வாழ்வில் முன்னேறுவர் (5) சாந்தம் (8) தன் இனத்தையே இதுகெடுக்கும் ஓர் ஆயுதம் (9) சோம்பல் (10) கடல் (11) வீட்டுப் பறவை(கீழிலிருந்து மேல்)

**குறுக்கெழுத்துப்போட்டி இல.21 இன் விடைகள்**
**இடமிருந்து வலம்**
1. சித்திரம் 4. லஞ்சம் 6. சுதி 8. பாயாசம் 9. அரிசி 10. புலால்

**மேலிருந்து கீழ்**
1. சிலந்தி 2. ரம்பை 3. சதி 5. சந்நியாசி 6. சுழல் 7. கரும்பு 9. அணை

**கீழிருந்து மேல்**
11. பலா 12. கல்லறை

**பரிசு பெற்றோர் பெயர் விபரம்**

முதற் பரிசு :~ பே.தினேஸ்குமார்
மே/பா த.சின்னத்துரை, ஈஸ்வராவாசம்,
கற்புலம் வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

இரண்டாம் பரிசு :~ ப.ஸர்மிலன்
புகையிரத வீதி அருகாமை,
கோட்டைக்காடு, மல்லாகம்.

மூன்றாம் பரிசு :~ க. சுஜாத்தா
குடமியன்,
வரணி.

**போட்டியில் கலந்து கொண்டு பாராட்டுப் பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்.**
*யோ.சுஹன்பாபு நல்லூர், ந.மீரா அன்னசத்திர லேன், சா.துலக்ஷி சுண்டிக்குளி, நா.சரண்யா நாவாந்துறை தெற்கு, M.J.F. சேவியர் ஆனைக்கோட்டை, தே.தர்ஷினி நாவலர்வீதி, பா.செந்தூர்செல்வன் செட்டித்தெரு, அ.சுகந்தன் பிறவுண் வீதி, அ.ஜக்குலின் அச்சுவேலி, வி.செல்வநாயகம் - திருநெல்வேலி தெற்கு.*

குறிப்பு:~
குறுக்கெழுத்துப் போட்டிக்கு விடைகள் அனுப்பும் போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "குறுக்கெழுத்துப் போட்டி இல.22" எனத் தவறாது குறிப்பிடவும். அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி 27-07-2002. பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள் தமக்கான பரிசுகளை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

| | |
|---|---|
| முதற் பரிசு:- | 150.00 |
| இரண்டாம் பரிசு:- | 100.00 |
| மூன்றாம் பரிசு:- | 50.00 |






துள்ளுவதோ இளமை
ஷெரீன்

இயக்குநர் பி. வாசுவிடம் இணை இயக்குநராக பணியாற்றிய மதி... ரித்திக் என்ற பெயர் மாற்றத்தோடு... துவக்கியிருக்கும் படம் 'காதலித்தால் ஆனந்தம்'. இதன் பூஜை 10.7.2002 அன்று சென்னை வடபழனி கார்த்திக் கார்டனில் ஆரம்பித்தது. வழக்கமான சினிமா பூஜையிலிருந்து... சற்று வித்தியாசப்பட்டு... வந்திருந்த வி.ஐ.பி.க்களில் பெரும்பாலோர் மருத்துவர்களாக இருந்தது. ஆச்சரியமளித்தது. பத்துமணிக்கு பூஜை துவங்கியது. வந்திருந்த மருத்துவ நிபுணர்களோடு இப்ராஹிம் ராவுத்தர்... பி. வாசு... இருவர் மட்டுமே சினிமாவை சார்ந்தவர்கள். காஞ்சிபுரத்தையடுத்த கலவை சச்சிதானந்த சுவாமிஜி அவர்கள் வருகை தந்து விளக்கு ஏற்றி... பூஜையை ஆனந்தமாக்கினார்.

பூஜைக்காகத் திருப்பூரிலிருந்து வருகை தந்த எஸ். சிவக்குமார்... (பின்டெக்ஸ் உரிமையாளர்) அவர்களை வரவேற்று அழைத்து வந்தார் தயாரிப்பு நிர்வாகி ஆர்.எம். பாலகிருஷ்ணா. "இதை ஒரு வித்யாசமான காதல் கதையாகச் சொல்லப் போகிறேன்" என்று ஆரம்பித்த இயக்குநர் ரித்திக், இதன் படபிடிப்பை ஊட்டி, கொடைக்கானல் மூணாறு பகுதியில் நடத்த இருப்பதாகச் சொன்னார். நடிகர்கள் குணால், லிவிங்ஸ்டன், வடிவேலு, வையாபுரி, மயில்சாமி ஆகியோர் கலந்து கொண்டனர். புதிய நாயகி... அஞ்சனா... பளீர் என்று வந்திருந்து பூஜைக்கு வந்திருந்த அத்தனை பேரின் கண்களையும் கொத்திப் பிடுங்கினார்.




பூஜை நிகழ்ச்சி முடிந்ததுமே ரிகார்டிங் தியேட்டருக்குள் பா. விஜய் எழுதிய பாடலை இசையமைப்பாளர் பரணி வித்யாசமான இசையில் பதிவு செய்து கொண்டிருந்தார். படத்தின் தயாரிப்பாளர்கள்... இரண்டு பெண்கள்! ஜே.எல். சத்யா, பி. சாதனா என்கிற இந்த இருவர்தான். மிக துணிச்சலாக 'காதலித்தால் ஆனந்தம்' என்று சொல்லி வருகிறார்கள். ரசிகர்களுக்கு ஆனந்த மளிக்கும் விருந்தாக அமைய வாழ்த்துக்கள்!

## கே. பாலசந்தர் வழங்கும் புதிய படம் விக்ரம் - த்ரிஷா நடிக்கும் சாமி



கே. பாலச்சந்தரின் கவிதாலயா வழங்க, ஆதிபகவன் பிலிம்ஸ் ஸ்ரீராஜகாளியம்மன், ஸ்ரீராஜராஜேஸ்வரி, ஆல்பம், ஞாபகங்கள் தாலாட்டும் ஆகிய படங்களை அடுத்து, ஒரு புதிய படம் தயாரிக்கிறது.

இந்த படத்திற்கு சாமி என்று பெயர் சூட்டப்பட்டு இருக்கிறது. இதில், விக்ரம் கதாநாயகனாக நடிக்கிறார். விக்ரம் ஜோடியாக புதுமுகம் த்ரிஷா நடிக்கிறார். மற்ற நடிகர் – நடிகைகள் தேர்வு நடைபெறுகிறது.

படப்பிடிப்பு செப்டம்பர் மாதம் தொடங்கி, ஒரே கட்டத்தில் முடிவடைகிறது. டிசம்பர் மாதம் படம் திரைக்கு வரும்.

பொழுதுபோக்கு அம்சங்கள் கலந்த குடும்ப கதைஇது. விக்ரம் ஸ்டைலில் நகைச்சுவை, குடும்ப பாசம், சண்டை காட்சிகள் நிறைந்தது. படப்பிடிப்பு திருச்சி, காரைக்குடி, நெல்லை ஆகிய இடங்களில் நடைபெற இருக்கிறது. கதை, திரைக்கதை, வசனம் எழுதி பிரஷாந்தை வைத்து 'தமிழ்' படத்தை இயக்கிய ஹரி இயக்கும் இரண்டாவது படம் இது! ஒளிப்பதிவு – பிரியன் இசை – ஹாரீஸ் ஜெயராஜ் தயாரிப்பு – புஷ்பா கந்தசாமி

## நித்தியதாஸ் அறிமுகமாகும் பொன்மேகலை




ஜெயபார்வதி பிலிம்ஸ் தயாரிக்கும் பிரமாண்டமான படம் 'பொன்மேகலை'. அரசுப் பணியிலிருந்து தனது தந்தையின் பணியை வாரிசு திட்டத்தின் கீழ் பெறுவதற்குப் போராடும் ஒரு இளம் பெண் கதையை மையமாக வைத்து திரில், சென்டிமெண்ட் கலந்து கதை, திரைக்கதை, வசனம் எழுதி

இந்தப் படத்தை இயக்குகிறார் சக்திசித்ரன் இவர் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றை தொலைக்காட்சி தொடராக இயக்கி வருகிறார்.

இளையராஜா இசை அமைக்க, கே.வி. சுரேஷ் ஒளிப்பதிவு செய்கிறார், எம்.வி. செல்வம், சியாமளா பாலா நடனப் பயிற்சி அளிக்கின்றனர். சூப்பர் சுப்பராயன் சண்டைப் பயிற்சி அளிக்க, ஜெயபார்வதி கணேஷன் தயாரிக்கிறார்.

இதில் பொன்மேகலையாக மலையாள நடிகை நித்யதாஸ் அறிமுகமாக, கதாநாயகனாக 'துள்ளுவதோ இளமை' புகழ் அபிநய் நடிக்கிறார். மற்றும் பாதிரியாராக கார்வண்ணன், போலீஸாக சரண்ராஜ் சோனா, சாருஹாசன், நிர்மல், அனுஷா. டி. எஸ். ராகவேந்தர், 'கடவுள்' கண்ணன், அனுமோகன், ஹரீஸ் ஒரி, ரோஷன்குமார், கனகதுர்கா, அனுஷா, கோட்டை பெருமாள், ரஜினி ராஜேஷ், சண்முகராஜா நடிக்கின்றனர்.

## ஆஸ்கார் பிலிம்சின் ரமணா படத்தில் விஜயகாந் ஜோடி சிம்ரன்



விஜயகாந்த் நடிக்க, ஆஸ்கார் பிலிம்ஸ் தயாரிக்கும் 'ரமணா' சமுதாய விழிப் புணர்வை தூண்டும் படம்.

இதில் விஜயகாந்த் கல்லூரி பேராசிரியராக நடிக்கிறார். இவர் கல்லூரி பேராசிரியர் வேடம் ஏற்பது இதுவே முதல் முறை. விவேகானந்தரும், சுபாஷ்சந்திர போசும் கலந்த வேடம். மாணவர்கள் மத்தியில் மிகப்பெரிய புரட்சியை ஏற்ப டுத்தும் வகையில் கதை அமைக்கப் பட்டு இருக்கிறது.

இதில், விஜயகாந்த ஜோடியாக சிம்ரன் நடிக்கிறார். இன்னொரு கதாநாயகி, ஆஷிமா.

படப்பிடிப்பு சமீபத்தில் சென்னை பெசன்ட் நகர் பீச்சில் நடைபெற்றது. விஜயகாந்த் கடற்கரையில் நடந்து வந்து கொண்டிருக்கும் போது, எதிரில் கிரிக்கெட் பேட் மற்றும் ஸ்டம்புகளுடன் மகாநதி சங்கரும், அவருடைய கூட்டாளிகளும் வந்து கொண்டிருந்தார்கள்.

அவர்களில் மகாநதி சங்கர் ஏற்கனவே விஜயகாந்திடம் உதை வாங்கியவர். அதனால் விஜயகாந்தை பார்த்து பயப்படுகிறார். ஆனால் அவருடைய கூட்டாளிகள், 'நாம் 7 பேர் இருக்கிறோம். ஒரு ஆளை அடிக்க முடியாதா ?" என்று கேட்கிறார்கள்.

"அய்யய்யோ, அந்த ஆள் இருபத்தேழு ஆட்களை ஒரே நேரத்தில் அடித்தவர். கடவுள் நமக்கெல்லாம் நடப்பதற்குத்தான் கால்களை கொடுத்திருக்கிறார். ஆனால் அவருக்கு உதைக்கிறதக்குன்னே கால்களை கொடுத்திருக்கிறார்" எனறு மகாநதி சங்கர் சொல்கிறார்.

இதற்குள் விஜயகாந்த் அருகில் வந்து, "அது என்ன கையில் ?" என்று கேட்கிறார்.

"சும்மா, விளையாட்டு சாமான்கள் சார்... டி.வி.ல கூட காட்டுவாங்களே, அந்தவிளையாட்டு விளையாடப்போகிறோம்..." என்கிறார் மகாநதி சங்கர்.

இப்படி ஒரு தமாஷான காட்சியை எம்.எஸ். பிரபு ஒளிப்பதிவில் படமாக்கினார் டைரக்டர் முருகதாஸ். இவர் தீனா படத்தை டைரக்டு செய்தவர்.

ரமணா படத்தை ஆகஸ்டு மாதம் திரைக்கு கொண்டு வர முடிவு செய்து இருக்கிறார் தயாரிப்பாளர் வி. ரவிச்சந்திரன்.

## Cine Magic

ரஜனி
நடிக்கும்
பாபா படத்தில்
வில்லனாக
நடிக்கும் ரகுவரன்
புலவரின் கற்பனையில்
பாபாவாக.....
ஹி.... ஹி.... ஹி.....







இப் பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம். எனும் விலாசத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2002 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.